விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
(C-7348)
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஆவணி 09 திங்கட்கிழமை (26.08.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 250

## வடக்கு, கிழக்கு முழுவதும் அநுரகுமாரவின் சுவரொட்டிகள்

(யாழ்ப்பாணம்)

ஜேவிபியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசநாயக்கவின் பிரசார சுவரொட்டிகள் வடக்கு, கிழக்கு முழுவதும் பரவலாக ஒட்டப்பட்டு வருகிறது.



23

## கோத்தபாய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்தால் புதிய அரசமைப்பை உருவாக்குவோம்

மகிந்த ராஜபக்ஷ கூளுரை

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆட்சிக்கு வந்தால் புதிய அரசமைப்பை உருவாக்குவோம் என கட்சியின் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஆங்கிலப் பத்திரிகைக்கு வழங்கிய சிறிய பேட்டியில் அவர் இதனை தெரி



23

## காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள்

# கோத்தா ஜனாதிபதியாக வருவதை விரும்பவில்லை

## ஓ.எம்.பி.பிரதிநிதிகள் தெரிவிப்பு

(அம்பாறை)

**கோத்தபாய ராஜபக்ஷ ஜனாதிபதியாக வருவதை காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் உண்மையில் விரும்பவில்லை. எமது உறவுகள் தற்போது வரை வீதியில் அலைந்து திரிவதற்கும் அவரே காரணம் என அம்பாறை, மட்டக்களப்பு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் பிரதிநிதிகள் குறிப்பிட்டுள்ளனர்.**

கல்முனையில் நேற்று ஏற்பாடு செய்த ஊடக சந்திப்பு ஒன்றில் எதிர்கால ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் நியமனம் குறித்து ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

மேலும் கருத்து தெரிவிக்கையில்,

எங்களது உறவுகளை தொலைத்தவர்களில் மிக முக்கியமானவர்கள் பட்டியலில் இருப்பவர் தற்போதைய ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள கோத்தபாய ராஜபக்ஷ. இவரால் தான் இன்று வரை நாங்கள் தெருத்தெருவாய் அலைந்து திரிகின்றோம். அவரே இதற்கு முக்கிய சாட்சியம் கூற வேண்டும்.

ஜனாதிபதியாக இவர் வந்தால் மீண்டும் எமது உறவுகள் காணாமலாக்கப்படலாம். மீண்டும் ஒரு இன அழிப்பு உருவாகலாம்.

அது மட்டுமன்றி எந்த அரசாங்கமும் பதவிக்கு வந்தால் யுத்தக் குற்றவாளிகள் என கூறப்படும் நபர்களை உயர்பதவிகளை வழங்கி அவர்களை அக்குற்றத்தில் இருந்து காப்பாற்ற நடவடிக்கை எடுப்பதாகவே எமக்கு ஐயப்பாடும் இருக்கிறது.

23

### பயங்கரவாத

## உறுப்பினர் ஒருவர் கைது

(கொழும்பு)

தடைசெய்யப்பட்டுள்ள தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் உறுப்பினர் ஒருவர்

23

### சாவகச்சேரி பகுதியில்

## மயங்கி விழுந்தவர் உயிரிழப்பு

(கொடிகாமம்)

நெஞ்சுவலியால் மயங்கி விழுந்த இரண்டு பிள்ளைகளின் தந்தை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும்

23

## இராணுவத்தின் மனிதாபிமானத்தை தமிழர்கள் அறிவர்

சவேந்திர சில்வா

(கொழும்பு)

இராணுவத்தினர் மேற்கொண்ட மனிதாபிமான பணிகளை வடக்கிலுள்ள மக்கள் நன்கு அறிவார்கள். எவர் என்ன குற்றச்சாட்டை இராணுவம் மீது சுமத்தினாலும், உண்மையை வடக்கு

23

### சுதந்திரக் கட்சியின்

## மத்திய குழுக் கூட்டம் இன்று

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முன்னர், கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தைக் கூட்டுவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது.

23

## இரு பிள்ளைகளை கொலை செய்து தானும் தற்கொலை செய்த தந்தை

புத்தளம் பகுதியில் பெரும் துயரம்



(புத்தளம்)

புத்தளத்தில் இரு பிள்ளைகளை நஞ்சு கொடுத்து கொலை செய்த தந்தையொருவர் தானும் தற்கொலை செய்துள்ளார்.

புத்தளம் - உடப்புவ பள்ளிவாசல் பிரதேசத்தில்

23

### தெரிவுக்குழுவில் முன்னிலையாகுமாறு

## மைத்திரிபால சிறிசேனவுக்கு எழுத்துபூர்வமாக அழைப்பு

(கொழும்பு)

ஈஸ்டர் தாக்குதல்கள் குறித்து ஆராயும் பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் முன்னிலையாகுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்த அறிவிப்பு எழுத்துபூர்வமாக வழங்கப்பட்டுள்ளதாக பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரசிறி தெரிவித்துள்ளார்.

இதற்கான திகதி

23

## முச்சக்கரவண்டி விபத்தில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

வவுனியாவில் சோகம்

(வவுனியா)

வவுனியா செட்டிகுளம் பகுதியில் நேற்று இரவு 8 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் இரண்டு பேர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த விபத்து தொடர்பாக மேலும் தெரியவருகையில், செட்டிகுளத்திலிருந்து மெனிக்பாம் நோக்கி சென்று கொண்டிருந்த முச்சக்கரவண்டி கல்லாறு பாலத்திற்கருகில் சென்று

23

### மோடியைச் சந்திக்க

## இந்தியா பயணமாகிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

(கொழும்பு)

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக இந்திய அரசுடன் கலந்துரையாடல்களை நடத்துவதற்காக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் குழு அடுத்து வரும் வாரங்களில் புதுடில்லிக்குப் பயணமாகவுள்ளது.

கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இந்த

23

## கடந்த அரசின் தவறான தீர்மானத்தால் நாட்டுக்கு நெருக்கடி

வஜிர குற்றச்சாட்டு

(கொழும்பு)

தவறான அரசியல் தீர்மானங்கள் மற்றும் தவறான பொருளாதார அபிவிருத்தி மையங்கள் நிர்மாணிப்பு ஆகியவற்றை கடந்த அரசாங்கம் தமது தேவைக்காக நிறைவேற்றியமையின் விளைவினையே நாடு

23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இணைப்பாளராக திஸ்ஸ விதாரண மகிந்தவால் நியமிப்பு

(கொழும்பு)

தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பான இணைப்பாளராக பேராசிரியர் திஸ்ஸ விதாரணவை எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ நியமித்துள்ளார்.

அண்மையில் கூட்டு எதிரணிக்கும், சில தமிழ்க் கட்சிகளின் தலைவர்களுக்கும் இடையில் நடந்த சந்திப்பின் போதே, தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பான இணைப்பாளராக, பேராசிரியர் திஸ்ஸ விதாரணவை நியமிப்பதாக மகிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.



மகிந்த ராஜபக்ச ஆட்சியில் இருந்த போது இனப்பிரச்சினைத் தீர்வுக்காக அமைக்கப்பட்ட அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் குழுவுக்கு பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமை தாங்கியிருந்தார்.

அந்தக் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட தீர்வு அறிக்கை முன்னேற்றகரமான ஒன்றாக வரவேற்கப்பட்ட போதும், மகிந்த ராஜபக்ஷ அதனை நடைமுறைப்படுத்த இணங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையிலேயே, தமிழ் மக்களினதும், தமிழ்க்கட்சிகளினதும் ஆதரவைத் திரட்டுவதற்காக, பேராசிரியர் திஸ்ஸ விதாரணவை இணைப்பாளராக மகிந்த ராஜபக்ஷ நியமித்துள்ளார்.

எதிர்கால அரசின் கொள்கை அறிக்கையில் இடம்பெற வேண்டிய அம்சங்கள் தொடர்பாக அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறும் திஸ்ஸ விதாரண கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

இதற்கமைய, பேராசிரியர் திஸ்ஸ விதாரண, வடக்கு, கிழக்கு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல்களை நடத்தி வருகிறார்.

வன்னி, கிளிநொச்சி, யாழ்ப்பாணத்தில் அவர் கடந்த தினங்களில் நடத்திவரும் கலந்துரையாடல்கள் இன்று வரை தொடரவுள்ளது.

ஏற்கெனவே அவர், சி.வி.விக்னேஸ்வரன், ஆனந்தசங்கரி, சந்திரகுமார், பிரபா கணேசன், வரதராஜப்பெருமாள், உள்ளிட்டவர்களைச் சந்தித்துள்ளார். இன்று பல அமைப்புகளையும் அவர் சந்திக்கவுள்ளார்.

அத்துடன் கிழக்கிலும் முஸ்லிம் மற்றும் தமிழ் பிரதிநிதிகளையும் அவர் சந்தித்துப் பேசவுள்ளார் என தெரியவருகிறது. (3)


## மரண அறிவித்தல்

### திருமதி மனோகரன் திலகவதி

**தோற்றம் – 05.08.1947 மறைவு – 25.08.2019**



வேலணையைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும், குரும்பைகட்டி - புலோலியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி மனோகரன் திலகவதி நேற்று 25.08.2019 காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அமிர்தலிங்கம் - அன்னம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான தேவநாயகம், இராசவதி மற்றும் இரத்தினவதி (லண்டன்), தனபாலன் (லண்டன்), ஆகியோரின் சகோதரியும், மனோகரனின் அன்பு மனைவியும், கௌரி, Dr.லக்ஸ்மன் ஆகியோரின் அன்புத்தாயாரும், கரிகரன் (கட்டிட கலைஞர் - கொழும்பு), Dr.யனோஜினி ஆகியோரின் மாமியாரும், அபூர்வா, ஹரிதாமோதர், சிறிசண்முகன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், சீதாலட்சுமி, சோமசேகரகுருக்கள், அமரர் தனலட்சுமி ஆகியோரின் மைத்துனியும், தாரணி (லண்டன்), றமணன், வினோத் (லண்டன்), றெசான் (லண்டன்) ஆகியோரின் அன்பு பெரியம்மாவும், வாகீசன் (அதிபர்), உருத்திரன் (கிராம அலுவலர் - கொழும்பு), மேனகா (கனடா), ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரதானவீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வைற்கவுஸ் மலர்ச்சாலையில் இன்று (26.08.2019) திங்கட்கிழமை காலை 8.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் காலை 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(001)

குரும்பைகட்டி, புலோலி. 077 196 8666 தகவல் – குடும்பத்தினர்


# ஐந்து இலங்கையர் இந்தியாவில் கைது

(கொழும்பு)

இலங்கையில் இருந்து கடல் வழியாக இந்தியாவுக்கு சென்றதாக கிடைத்த தகவலை அடுத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் சந்தேகத்திற்குரிய 5 பேரை இந்திய பாதுகாப்பு தரப்பினர் கைது செய்துள்ளனர்.

கடந்த இரண்டு நாட்களில் நடத்தப்பட்ட தேடுதலில் பெண்ணொருவர் உட்பட 5 பேர் விசாரணைகளுக்காக கேரளா மற்றும் கோயம்புத்தூர் பிரதேசங்களில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தான் நாட்டில் செயற்படும் லக்சர் இ தொய்பா அமைப்பை சேர்ந்தவர்கள் எனக் கூறப்படும் இலங்கை முஸ்லிம் 5 பேரும் ஒரு பாகிஸ்தானியரும் இலங்கையில் இருந்து கடல் வழியாக இந்தியாவுக்கு சென்றுள்ளதாக அந்நாட்டு புலனாய்வுப் பிரிவினர் அண்மையில் எச்சரித்திருந்தனர்.

இதன் காரணமாக கேரளா மற்றும் தமிழகம் உட்பட சில மாநிலங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு தேடுதல்களை நடத்த இந்திய பாதுகாப்பு தரப்பினர் நடவடிக்கை எடுத்திருந்தனர். (3)


## மரண அறிவித்தல்



### திருமதி நடராசா சரஸ்வதி

கந்தமுருகேசனார் வீதி, புலோலியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி நடராசா சரஸ்வதி 24.08.2019 சனிக்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பரமானந்தம் - நாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கனகசேகரம் நடராசாவின் பாசமிகு மனைவியும் கனகசேகரம் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சுந்தரலக்குமி, பேரானந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கண்ணன், விஜயன், சுமதி, கெங்கா, காலஞ்சென்ற ஆனந்தன் ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை மயில்வாகனம், திருமதி பார்வதி, திருமதி இராசம்மா, திருமதி கனகம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும், கருணாகரன், நளாயினி, மனமோகன், கௌரி ஆகியோரின் ஆசை மாமியாரும், சிந்து, ஜெயந்தன், பானுஜா, லீனுஜா, காவிஜா, கயல்விழி, பவன், கனிஜா, அயாஸ் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.08.2019) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கந்தமுருகேசனார் வீதி, புலோலி. (C-7375) தகவல் – குடும்பத்தினர்

## "எதிரிகளை வீழ்த்த ஒற்றுமையே வலிமையான ஆயுதம்"

# ஐ.தே.க.உறுப்பினர்களின் செயற்பாடுகள் கட்சி மீது தவறான விம்பத்தை ஏற்படுத்தும்

## வேலுகுமார் அறிவுறுத்தல்



(கண்டி)

**கட்சியின் மத்திய செயற்குழுவில் கலந்துரையாடி தீர்மானிக்க வேண்டிய விடயங்களை ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் நடுவீதிக்கு கொண்டுவருவது, கட்சி மீது தவறான விம்பத்தை உருவாக்கிவிடும் என இந்து சமய விவகார அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்தார். அத்தோடு எதிரிகளை வீழ்த்துவதற்கு ஒற்றுமையே வலிமையான ஆயுதம் என்பதை புரிந்துசெயற்பட்டால் மாத்திரமே தேர்தலை வெற்றிகரமாக எதிர்கொள்ள முடியுமென்றும் அவர் தெரிவித்தார்.**

கண்டியில் நேற்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் வேளையில் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் இரு அணிகளாகப் பிரிந்து நின்று சொற்சமரில் ஈடுபட்டு வருகின்றனர்.

புதிய அரசியல் கூட்டணியோ அல்லது ஜனாதிபதி வேட்பாளரோ இன்னும் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படாத நிலையில், இவ்வாறு கருத்து மோதலில் ஈடுபடுவதானது ஏனைய கட்சிகளுக்கே களம் அமைத்துக்கொடுக்கும்.

கட்சியின் மத்திய செயற்குழுவில் கலந்துரையாடி தீர்மானிக்க வேண்டிய விடயங்களை சந்திக்கு கொண்டுவருவது மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தி தவறான விம்பத்தை உருவாக்கி விடும் என்பதையும் புரிந்து செயற்படவேண்டும்.

குறிப்பாக ஒற்றுமையைக் கருதியே ஜனாதிபதி வேட்பாளரை தெரிவுசெய்யும் பொறுப்பை ஐக்கிய தேசியக் கட்சிக்கு வழங்கினோம். எங்களின் இந்த விட்டுக்கொடுப்பை எவரும் பலவீனமாகக் கருதி செயற்படக் கூடாது. கூட்டணி ஜனநாயகத்தை மதிப்பதாலேயே மிகவும் கௌரவமான முறையில் பங்காளிகளாக செயற்பட்டுவருகின்றோம்.

எனவே, கட்சிக்குள் கலந்துரையாடல்களை நடத்தி மக்கள் மனநிலையை அறிந்து, மக்களால் கோரப்படும் வெற்றி வேட்பாளரை களமிறக்கும் தீர்மானத்தை ஐக்கிய தேசியக்கட்சி கூடிய விரைவில் எடுக்கவேண்டும்.

மாறாக தான்தோன்றித்தனமாக, மக்கள் மத்தியில் நம்பிக்கையை இழந்த வேட்பாளர்களை போட்டிக்காக நிறுத்தக்கூடாது. அவ்வாறு நடைபெற்றால் அதற்கு எதிராகவே நாம் செயற்படுவோம். ஜனாதிபதி தேர்தலை எவ்வாறு கையாள வேண்டும் என்பது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஏற்கனவே ஆலோசனைகளை வழங்கியுள்ளோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## "அவசர காலச்சட்டம் நீக்கப்பட்டமை பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாகாது"

### ருவான் விளக்கம்



(தொம்பே)

அவசர காலச் சட்டம் நீக்கப்பட்டமையால் தேசிய பாதுகாப்பிற்கு எவ்வித அச்சுறுத்தலும் ஏற்படாது என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தன தெரிவித்தார்.

அத்துடன் தேசிய பாதுகாப்பு இன்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன், மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளது. முப்படையினரின் ஆலோசனைகளுக்கு அமையவே நடைமுறையில் இருந்த அவசரகால சட்டம் நீக்கப்பட்டுள்ளது என்றும் ருவான் தெரிவித்தார்.

தொம்பே பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு அவர்மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## சு.கவின் தேசிய மாநாட்டிற்கு முன்னர் கூட்டணி விவகாரத்திற்கு தீர்வு-அமரவீர



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய மாநாட்டிற்கு முன்னர் பரந்துபட்ட கூட்டணி குறித்து தீர்க்கமான தீர்மானம் எடுக்கப்படும் என பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

அத்துடன் புதிய அரசாங்கத்தின் அமைச்சரவையின் எண்ணிக்கையை 30 ஆக மட்டுப்படுத்தும் விடயத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படுவதுடன் ஜனாதிபதி, எதிர்க்கட்சி தலைவர் மற்றும் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் ஆகியோரின் சந்திப்பின் பெறுபேறு சுதந்திர கட்சியின் தேசிய மாநாட்டில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் எனவும் தெரிவித்தார்

பரந்துபட்ட கூட்டணி குறித்து நாளை இடம்பெறவுள்ள இரு தரப்பு பேச்சுவார்த்தைகள் குறித்து வினவிய போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## அரசியல் செயற்பாடுகளுக்குத் தடை சாமர மீது டிலான் குற்றச்சாட்டு




(கொழும்பு)

ஊவா மாகாண முதலமைச்சர் சாமர சம்பத் தசாநாயக்க தொடர்ச்சியாக தனது செயற்பாடுகளுக்கு தடைவிதித்து வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா குற்றம் சாட்டினார்.

குறிப்பாக தான் ஒழுங்கு செய்யும் பல கூட்டங்களை ஊவா மாகாண முதலமைச்சர் தனது அரசியல் நடவடிக்கைகளுக்காகவே குழப்புவதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் பதுளையில் இடம்பெற்ற பொதுக்கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு குற்றம்சாட்டினார். (இ-7)

## சர்வதேசத்துடன் இணைந்து இலங்கை தானாக முன்னோக்கிச் செல்வதா? தனித்திருந்து பின்னோக்கிச் செல்வதா?



(தந்திரிமலை)

ஏற்றுமதி பொருளாதாரத்தின் ஊடாக சர்வதேசத்துடன் இணைந்து இலங்கை தானாக முன்னோக்கி செல்வதா? அல்லது தனித்திருந்து பின்னோக்கி செல்வதா? என்ற பிரச்சினையே நிகழ்காலத்தில் தீர்க்கப்பட வேண்டிய முக்கிய பிரச்சினையாக உள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ரஜரட்ட மற்றும் கோட்டை காலப்பகுதிகளில் காணப்பட்டதை போல ஏற்றுமதியின் கேந்திர நிலையமாக இலங்கையை மாற்ற நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

தந்திரிமலையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை தொடர்ந்தும் ஏழ்மை மற்றும் கடன் பிரச்சினை உள்ள நாடாக காணப்படுவதற்கு இடமளிக்க முடியாது என்றும் அந்த நிலையை மாற்றி சக்திவாய்ந்த மற்றும் சிறப்பான நாடாக இலங்கையை மாற்றுவதற்கு அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்றும் பிரதமர் தெரிவித்தார். (இ-7)

உலக சம்பியன்ஷிப் பட்மின்ரன் இறுதிப்போட்டி

# இந்திய வீராங்கனை சிந்து தங்கம் வென்று சாதனை

## வரலாறு படைத்தார்



உலக சம்பியன்ஷிப் பட்மின்ரன் இறுதிப் போட்டியில் இந்திய வீராங்கனை பி.வி. சிந்து தங்கம் வென்று சாதனைபடைத்தார். இதன் மூலம் உலக சம்பியன்ஷிப் பட்டத்தை வென்ற முதல் இந்தியர் என்ற பெருமையையும் அவர் பெற்றுள்ளார்.

சுவிட்சர்லாந்தின் பாஸல் நகரில் உலக பட்மின்ரன் சம்பியன்ஷிப் தொடர் நடந்து வருகிறது. இதில் மகளிர் பிரிவில் நட்சத்திர வீராங்கனைகளான இந்தியாவின் பி.வி. சிந்து, சாய்னா நெவால் களமிறங்கினர் போட்டித் தரவரிசையில் 5-வது இடத்தில் உள்ள பி.வி.சிந்து கடந்த 2017-ம் ஆண்டு நடைபெற்ற தொடரில் இறுதி ஆட்டத்தில் ஜப்பானின் நவோமி ஒசாகாவிடம் தோல்வியடைந்தார்.

அதேவேளையில் கடந்த ஆண்டு நடைபெற்ற தொடரின் இறுதி ஆட்டத்தில் ஒலிம்பிக் சம்பியனான ஸ்பெயினின் கரோலினா மரினிடம் வீழ்ந்து மீண்டும் ஒரு முறை தங்கப் பதக்கம் வெல்லும் வாய்ப்பை சிந்து தவறவிட்டிருந்தார். 24 வயதான சிந்து, கடந்த மாதம் இந்தோனேஷிய ஓபனில் வெள்ளிப் பதக்கம் கைப்பற்றிய நிலையில் உலக சம்பியன்ஷிப் தொடரை சந்தித்தார்.

பெண்கள் ஒற்றையர் பிரிவு போட்டியின் இறுதி ஆட்டம் நேற்று நடைபெற்றது. உலகின் தரவரிசையில் 5-வது இடத்தில் உள்ள சிந்து, 4வது இடத்தில் உள்ள ஜப்பானின் நசோமி ஒகுஹாராவை சந்தித்தார்.

முதல் செட்டை 21-7 எனக் கைப்பற்றிய சிந்து, 2வது செட்டை 21-7 என தன் வசப்படுத்தினார்.முடிவில் சிந்து 21-7, 21-7 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று, உலக சம்பியன்ஷிப் வரலாற்றில் தங்கப் பதக்கம் வென்ற முதல் இந்தியர் என்ற வரலாறு படைத்தார்.

தவிர இது, உலக பட்மின்ரனில் சிந்து கைப்பற்றிய 5-வது பதக்கம் இது ஆகும். தங்கம் வென்ற சிந்துக்கு பல்வேறு தரப்பினரும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். ஹைதராபாத்தில் உள்ள அவரது குடும்பத்தினரும் இனிப்புகள் வழங்கி இந்த வெற்றியை கொண்டாடினர்.

# இலங்கையுடனான டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்தின் ஆதிக்கம் தொடர்கிறது

## இன்று அதிசயம் நடக்குமா?

கொழும்பில் நடைபெற்று வரும் 2-வது டெஸ்டில் நியூசிலாந்து முதல் இனிங்சில் 382 ரன்கள் குவித்து வலுவான நிலையில் உள்ளது.

இலங்கை - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான 2-வது டெஸ்ட் போட்டி கொழும்பில் கடந்த 22-ந்தேதி தொடங்கியது. அன்றில் இருந்து நேற்றைய 4-வது நாள் ஆட்டம் வரை பெரும்பாலான பகுதி ஆட்டம் மழையால் பாதிக்கப்பட்டது.

கொழும்பு மைதானத்தில் மழைநீரை வெளியேற்றும் வசதி சிறப்பாக உள்ளதால், மழை நின்றதும் உடனடியாக ஆட்டம் தொடங்கப்பட்டது. டாஸ் வென்று பேட்டிங் தேர்வு செய்த இலங்கை அணி 3-வது நாள் ஆட்டத்தின்போது 244 ரன்கள் சேர்த்து ஆல்அவுட் ஆனது.

பின்னர் நியூசிலாந்து முதல் இனிங்சை தொடங்கியது. நேற்று முன்தினம் 3-வது நாள் ஆட்டத்தின்போது 4 விக்கெட் இழப்பிற்கு 196 ரன்கள் அடித்திருந்தது.

நேற்று 4-வது ஆட்டம் நடைபெற்றது. தொடக்க வீரர் டாம் லாதம் 154 ரன்கள் குவித்து ஆட்டமிழந்தார். 6-வது விக்கெட்டுக்கு விக்கெட் கீப்பர் வாட்லிங் உடன் கிராண்ட்ஹோம் ஜோடி சேர்ந்தார். வாட்லிங் நிதானமாக விளையாட கிராண்ட்ஹோம் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

இதனால் நியூசிலாந்து நேற்றைய 4-வது நாள் ஆட்ட முடிவில் 6 விக்கெட் இழப்பிற்கு 382 ரன்கள் குவித்துள்ளது. வாட்லிங் 81 ரன்னுடனும், கிராண்ட்ஹோம் 75 பந்தில 83 ரன்னுடனும் களத்தில் உள்ளனர்.



தற்போது வரை நியூசிலாந்து முதல் இனிங்சில் 138 ரன்கள் முன்னிலை பெற்றுள்ளது. இன்று கடைசி முழுவதும் விளையாட மழை அனுமதித்தால் மதிய உணவு இடைவேளை வரை நியூசிலாந்து அதிரடியாக விளையாடி 250 ரன்கள் முன்னிலை பெற்று முதல் இன்னிங்சை டிக்ளேர் செய்ய வாய்ப்புள்ளது.

இலங்கை அணிக்கு 250 ரன்கள் வெற்றி நிர்ணயிக்கப்பட்டு இரண்டு செசன்களில் 10 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினால் நியூசிலாந்து வெற்றி பெற்று தொடரை சமன் செய்ய வாய்ப்புள்ளது.

**Match Summary**
The Participation Test - Day 4 — ASHES

| | | | |
|---|---|---|---|
| **Australia** | **179** | 1st Innings | |
| Marnus Labuschagne | 74 | Jofra Archer | 6-45 |
| **England** | **67** | 1st Innings | |
| Joe Denly | 12 | Josh Hazlewood | 5-30 |
| **Australia** | **246** | 2nd Innings | |
| Marnus Labuschagne | 80 | Ben Stokes | 3-56 |
| **England** | **362-9** | 2nd Innings | |
| Ben Stokes | 135* | Josh Hazlewood | 4-85 |

England won by 1 wicket

டெஸ்டில் ஓர் பரபரப்பான ஆட்டம்

# அவுஸ்திரேலியாவிற்கு அதிர்ச்சி வைத்தியம் அளித்த இங்கிலாந்து

## தனி ஆளாக கெத்து காட்டிய ஸ்டோக்ஸ்


பென் ஸ்டோக்கின் பொறுப்பான மற்றும் அதிரடியான ஆட்டத்தினால் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஆஷஸ் டெஸ்ட் தொடரின் மூன்றாவது போட்டியில் இங்கிலாந்து அணி ஒரு விக்கெட்டினால் வெற்றி பெற்றுள்ளது.

கடந்த 22 ஆம் திகதி லீட்ஸ் மைதானத்தில் ஆரம்பமான மூன்றாவது போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்ஸில் 52.1 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 179 ஓட்டங்களை பெற்றது.

இதன் பின்னர் பதிலுக்கு தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து அணி அவுஸ்திரேலிய அணியின் பந்து வீச்சுக்கு நீண்ட நேரம் தாக்குப் பிடிக்காது 27.5 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 67 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

உலக சம்பியனான இங்கிலாந்து உள்ளூரில் சொற்ப ஓட்டங்களுக்குள் முடங்கியதால் கடும் விமர்சனத்துக்கு உள்ளாகியது.

112 ஓட்டங்கள் முன்னிலையுடன் 2 ஆவது இன்னிங்ஸை தொடங்கிய அவுஸ



திரேலிய அணி அணி 2 ஆவது நாள் முடிவில் 6 விக்கெட்டுக்கு 171 ரன்கள் எடுத்திருந்தது.

இந்த நிலையில் 3 ஆவது நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய 2 ஆவது இன்னிங்சில் 246 ஓட்டங்களுக்குள் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதன் மூலம் இங்கிலாந்து அணிக்கு 359 ரன்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

வெற்றியிலக்கை நோக்கி துடுப்பெடுத்தாட ஆரம்பித்த இங்கிலாந்து அணி சார்பில் ஆடுகளத்தில் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தி வந்த பென் ஸ்டோக்ஸ் இறுதியாக களமிறங்கிய ஜேக் லீச்சுடன் இணைந்து வெற்றிக்காக போராடினார்.

ஆறு ஓட்டங்களையும், நான்கு ஓட்டங்களையும் விளாசித் தள்ளிய அவர் 121.1 ஓவரில் டெஸ்ட் அரங்கில் தனது 8 ஆவது சதத்தை பூர்த்தி செய்தார். அது மாத்திரமன்றி அந்த ஓவரில் மாத்திரம் இங்கிலாந்து அணி 19 ஓட்டங்களை பெற்றது.

இதனால் இங்கிலாந்தின் வெற்றிக்கு ஒரு விக்கெட் மாத்திரம் கையிருப்பில் இருக்க 18 ஓட்டம் தேவைப்பட்டது. எனினும் நிலைமையை புரிந்து கொண்டு தனது பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய பென் ஸ்டோக்ஸ் 125.4 ஆவது ஓவரில் மேலும் ஒரு நான்கு ஓட்டத்தை விளாசித் தள்ளி இங்கிலாந்து அணிக்கு வெற்றியை பெற்றுக் கொடுத்தார்.

ஆடுகளத்தில் இறுதிவரை ஆட்டமிழக்காதிருந்த பென் ஸ்டோக்ஸ் 11 நான்கு ஓட்டம் 8 ஆறு ஓட்டம் அடங்கலாக 135 ஓட்டத்துடனும்; ஜேக் லீச் ஒரு ஓட்டத்துடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

இதனிடையே 125 ஆவது ஓவரில் இங்கிலாந்து அணியின் மூன்று ஆட்டமிழப்புகள் கை நழுவிப் போனதும் குறிப்பிடத்தக்கது.

பந்து வீச்சில் அவுஸ்திரேலிய அணி சார்பில் ஹேசல்வூட் 5 விக்கெட்டுக்களையும், பேட் கம்மின்ஸ் 2 விக்கெட்டுக்களையும், ஜேம்ஸ் பேட்டின்சன் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இந்த வெற்றியின் மூலம் தொடர் 1:1 என்ற கணக்கில் சமநிலையில் உள்ளது.

# பெறுகை அறிவித்தல்

## காரைநகர் பிரதேச சபை, காரைநகர்

## குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை முத்திரைத்தீர்வை-2019

01. தலைவர், பெறுகைக்குழு, காரைநகர் பிரதேச சபை, காரைநகர் அவர்களினால் தகுதிவாய்ந்த வழங்குநர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோரப்படுகின்றது.

02. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

03. கேள்விபெற தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (**Black List**) சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும் பின்வரும் தேவைப்பாடுகளையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

1. கேள்விதாரர் இலங்கை நிலைபெறுதகுவலு அதிகார சபையில் (**Sri Lanka Sustainable Energy Authority) Solar System** வழங்குநராக பதிவு மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.
2. கேள்விதாரர் சூரியகலத் தொகுதிசார்பாகபின்வரும் விடயங்களை (**design, Planning, Supplying, testing, Commissioning and maintenance)** மேற்கொள்வதில் குறைந்தது 02 வருடஅனுபவம் உடைய கம்பனியாக இருத்தல் வேண்டும்.
3. வழங்குநர் முழு சூரியகல அமைப்பினையும் பராமரிக்கக்கூடிய உள்நாட்டு முகவரை கொண்டிருப்பதுடன் இருவார கலத்தினுள் உதிரிப்பாகங்களை வழங்கக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
4. இலங்கையில் சூரியகல உற்பத்தி மற்றும் அதுசார்ந்த உதிரிப்பாகங்கள் வழங்குதல் தொடர்பான திருப்திகர சேவைப்பதிவை கொண்டிருத்தல் வேண்டும்.

04. ஆர்வமுள்ள வழங்குநர்கள் வலந்தலை, காரை நகரில் அமைந்துள்ள காரைநகர் பிரதேச சபை (தொலைபேசி: 021 225 2102, தொலைநகல்: 021 225 1735, **Email: karainagarps@gmail.com**) இல் இருந்து மேலதிக தகவல்களைபெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் காலை 9.00 மணிமுதல் பி.ப. 16.00 மணிவரை 26.08.2019 ஆம் திகதியிலிருந்து 09.09.2019 வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

05. ஆர்வமுள்ள வழங்குநர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் காரைநகர் பிரதேச சபையில் 26.08.2019 ஆம் திகதியிலிருந்து 09.09.2019 ஆம் திகதிவரை வேலைநாட்களில் மு.ப. 9.00 மணிமுதல் பி.ப. 3.00 மணிவரை, மீளளிக்கப்படாத பணமாக ரூபா.1000/- (வற் தவிர்ந்து) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாக செலுத்தப்படல் வேண்டும்.

06. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தவிசாளர், காரைநகர் பிரதேச சபை, வலந்தலை, காரைநகர் என்னும் முகவரிக்கு10.09.2019 திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்தியகேள்வி நிராகரிக்கப்படும். கேள்வியானது,கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப் பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியின் ஒருபகுதியினை மட்டும் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்குபெறுகைக்குழுவிற்குஅதிகாரமுண்டு.

07. கேள்வியானது கேள்விகள் சமர்ப்பிக்கும் இறுதித் திகதியில் இருந்து 49 (நாற்பத்தொன்பது நாட்கள் - 28.10.2019) வரையும் செல்லுபடியாகும்.

08. கேள்விப்பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| இல | வேலைவிபரம் | ஒப்பந்த இல | மதிப்பீட்டு தொகை (மில்.ரூபா) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு | செல்லு படியாகும் காலம் |
| 01 | **Supply, Installation Commissioning and maintenance of 10kw Grid Connected Solar PV system at KarainagarPradeshiyaSabha** | **NP/14/41(08)/02/PSDG/S.D/2019** | 1.178 | 01 மாதம் | இலங்கை மின்சார சபையால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் | 10,000.00 | 25.11.2019 |

09. கேள்வியாளர்களுக்கான முன் கலந்துரையாடல் 03.09.2019 ஆம் திகதி (செவ்வாய்க்கிழமை) பி.ப. 2.30 மணிக்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் நடைபெறும். இக் கலந்துரையாடலில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்தச் செலவில் கலந்து கொள்ளலாம்.

தலைவர், பெறுகைக் குழு.
காரைநகர் பிரதேச சபை

(C-7359)

சஜித் பிரேமதாஸவுக்கு

## அமரபுர பீடத்தால் கௌரவ பட்டம்



(கொழும்பு)

வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அமைச்சர் சஜித் பிரேமதாஸவை கௌரவிக்கும் வகையில் அமரபுர பீடத்தால் கௌரவ பட்டமொன்று வழங்கப்படவுள்ளதாக அமரபுர பீடத்தின் மகாநாயக்கர் கொடுகொட தம்மாவாச தேரர் தெரிவித்தார்.

ஹுனுகம்வெஹரவில் நிர்மாணிக்கப்பட்ட பௌத்த விகாரையைத் திறந்து வைக்கும் நிகழ்வில் வைத்து இந்த கௌரவிப்பு இடம்பெறவுள்ளதாகவும் தேரர் தெரிவித்தார். இந்த விகாரை சஜித் பிரேமதாஸவின் தனிப்பட்ட நிதியிலிருந்து நிர்மாணிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## 27 வகையான மருந்துகளின் விலைகள் குறைப்பு - ராஜித

(அம்பாந்தோட்டை)

இந்த வருடத்தின் இறுதிக்குள் 27 மருந்து வகைகளின் விலைகள் குறைக்கப்படவுள்ளதாக சுகாதார பாதுகாப்பு மற்றும் சுதேசிய வைத்தியத்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார். அமைச்சர் ராஜித தலைமையில் நேற்று முன்தினம் மருந்து வகைகளை இறக்குமதி செய்வோர் சங்கத்தின் 18 ஆவது மாநாடு அம்பாந்தோட்டையில் இடம்பெற்றது.

இதில் உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதற்கமைய, 5 ஆயிரம் மருந்து வகைகளின் விலைகள் குறைக்கப்படுவதாகவும் அமைச்சர் கூறினார். ஒரே வர்த்தக குறியீட்டில் பெரும் எண்ணிக்கையிலான மருந்து வகைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மருந்து வகைகளை ஒழுங்குறுத்தும் அதிகாரசபையில் முன்னர் போன்று ஒரே மருந்தை பெரும் எண்ணிக்கையிலான வர்த்தக குறியீட்டின் கீழ் பதிவு செய்வதற்கு இனி அனுமதிக்கப்படமாட்டாது. இது வரையறுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நடைமுறையின் மூலம் தரமான உயர் மருந்து வகைகளை பொது மக்களுக்கு வழங்குவதற்கான வேலைத்திட்டத்தை நாம் முன்னெடுத்துள்ளோம் எனவும் ராஜித தெரிவித்தார்.

மேலும், இவ்வருடத்தில் எதிர்வரும் காலங்களில் மேலும் 27 மருந்து வகைகளின் விலையை குறைத்து அதன் நன்மைகளை பொது மக்களுக்கு கிடைக்க வழி செய்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## இராசி பலன்

**26.08.2019**

ஆவணி 09, திங்கட்கிழமை

சூரிய உதயம் காலை 5.55 மணிக்கு

ஏகாதசி பின்னிரவு 01.17 மணிவரை

திருவாதிரை முன்னிரவு 11.59 மணிவரை

சுபநேரம் 12.05-1.35 மணிவரை

இராகுகாலம் 7.35-9.05 மணிவரை

ஏகாதசி விரதம் சித்தாமிர்தம்

கிரகநிலை: ராகு, சந் | சூரி, புத, சுக், செவ் | சனி, கேது | குரு

சந்திராஷ்டமம்: கேட்டை, மூலம்

**மேடம்:** சகோதர ஒற்றுமை மேலோங்கும், விருந்து விழாக்களில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.

**இடபம்:** நிதி நிலை உயரும் நாள், பொதுவழியில் புகழ் கூடும் நாள், ஆடம்பரப் பொருட்களை வாங்க முற்படுவீர்கள், குடும்ப மகிழ்ச்சி கூடும்.

**மிதுனம்:** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், மன ஆறுதல் தரும் பயணமொன்று இடம்பெறலாம், காணாமல் போன பொருளொன்று மீண்டும் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**கடகம்:** அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது, எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படலாம், வழிபாடு இன்பம் தரும்.

**சிம்மம்:** விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**கன்னி:** அந்நியர்களின் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, கனவு பலிதமுண்டு, செய்தொழில் மேன்மையுண்டு, செல்வாக்கு மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

**துலாம்:** எதிர்பாராத வகையில் சில நன்மைகள் இடம்பெறலாம், நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், தொழில் வளர்ச்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் விலகுவர்.

**விருச்சிகம்:** நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காண வேண்டிய நாள், வேலைச்சுமை கூடும் நாள், பயணங்களின் போது அவதானம் அவசியம்.

**தனுசு:** புதிய அனுபவங்கள் ஏற்படலாம், உறவினர்கள் சிலரை தேடிச்சென்று சந்திப்பீர்கள், வியாபாரத்தை விருத்தி செய்ய முற்படுவீர்கள், போசன சுகமுண்டு.

**மகரம்:** உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், மறைமுக எதிர்ப்புகள் மாறும், பாக்கிகள் வசூலாகலாம், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**கும்பம்:** செய் தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மீனம்:** வாகன சுகமுண்டு, தொழிலில் சிறப்புக்கள் வந்து சேரலாம், வரவேண்டிய பாக்கிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தொழிலில் ஆர்வத்துடன் பணி புரிவீர்கள்.

வளவன்

# தேசிய உணவு உற்பத்தி திட்டத்திற்கு 52 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு

## அங்கஜன் எம்.பி.தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தேசிய உணவு உற்பத்தி வேலைத்திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டப் பிரதேச செயலகங்கள் ஊடாக 12 வகையான திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக 52 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வழிகாட்டலின் கீழ் நாட்டுக்காக ஒன்றிணைவோம் என்ற செயற்றிட்டத்தின் கீழ் யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களை உள்ளடக்கிய 2 ஆயிரத்து 173 பயனாளிகளை இணைத்து குறித்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

காரைநகர் பிரதேச செயலகத்தில் உயிர்வாயுக் கட்டமைப்பு மற்றும் மண்புழுக் கட்டமைப்பின் மூலம் சேதனப்பசளை உற்பத்திக்காக 20 பயனாளிகளுக்கு 8 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது.

சிறு வெங்காயத்தைக் களஞ்சியப்படுத்தி வைக்க பருத்தித்துறை, உடுவில், தெல்லிப்பழை, பிரதேச செயலகங்களில் 224 பயனாளிகளுக்காக 13 இலட்சத்து 266 ஆயிரத்து 400 ரூபாய் ஒதுக்கப்பட்டது.

கோப்பாய் பிரதேச செயலகப் பகுதியில் எள்ளு செய்கைக்காக 160 பயனாளிகளுக்காக 3 இலட்சத்து 16 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டது.

இஞ்சி செய்கையை ஊக்குவிக்கும் பொருட்டு தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், உடுவில், கோப்பாய், கரவெட்டி ஆகிய பிரதேசங்களில் இருந்து 650 பயனாளிகளுக்கு 5 இலட்சத்து 23 ஆயிரத்து 500 ரூபாய் ஒதுக்கப்பட்டது. 50 வீத அரச பங்களிப்புடன் சிறு வெங்காய உண்மை விதை ஊக்குவிப்புக்கு 12 பிரதேச செயலகங்களில் இருந்து 150 பயனாளிகளுக்கு 4 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டது.

யாழ்.மாவட்டத்தின் சகல பிரதேச செயலகங்களில் இருந்து சூழல் நேயமிக்க பயிர்ச்செய்கை ஸ்தாபித்தலுக்கு 3 இலட்சத்து 834 ஆயிரத்து 175 ரூபாவும் நீர் இறைக்கும் இயந்திரம் வழங்க 9 இலட்சத்து 73 ஆயிரத்து 350 ரூபாவும் ஒதுக்கப்பட்டது.

உயர்தர மிளகாய் உற்பத்திக்காக பருத்தித்துறை, சாவகச்சேரி, தெல்லிப்பழை, கரவெட்டி, ஊர்காவற்றுறை ஆகிய பிரதேச செயலகங்களைச் சேர்ந்த 15 பயனாளிகளுக்கு 8 இலட்சத்து 19 ஆயிரத்து 880 ரூபாய் ஒதுக்கப்பட்டது.

உருளைக்கிழங்கு செய்கைக்காக கோப்பாய், உடுவில், சண்டிலிப்பாய், நல்லூர் ஆகிய பிரதேச செயலகங்களைச் சேர்ந்த பயனாளிகளுக்காக 22 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# இசையரங்கின் 21 ஆம் நாள் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி இலங்கை இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கின் 21 ஆம் நாள் நிகழ்வு இன்று திங்கட்கிழமை மாலை 6.45 மணிமுதல் இரவு 8.15 மணி வரை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம் பெறும்.

இன்று இரு இசைக்கச்சேரி நிகழ்வுகள் இடம்பெறும். முதலாவது இசைக்கச்சேரியில் பாட்டு-கல்யாண் சரண், வயலின்-அ.ஜெயராமன், மிருதங்கம்-ஞா.வசந், கெஞ்சிரா-ச.ஜெனில் சங்கர் ஆகியோரும் இரண்டாவது இசைக்கச்சேரியில் பாட்டு-சுகன்யா அரவிந்தன், வயலின்-அ.ஜெயராமன், மிருதங்கம்-ஞா.வசந் ஆகியோரும் பங்கேற்பர். (இ-2)

# பாராளுமன்ற உறுப்பினர்களால்தான் சபையில் பிரச்சினை ஏற்படுகிறது-தவிசாளர்

(யாழ்ப்பாணம்)

பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒரு சிலரின் செயற்பாட்டினால் சபை உறுப்பினர்கள் இடையே பிரச்சினை ஏற்படுவதாக சாவகச்சேரிப் பிரதேச சபையின் தவிசாளர் க.வாசுதேவன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் சாவகச்சேரி பிரதேசசபைக்குட்பட்ட பகுதிகளுக்கு வீதி மின் விளக்குகள் பொருத்துவதற்காக நிதி ஒதுக்கீடு செய்கின்றனர்.

பின்னர் எந்தெந்த பகுதிகளுக்கு பொருத்த வேண்டும் எனப் பெயரிட்டு அட்டவணையையும் அனுப்புகின்றனர். இவ்விடயம் சபைக்குக் குழப்ப நிலைக்குக் காரணமாக அமைகிறது.

சபைக்கு நிதி ஒதுக்கினால் சபைதான் முடிவெடுக்க வேண்டும். இவற்றைப் புரியாத பாராளுமன்ற உறுப்பினர்களால்தான் சபை உறுப்பினர்களுடன் தான் முரண்பட வேண்டிய சூழ்நிலை ஏற்படுவதாக தவிசாளர் மேலும் தெரிவித்தார். (இ-10.114)




சர்வதேச இளைஞர் தினத்தை முன்னிட்டு இலங்கை -ஐக்கிய நாடுகள் நட்புறவு அமையத்தின் நிலைபேண் அபிவிருத்தி இலக்குகளுக்கான சாவகச்சேரி இளைஞர் சபையினரின் ஏற்பாட்டில் நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் துவிச்சக்கரவண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் அணிவகுப்பு இடம்பெற்றது. நாவற்குழிச் சந்தியிலிருந்து நாவற்குழி மகா வித்தியாலயம் வரை இடம்பெற்ற இந்த அணிவகுப்பில் இளைஞர் சபை மற்றும் பொது அமைப்புக்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டனர். நிகழ்வின் இறுதியில் நாவற்குழி மகா வித்தியாலயத்தில் போதைப்பொருள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வும், அணி வகுப்பில் கலந்து கொண்டவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது. (படங்கள்:-சுபேசன்)

# கரவெட்டியில் விரைவில் அம்மாச்சி உணவகம்

## நிதி ஒதுக்கீடு-அங்கஜன்



(கரணவாய்)

கரவெட்டி பகுதியில் விரைவில் அம்மாச்சி உணவகம் அமைக்கப்படவுள்ளது. அதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

கரவெட்டி பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை முற்பகல் இடம்பெற்ற "நாட்டிற்காக ஒன்றிணைவோம்" வேலைத்திட்ட நடமாடும் சேவையில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நான் விவசாய பிரதி அமைச்சராக இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி விவசாயிகள் விடயத்தில் அதிகமாக கவனம் செலுத்துவேன்.

இங்கு 40 வீதமான மக்கள் விவசாயத்தையும், கடல்வளத்தையும் நம்பியுள்ளனர்.

மேலும் வேறு மாவட்டங்களில் இல்லாத நடைமுறை யாழ். மாவட்டத்தில் பின்பற்றப்படுகிறது. அதுவே பத்து வீத கழிவு நடைமுறை இதனால் விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர்.

இதற்காக உழவர் சந்தை ஒன்று அமைக்கப்பட வேண்டும் .அதன் மூலம்தான் விவசாயிகளுக்கு சரியான முன்னேற்றம் ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-60)

# பரு.பிரதேச செயலகத்தில் 357 வேலைத் திட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி செயலகத்தால் நடத்தப்படுகின்ற 'நாட்டிற்காக ஒன்றிணைவோம்' நிகழ்ச்சித் திட்டமானது வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் இம்மாதம் 23 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரை நடைபெறுகின்றது. இந் நிகழ்ச்சித் திட்டமானது ஜனாதிபதி செயலகத்தால் நடத்தப்படுகின்ற வறுமை ஒழிப்பு, கிராமசக்தி, போதையற்ற நாடு, சிறுநீரக நோய்த் தடுப்பு, சிறுவர் பாதுகாப்பு, சூழல் பாதுகாப்பு, பேண்தகு பாடசாலை அபிவிருத்தி, தேசிய உணவு உற்பத்தி, தேசிய டெங்கு கட்டுப்பாடு, **smart srilanka** ஆகிய பத்து வேலைத் திட்டங்களின் கீழ் பிரதேச செயலகப் பிரிவில் 357 வேலைத் திட்டங்கள் நடைபெறவுள்ளன. அதன்படி 23 ஆம் திகதி 58 நிகழ்வுகளும் 24 ஆம் திகதி 57 திட்டங்களும் 25 ஆம் திகதி 26 திட்டங்களும் நடைபெற்றன. இன்று 50 நிகழ்வுகளும் நாளை 78 திட்டங்களும் நாளை மறுதினம் 28 ஆம் திகதி 37 திட்டங்களும் 29 ஆம் திகதி 43 திட்டங்களும் நடைபெறவுள்ளன. இவ் வேலைத்திட்டங்களளில் பங்குபற்றி பயனடையுமாறு பொதுமக்களைக் கேட்டுக் கொள்கின்றேன் என பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி தெரிவித்தார். (இ)




தமிழீழ விடுதலை இயக்கத்தின் ஆரம்பகால தலைவர் நடராஜா தங்கத்துரையின் 71 ஆவது பிறந்தநாள் கேக் வெட்டி கொண்டாடப்பட்டது. நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை வல்வெட்டித்துறை நெற்கொழு விளையாட்டுக்கழக மைதானத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான எம்.கே. சிவாஜிலிங்கம் கேக் வெட்டி கொண்டாடினார். இந் நிகழ்வில் வல்வெட்டித்துறை நகரசபை தவிசாளர், உப தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (படம்:- மகாலிங்கம்)







# மன்னாரில் திருக்குறள் பெருவிழா





(மன்னார்)

ஜனாதிபதியின் எண்ணக் கருவில் வடக்கு மாகாண ஆளுநரின் நெறிப்படுத்தலில் வடமாகாண பண்பாட்டாலுவல்கள் திணைக்களமும் கல்வி அமைச்சும் இணைந்து ஏற்பாடு செய்த திருக்குறள் பெருவிழா நேற்று மன்னார் அல்-அஸ்ஹர் தேசிய பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் சி.ஏ.மோகன்றாஸ் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண பிரதம செயலாளர் ஏ.பத்திநாதன் கலந்து கொண்டார். முற்பகல் 10 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத்தில் இருந்து பவனி ஆரம்பமாகி மன்னார்-அல்-அஸ்ஹர் தேசிய பாடசாலையை சென்றடைந்தது.

அதனைத் தொடர்ந்து நிகழ்வுகள் இடம்பெற்றன. மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் சீ.ஏ. மோகன்றாஸ், செந்தமிழருவி மஹா தர்மகுமாரக் குருக்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மொழியியற்றுறை விரிவுரையாளர் விஜயபாஸ்கரன் , ஜப்பான் கச்சுயின் பல்கலைக்கழக முன்னாள் ஆய்வுப் பேராசிரியர் முனைவர் மனோன்மணி சண்முகதாஸ், மன்னார் தமிழ்ச்சங்கம் வண பிதா தமிழ்நேசன் அடிகளார் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

குறித்த நிகழ்வில் கலைஞர்கள், பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள். மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (9-285)

உங்கள் மனநிலை
யாருடனாவது பேசவேண்டும்
போல இருந்தால், தயங்காமல் எம்மை
அழையுங்கள் அல்லது நேரில் வாருங்கள்.
எமது அமைப்பில் மதமும், அரசியலும் முற்றாகத் தவிர்க்கப்பட்டுள்ளது.
ரகசியம் பேணுவோம்.
கை கொடுக்கும் நண்பர்கள்
175, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (KKS வீதி அருகே)
077 900 8776 ( தினமும் மு.ப. 9.00 - பி.ப. 1.00 )

# தேர்தல் பணிக்காக சுகாதார அமைச்சில் 29 பேரை நியமிக்க ராஜித முயற்சி

## வைத்திய அதிகாரிகள் சங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் ராஜித சேனாரட்ன தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக 29 பேரை சுகாதார அமைச்சில் நியமித்துள்ளதாக அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் குற்றஞ்சாட்டியது.

இந்த நடவடிக்கை தொடர்பில் சுகாதார அமைச்சின் செயலாளர் வசந்த பெரேராவிடத்தில் முறையிடவுள்ளதாகவும் அதன் செயலாளர் வைத்தியர் ஹரித அளுத்கே தெரிவித்தார்.

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்னவின் தன்னிச்சையான செயற்பாடுகள் காரணமாக சுகாதார அமைச்சினுள் ஊழல் மோசடிகள் இடம்பெற்று வருகின்றன. இது தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவு உள்ளடங்கலாக 13 இடங்க ளில் முறைப்பாடு செய்துள்ளோம். அவர் மீது நாம் முன்வைக்கும் குற்றச் சாட்டுக்கள் அனைத்தும் ஆதார பூர்வமானவையாகும்.



இவ்வாறானதொரு நிலையில் சுகாதார அமைச்சர் தமது அமைச்சிற்கு 29 பேரை உள்வாங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார் என்றும் ஹரித மேலும் தெரிவித்தார். (இ-7)

மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்
குழந்தைவேலு அருந்தவகுமாரன்
(காரியாலய உதவியாளர்)
எமது பாடசாலையில் காரியாலய உதவியாளராக கடந்த பல வருடங்களாக சேவையாற்றி 22 ஆவணியில் மணிவிழா கண்ட நாயகனை மனதார வாழ்த்துவதுடன் ஓய்வுக் காலத்தில் நலமுடன் சிறப்பாக, வளமாக, வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

(C-7365)
ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்.

# ஞாபக மறதியால் பாதிக்கப்பட்டுள்ள ராஜபக்ஷ குடும்பம்

(ஹற்றன்)

ராஜபக்ஷவினர் நாட்டின் ஜனநாயகத்தை மதிக்காதவர்கள் என தேசிய பொதுமக்கள் சபையின் ஒருங்கிணைப்பாளர் சமீர பெரேரா தெரிவித்தார்.

ஹற்றன் ஹில்சைட் ஹோட்டலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனநாயகத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்ததாகவும் போரை முடிவுக்குக் கொண்டு வந்து சுதந்திரத்தை ஏற்படுத்தியதாகவும் கூறுகின்றனர் ஊடகவியலாளர்களுக்கு சுதந்திரமாக எழுத சந்தர்ப்பத்தைக் கொடுத்ததாகவும் கோத்தபாய ராஜபக்ஷ கூறுகிறார்.

கோத்தபாயவுக்கு நினைவில்லையா. ராஜபக்ஷ குடும்பத்தினருக்கும் நினைவில்லையா? இவர்களுக்கு ஞாபக மறதி நோய் இருக்கின்றதா?.

போர் நடைபெற்ற காலத்தில் நாட்டு மக்கள் ஜனநாயகத்தை பாதுகாத்தனர். நாட்டு மக்கள் ஜனநாயகத்திற்காக குரல் கொடுத்தனர். அரசியலமைப்புச் சட்டத்தில் ஜனநாயக விழுமியங்கள் பாதுகாக்கப்பட்டன.

எனினும் போர் முடிவுக்கு வந்த பின்னர், அவை அனைத்தும் இல்லாமல் போனது. போர் முடிவுக்கு வந்ததும் ராஜபக்ஷவினர் ஜனநாயகத்தை இல்லாமல் செய்தனர். அப்படி செய்த கோத்தபாய ராஜபக்ஷ தாம் ஜனநாயகத்தை பாதுகாத்ததாகக் கூறுவது கேலிக்குரியது எனவும் சமீர பெரேரா தெரிவித்தார். (இ-7)

மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்
திரு. மார்க்கண்டு லிங்கராசா பாஸ்கரன்


எமது பாடசாலையில் ஆசிரியராக சேவையாற்றி பிராந்திய ஆங்கில ஆதார நிலைய யாழ்ப்பாண (RESC JAFFNA) இணைப்பாளராக பணியாற்றி தனது 32 ஆவது வருட சேவையில் மணிவிழாக் காணும் நாயகனை வாழ்த்துவதுடன் அவரின் ஓய்வுக் காலம் சிறப்பாகவும் வளமாகவும் அமைய வாழ்த்துகின்றோம்.
(C-7364)
ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்.

# நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையும் கடந்தகால ஜனாதிபதித் தேர்தல்களும்



02

**கலாநிதி க.தவலிங்கம்**
தவிசாளர்-எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

### ஓர் அரசாங்கத்தின் முத்துறைகள்- சட்டத்துறை, நிர்வாகத்துறை மற்றும் நீதித்துறை

ஓர் அரசாங்கம் முத்துறைகளைக் கொண்டுள்ளது. அதாவது சட்டத்துறை, நிர்வாகத்துறை மற்றும் நீதித்துறை ஆகியனவாகும். இத்துறைகளினூடாகவே அரச அதிகாரங்கள் நிலை நாட்டப்படுகிறது. ஓர் அரசாங்கம் இல்லாமல் அரசு செயற்பட முடியாது.

அரசாங்கத்தின் முத்துறைகளில் சட்டத்துறை முக்கியமானதாகும். நாட்டுக்குத் தேவையான சட்டங்களை இயற்றுவதே சட்டத்துறையாகும். அதாவது நாட்டில் வாழ்கின்ற மக்களின் தேவைகளையும் விருப்பங்களையும் கொள்கைகளாக மாற்றும் இடமே சட்டத்துறையாகும். கில் கிறைஸ்ட் என்பவரின் கருத்துப்படி சட்டத்துறை மக்களால் தெரிவு செய்யப்பட வேண்டும். அம்மக்களுக்கு பொறுப்புச் சொல்லவும் வேண்டும். நாடு எதிர்நோக்கும் பல்வேறுபட்ட பிரச்சினைகளைத் தீர்த்து நாட்டின் நல்லாட்சிக்கு துணை செய்யும் நிறுவனமே இதுவாகும்.

**சட்டத்துறை**



பாராளுமன்றம்

சட்டத்துறையானது சட்டமியற்றுதல், நிர்வாகத் துறையைக் கட்டுப்படுத்துதல், யாப்பினை திருத்துதல் அல்லது மாற்றுதல் போன்ற பல்வேறுபட்ட பணிகளையும் ஆற்றுகின்றது. பொதுவாக இது சட்ட மன்றங்கள் அல்லது பாராளுமன்றங்கள் என்றழைக்கப்படுகிறது.

**நிர்வாகத்துறை**



ஜனாதிபதி செயலகம்

நிர்வாகத்துறை என்பது சட்டத்துறை இயற்றிய சட்டங்களுக்கேற்ப நாட்டின் அன்றாட நிர்வாகத்தைக் கவனித்துக்கொள்ளும் அதிகாரமும் பொறுப்பும் கொண்ட நிறுவனமாகும். பல நாடுகளில் அரசு என்பது நிறைவேற்றுப் பிரிவையே குறிக்கிறது. நிறைவேற்று அதிகாரம் கொண்டவருக்கு சட்டங்களை ஆக்கும் அல்லது அவற்றை விளக்கும் அதிகாரமோ பொறுப்போ கிடையாது. சட்டங்களை ஆக்கும் அதிகாரமும் பொறுப்பும் பாராளுமன்றத்திற்கும் அதனை விளக்கும் அதிகாரமும் பொறுப்பும் நீதித் துறைக்கும் உரியது.

பாராளுமன்றத்தினால் ஆக்கப்படுவனவும் நீதித் துறையால் விரித்து விளக்கப்படுவனவுமான சட்டங்களை நிறைவேற்றுவதே நிறைவேற்றுப் பிரிவின் பங்களிப்பு ஆகும்.

**நீதித்துறை**



இலங்கை மீயுயர் நீதிமன்றம்

நிர்வாகத்துறையானது வரம்புகளை மீறும் போதும் மக்களின் உரிமைகளை மதிக்காத போதும் மற்றும் பாராளுமன்றம் (சட்டத்துறை) மக்களுடைய உரிமைகளில் கை வைக்கின்ற போதும் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் ஒரே ஒரு நம்பிக்கையான நிறுவனம் நீதித்துறையாகும். நீதிபதிகளை பொதுவாக நிர்வாகத்துறை தலைவரே நியமிப்பார். நீதித்துறையின் பணிகளாக மக்களின் உரிமைகளைப் பாதுகாத்தல், சட்டத்துறை மற்றும் நிர்வாகத்துறைக்கு நீதி ஆலோசனை வழங்குதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

குடியாட்சி முறையில் முக்கிய அடிப்படைகளில் நீதித்துறை தனியாக பிரிக்கப்பட்டு சுதந்திரமாக செயற்படவேண்டுமென்பதும் நீதித்துறையை சார்ந்தவர்கள் விருப்பு வெறுப்பு இல்லாமல் தங்களுடைய கடமைகளை செய்ய வேண்டும் என்பதும் வழக்குகளில் விரைந்து சட்ட அடிப்படையிலான தீர்ப்புகள் தரப்பட வேண்டுமென்பதும் முக்கியமான அம்சமாகும். நீதித்துறையை போலவே நிர்வாகத்துறை மற்றும் சட்டத்துறை தனித்து ஒவ்வொன்றும் அதன் பணிகளை மற்றதோடு சார்ந்திராமல் செய்ய வேண்டுமென்பதும் இன்னொரு அம்சமாகும்.

> நிர்வாகத்துறை, சட்டத்துறை மற்றும் நீதித்துறை தனித்தனியாக செயற்பட வேண்டும் என்பது அதிகாரப்பிரிவினை கொள்கை என்று சொல்லப்படுகிறது.
> ஆனால் இலங்கையில் இருக்கும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை ஏனைய நிறுவனங்களான சட்டத் துறையையும், நீதித்துறையையும் தன் கீழ் வைத்திருக்க முனைவதாகவே காணப்படுகின்றது.

இவ்வாறு நிர்வாகத்துறை, சட்டத்துறை மற்றும் நீதித்துறை தனித்தனியாக செயற்பட வேண்டும் என்பது அதிகாரப் பிரிவினை கொள்கை என்று சொல்லப்படுகிறது. பல நாடுகள் அவற்றினுடைய அரசியலமைப்பில் இக்கொள்கை அடிப்படையில் அரசாங்கம் செயற்படுவதற்கான விதிகளை எல்லாம் சேர்த்து அதன்படி அவைகளின் அரசாங்கங்கள் நடைபெறுகின்றன.

ஆனால் இலங்கையில் இருக்கும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை ஏனைய நிறுவனங்களான சட்டத்துறையையும், நீதித்துறையையும் தன் கீழ் வைத்திருக்க முனைவதாகவே காணப்படுகின்றது.

நிறைவேற்று அதிகாரம் நீதித்துறைக்கு வழங்கிய செய்திகள், கட்டளைகளை கருத்திற் கொள்ளாது நீதித்துறை நடவடிக்கைகளை மேற்கொண்டதன் காரணமாக நீதிபதிகளின் இல்லங்களின் முன்னால் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டு அவர்களது வீடுகளுக்கு கல்லெறியப்பட்ட யுகத்தையும், தமது நிறைவேற்று அதிகாரத்திற்கு நீதித்துறை பணியாத காரணத்தினால் 48 மணித்தியால குறுகிய காலப் பகுதியில் பிரதம நீதியரசரை பதவியில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதையும் இங்கு காணக்கூடியதாக விருந்தது.

நிறைவேற்று அதிகாரம், அரசியல் யாப்பு அதிகாரம், நீதித்துறை ஆகியவற்றில் இருக்க வேண்டிய சமநிலையை பாதுகாத்துக் கொள்வதற்காக இலங்கை அரசியல் அமைப்பின் 19 ஆம் திருத்தம் கொண்டு வரப்பட்டது. 19 ஆம் திருத்தத்தின் மூலம் நீதித்துறை தனியாகவும் சுதந்திரமாகவும் செயற்படவழி செய்யப்பட்டிருக்கிறது. எனவே நீதித்துறையை கட்டுப்படுத்துவது அதன் சுதந்திரத்திற்கு கேடு விளைவிப்பது போன்ற செயல்களில் நிர்வாகத்துறை தலையிட முடியாது. எனவே நீதிபதிகள் பயம் இல்லாமல் சுதந்திரமாக தீர்ப்புகள் வழங்கலாம்.

### அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தம்

19 ஆவது திருத்தமானது, 18 ஆவது திருத்தத்தின் மூலம் ஜனாதிபதி ஒருவரின் பதவிக்காலங்களை வரையறை அற்றதாக்கிய மகிந்த ராஜபக்ஷவின் அரசியலமைப்புத் தலையீட்டை செயலற்றதாக்கி மீண்டும் இரண்டு பதவிக் காலங்களுக்கு மட்டுமே ஜனாதிபதி ஒருவர் பதவி வகிக்க முடியும் என 1978 இன் பழைய ஏற்பாடுகளை மீளக் கொண்டு வந்துள்ளது.

> அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் 70 ஆவது உறுப்புரையின்படி பாராளுமன்றம் நான்கரை வருடங்களின் பின்னரே கலைக்கப்பட முடியும் என்று திருத்தப்பட்டுள்ளது. அத்துடன் முன்கூட்டியே கலைக்கப்பட வேண்டுமென்றால் அதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையும் வேண்டும். இதன்படி பாராளுமன்றம் தெரிவுசெய்யப்பட்டு ஓராண்டு கடந்துவிட்ட பின்னர், அதனை கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இருக்காது.

(தொடரும்...)

சோபா உடன்படிக்கையால்

# இலங்கை அமெரிக்காவின் 52வது மாநிலமாக மாறும்

**(யாழ்ப்பாணம்)**

**"சோபா" உடன்படிக்கை மூலம் இலங்கை அமெரிக்காவின் 52 ஆவது மாநிலமாக உருவாக்கப்படும் என முன்னாள் அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண எச்சரித்தார்.**

பேராசிரியர் திஸ்ஸ எச்சரிக்கை



இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், ஐக்கிய முன்னணி அரசாங்கத்தால் இலங்கையை வெளிநாடுகளுக்கு தாரை வார்க்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் ஓர் அங்கமாக சோபா உடன்படிக்கை அமையவுள்ளது.

இவ் ஒப்பந்தத்தின் மூலம் அமெரிக்கப் படைகளுக்கு வரவேற்புக் கிடைப்பதுடன் அவர்களின் தனிப்பட்ட அலுவலர்களுக்கும் ஒப்பந்தக்காரர்களுக்கும் அரச சட்ட நியதிகளின் படி சலுகைகள் கிடைக்கும்.

சோபா ஒப்பந்தத்தின் மூலம் அமெரிக்கர்களுக்கு இலங்கை வருவதற்கு கடவுச்சீட்டு மற்றும் விசா அவசியப்படமாட்டாது. அமெரிக்க அடையாள அட்டை மட்டும் போதும்.

மேலும் அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு சோதனை, சுங்க வரி என்பன விதிக்க முடியாது.

அமெரிக்கர்களால் இலங்கையில் புரியப்படும் கொலை உளிட்ட பாரிய குற்றங்களுக்கு இலங்கைச் சட்டத்தின் கீழ் நீதிமன்றங்களால் தண்டிக்க முடியாததோடு அவர்களுக்கு அமெரிக்க நாட்டுச் சட்டத்தின் படி அவர்களின் நீதிமன்றத்தால் மட்டுமே தண்டனை வழங்க முடியும்.

அமெரிக்கா தனது இராணுவ வல்லமையை விரிவுபடுத்த இலங்கையைக் கேந்திர நிலையமாக மாற்றியுள்ளது. இதன் மூலம் இலங்கை அமெரிக்கக் காலணித்துவக் கொள்கையின் கீழ் செயற்படும் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே தான் இலங்கையின் இறையாண்மை மற்றும் அரசியல் சுதந்திரத்தில் வெளிநாடுகளின் தலையீடு இன்றி மக்கள் சுதந்திரமாக வாழ அரசியல் அதிகாரத்தில் உள்ளவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென திஸ்ஸ மேலும் வேண்டுகோள் விடுத்தார். (இ-10)

# குப்பைகளை ஏற்றிச் சென்ற லொறி மீதும் பொலிஸ் வாகனம் மீதும் கல்வீசி தாக்குதல்

## ஒருவர் கைது

(புத்தளம்)

புத்தளம் - அருவக்காட்டுக்கு குப்பைகளை ஏற்றிச் சென்ற லொறி மற்றும் அதன் பாதுகாப்பிற்காக சென்ற பொலிஸ் வாகனத்தின் மீதும் கல்வீசித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

புத்தளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தில்லடி பகுதியில் வைத்து குப்பைகளை ஏற்றிச் சென்ற லொறி மீதும் பாதுகாப்பிற்காக சென்ற பொலிஸ் வாகனத்தின் மீதும் நேற்று முன்தினம் அதிகாலை கற்களால் .வீசித் தாக்குதலை மேற்கொண்டவர்களில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

புத்தளம் - தில்லடி பகுதியைச் சேர்ந்த 35 வயது நாலக பிரசன்ன என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபருக்கு எதிராக பொதுச் சொத்துகளைச் சேதப்படுத்தியமை தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. பின்னர் பொலிஸார் சந்தேக நபரை புத்தளம் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

இதன்போது நீதவான் சந்தேக நபரை எதிர்வரும் 28 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (இ-7)

# சிறுபான்மையினரின் விடயத்தில் தற்போதைய அரசாங்கமே அதிக அக்கறை செலுத்துகிறது

## இந்தியாவில் ஹக்கீம் வக்காளத்து

(சென்னை)

சிறுபான்மையினரின் விடயத்தில் மகிந்த அரசாங்கத்தைவிட தற்போதைய அரசாங்கமே அதிக அக்கறை காட்டுவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இந்தியா சென்றுள்ள அவர் நேற்று முன்தினம் சனிக்கிழமை திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு.க.ஸ்டாலினை சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே ஹக்கீம் மேற்கண்டவாறு தெரிவித்தார். "இலங்கையின் அரசியல்களம் மற்றும் இந்திய, தமிழக விவகாரங்கள் குறித்து எங்களுக்குள் கருத்துக்களை பகிர்ந்துகொண்டோம்.

முக்கியமான அரசியல் திருப்பத்தை ஏற்படுத்தவுள்ள ஜனாதிபதித் தேர்தல், நாட்டின் தற்போதைய அரசியல் போக்கு குறித்தும் எங்களுக்குள் பேசிக்கொண்டோம். 2015 ஆம் ஆண்டு எங்களுடைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது முதல் இன்றுவரை இலங்கைச் சிறுபான்மை சமூகத்தின் விடயத்தில் எவ்வளவு தூரம் உரிமைகளைக் கொடுக்க முடியுமோ அதற்கான முயற்சிகள் நடக்கின்றன.



பல விடயங்கள் இன்னும் தீர்ந்தபாடில்லை என்ற குற்றச்சாட்டு இருந்தாலும் முன்னைய அரசாங்கம் கொடுத்த நெருக்கடிகள் தற்போது நீங்கியுள்ளன. அபகரிக்கப்பட்ட உரிமைகளை மீட்டுக்கொடுத்தல், புதிய சட்டவாக்கங்கள், அதிலே சிறுபான்மை சமூகங்களுக்கு அநியாயங்கள் நடக்காமல் பார்த்துக்கொள்வது போன்ற விடயங்களில் எங்கள் அரசாங்கம் உரிய கவனம் செலுத்தியுள்ளது.

கடந்த அரசாங்கத்தோடு ஒப்பிடுகையில் தற்போதைய அரசாங்கம் சிறுபான்மை மக்களுக்கு இயன்ற சில விடயங்களைச் செய்துள்ளன. தற்போது முற்றுப்பெறாமல் இருக்கும் சர்ச்சைகள், விமர்சனங்கள் இல்லாமலும் இல்லை.

இலங்கையில் பயங்கரவாதத் தாக்குதல் நடந்த பின்னணியில் அவசரகாலச் சட்டம் அவசியமாக தேவைப்பட்டது. விசாரணையை துரிதப்படுத்துவதற்கும் குற்றவாளிகளை இனங்காண்பதற்கும் சந்தேகநபர்களைக் கண்டுபிடிப்பதற்கும் அவசரகாலச் சட்டத்தில் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தற்போது பயங்கரவாதத் தடை குறித்த விடயங்களிலும் அவசரகால சட்டம் தேவையற்றது என்பதை அரசாங்கம் உணர்ந்துள்ளது.

தனிமனித சுதந்திரம், மனித உரிமைகள் விவகாரம் போன்ற விடயங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அதேநேரம் அவசரகாலச் சட்டம் நீடித்தால் இலங்கைக்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்படுகின்றது. இப்படியான விடயங்களை கருத்திற்கொண்டுதான் தேவைக்கதிகமாக அவசரகால சட்டத்தை நீடிக்காமல் அதனை நீக்கியுள்ளோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# குறை'களை' பதிகம் 84

## பொலிவு பெறுமா? தெருமூடி மடம்





*யாழ்ப்பாணத்திலிருந்த தெருமூடி மடல்கள் பல*
*காணாமல் போய்விட பருத்தித்துறையில் இருந்ததோ*
*ஒரேயொரு தெருமூடி மடம். ஆண்டாண்டு*
*காலமாய் அவ்வழியில் போய்வருவோர் களைப்பாறவும்*
*ஊரிலுள்ளோர் திண்ணையில் இருந்து கதைகள் பலபேசி*
*மகிழவும் நிழல் கொடுத்திருந்தது அம்மடம்.*

*இன்றோ கூரையும் அகற்றப்பட்டு சுவர்களும்*
*இடிந்து கிடக்கின்றன. அண்மையில் ஓர்*
*கனரக வாகனம் சேதமாக்கி விட்டதாம்*
*மடத்தினை. அதனால் அகற்றி விட்டனர் போலும்*
*மடத்தின் மூடியை! மீண்டும் கூரை அவ்விடத்தில்*
*பொருத்தப்படுமா? இல்லை எஞ்சியிருப்பதும்*
*அகற்றப்பட்டு விடுமா? ஒன்றும் புரியவில்லை.*
*என்ன ஏது நடக்கிறதென உய்த்தறியவும்*
*முடிவதில்லை நம் ஊரில் (மண்ணில்)*

*பருத்தித்துறை நகராட்சி மன்றத்தினரே தொல்லியல்*
*திணைக்களத்துடன் இணைந்து பாதுகாக்கப்பட்ட*
*மரபுரிமைச்சின்னமென அறிவித்தல் பலகையை*
*வைத்துவிட்டால் மட்டும் போதுமா? செயலில்*
*காட்ட வேண்டாமா?*

*தயவுடன் உம்மை வேண்டுகிறோம் பொருத்திடுவீர்*
*கூரையை அவ்விடத்தில். சேதமாகிய சுவர்களையும்*
*புனரமைத்து புதுப்பொலிவு*
*பெறவைத்து பாதுகாப்புடன் பேணிடுவீர் நம் பண்பாட்டு*
*மரபுச்சின்னமாம் தெருமூடி மடம் அதனை.*

**சண்முகலிங்கம் சஜீலன்,**
**பன்னாலை, தெல்லிப்பழை.**

# மன்னன் பண்டாரவன்னியனின் 216 ஆவது நினைவு நாள் அனுஷ்டிப்பு






(குருமன்காடு)
வன்னி இராச்சியத்தின் இறுதி மன்னன் பண்டாரவன்னியனின் 216 ஆவது நினைவு நாள் நிகழ்வு வவுனியாவில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

குறித்த நினைவு தினத்தினை வவுனியா நகரசபையும் பண்டார வன்னியன் விழாக்குழுவும் இணைந்து வருடாந்தம் அனுஷ்டித்து வரும் நிலையில் நேற்று வவுனியா நகரசபை தலைவர் இ.கௌதமன் தலைமையில் குறித்த நிகழ்வுகள் நடைபெற்றன.

காலை 8.15 மணிக்கு வவுனியா மாவட்ட செயலக முன்றலில் அமைந்துள்ள பண்டார வன்னியனின் நினைவுத்தூபிக்கு முக்கியஸ்தர்கள் மலர்மாலை அணிவித்ததுடன், நகரசபை உறுப்பினர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள், பொது அமைப்பினரும் சிலைக்கு மாலை அணிவித்து, மலரஞ்சலி செலுத்தினர்.

நிகழ்வின் இறுதியில் தமிழ்மணி அகளங்கனால் நினைவுரையும் நிகழ்த்தப்பட்டது.

இதனையடுத்து காலை 9.30 மணியளவில் வவுனியா நகரசபை மண்டபத்தில் ஏனைய நிகழ்வுகள் இடம்பெற்றன. தலைமை உரையை தொடர்ந்து கலை. கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன.

தொடர்ந்து நினைவுப்பேருரையை மூத்த ஊடகவியலாளர் அருணா செல்லத்துரை நிகழ்த்தியதுடன் உரையோவியத்தை எழுத்தாளர் தமிழருவி த.சிவகுமாரன் வழங்கியிருந்தார்.

குறித்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக சட்டத்தரணியும் முன்னாள் வவுனியா மாவட்ட சபைத் தலைவருமான மு.சிற்றம்பலம், கலந்துகொண்டதுடன் வன்னி பாராளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், சாந்தி சிறீஸ்கந்தராசா, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கம், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், சமூக ஆர்வலர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டிருந்தனர். (9-250-299)

# பொது இடங்களில்
## புகைப்பிடித்தவர்களுக்கு அபராதம்

(மன்னார்)
மன்னார் நகர்ப்பகுதி பொது இடங்களில் புகை பிடித்ததாக 4 பேருக்கு எதிராக பொலிஸார் மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா முன்னிலையில் இவ் வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது 4 நபர்களும் தங்கள் குற்றங்களை ஒப்புக்கொண்டதனடிப்படையில் 4 நபர்களுக்கும் நீதவான் தலா 1500 ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். (9-285)




# கற்பூரப் புல்வெளியில் பண்டார வன்னியனுக்கு அஞ்சலி




(முல்லைத்தீவு)
பண்டாரவன்னியன் முல்லைத்தீவு கோட்டையினை வெற்றி கொண்ட 216 ஆம் ஆண்டு நினைவுகூரல் நிகழ்வுகள் பல அனுஷ்டிக்கப்பட்டன.

அந்தவகையில் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தலைமையில் பண்டார வன்னியன் தனது ஒரே வாள்வீச்சில் 60 வெள்ளையர்களைச் சாய்த்த இடமான, முள்ளியவளை தெற்கு, 7 ஆம் கட்டை, கயட்டையடி கற்பூரப் புல்வெளியில் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து முல்லைத்தீவு நகர்ப்பகுதியில் அமைந்துள்ள பண்டாரவன்னியனின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து, மலர்தூவி நினைவுகூரல்கள் இடம்பெற்றன.

இந் நிகழ்வில் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா - ரவிகரன், கரைதுரைப்பற்று பிரதேசசபை உறுப்பினர்களான சின்னராசா - லோகேசுவரன், மரியநாயகம் தொம்மைப்பிள்ளை உட்படப் பலர் கலந்து கொண்டனர். (9)

# இளைஞர்களுக்கான தலைமைத்துவ நிகழ்ச்சித்திட்டம்





(நெளுக்குளம்)
வவுனியாவில் இளைஞர்களுக்கான சமாதானம் மற்றும் தலைமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் ஆண்டியங்குளத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

பல்வேறு நாடுகளிலும் இருந்து இளைஞர்கள் கலந்து கொண்டுள்ள இந் நிகழ்வில் சமூக நல்லிணக்க சமாதானம் மற்றும் இளைஞர்களுக்கான தலைமைத்துவம் தொடர்பான கருத்துரைகள் இடம்பெற்றது.

இளைஞர்கள் மத்தியில் இருந்து தலைமைத்துவத்தினையும் நல்லிணக்கத்துடன் கூடிய சமாதானத்தினை கட்டியெழுப்புதல் தொடர்பான கலந்துரையாடல்களும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் வன்னிப்பாராளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். (9-299)

# தமிழர் மேம்பாட்டு ஒன்றியத்தின் கலந்துரையாடல்





(குருமன்காடு)
தமிழர்களின் கல்வியை மேம்படுத்தும் நோக்கில் தமிழர் மேம்பாட்டு ஒன்றியத்தின் கலந்துரையாடல் வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம் பகுதிகளில் பின்னடைந்துள்ள தமிழர்களின் கல்வியை மேம்படுத்தும் நோக்கில் பேராசிரியர் எஸ்.சந்திரசேகரன் மற்றும் பேராசிரியர் எம்.கருணாநிதி தலைமையில் தமிழர் மேம்பாட்டு ஒன்றியம் உருவாக்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக ஒன்றியத்தை மக்களுக்கு அறிமுகப்படுத்துவதற்கும், பொதுமக்களின் அபிப்பிராயத்தை பெற்று ஒன்றியத்தின் வேலைத்திட்டங்களை முன்னெடுத்து கல்வி அபிவிருத்தியை ஏற்படுத்தும் நோக்கில் இக் கலந்துரையாடல் இடம்பெற்றது. இக்கலந்துரையாடலில் கல்வியை மேம்படுத்தும் நோக்கில் பல்வேறு கருத்துக்களையும் அதிலுள்ள சவால்கள் தொடர்பிலும் பலர் தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

ஒன்றியத்தின் வடமாகாண இணைப்பாளர் இரா.ராஜேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் கொழும்பு பல்கலைக்கழக பேராசியர்களான எஸ்.சந்திரசேகரன் மற்றும் எம். கருணாநிதி, வவுனியா கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ். பார்த்தீபன், ஒன்றியத்தின் கொழும்பு மற்றும் மலையக பகுதி இணைப்பாளர் இந்திரஜித், அதிபர்கள், ஆசிரியர்கள், சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (9-250)

# துணுக்காய் பிரதேசத்தில் பெறுமதிவாய்ந்த காட்டு மரங்கள் பெருமளவில் அழிப்பு

(கண்டாவளை)
முல்லைத்தீவு துணுக்காய் பிரதேசத்திற்குட்பட்ட ஐயன்கன்குளம்,பழைய முறிகண்டி ஆகிய பகுதிகளில் பெருமளவான பெறுமதி வாய்ந்த காட்டு மரங்கள் சட்டவிரோதமாக வெட்டப்பட்டு வெளியிடங்களுக்கு கொண்டு செல்லப்படுவதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு துணுககாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஐயன்கன்குளம்,பழையமுறிகண்டி, புத்துவெட்டுவான் ஆகிய பகுதிகளில் பெறுமதி வாய்ந்த பாலை முதிரை போன்ற மரங்கள் எந்தவித அனுமதிகளுமின்றி பகல் வேளைகளில் வெட்டப்பட்டு மிகவும் பாதுகாப்பாக வெளியிடங்களுக்கு கொண்டு செல்லப்படுவதாகவும் இதனால் இப்பிரதேசங்களில் இயற்கை வளங்கள் அழிவடைந்து வருவதாகவும் பிரதேச மக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

குறிப்பாக, மிகவும் பெறுமதி வாய்ந்த மரங்கள் வனவளத் திணைக்களத்தின் ஆளுகைகளுக்கு உட்பட்ட பகுதிகளில் வெட்டப்பட்டு வெளியிடங்களுக்கு கொண்டு செல்லப்படுவதற்கு பல உயரதிகாரிகள் உடந்தையாக இருந்து வருவதாகவும் இதனாலே இதனை கட்டுப்படுத்த முடியாத நிலை காணப்படுவதாகவும் சுட் டிக்காட்டியுள்ள பிரதேச மக்கள் இவ்வாறான வளங்கள் அழிக்கப்படுவதை கட்டுப்படுத்த உரிய அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-315)

## ஜி.எஸ்.பி.வரிச்சலுகை தொடர்பான கலந்துரையாடல்



(குருமன்காடு)

இலங்கை மனித மற்றும் தொழிலாளர் உரிமை மீறல் தொடர்பிலான குழுவினரால் ஜி.எஸ்.பி.வரிச் சலுகை தொடர்பான கலந்துரையாடல் வவுனியா புகையிரத நிலையத்திற்கு அருகேயுள்ள விருந்தினர் விடுதியில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

இக் கலந்துரையாடலின் போது ஐரோப்பிய ஒன்றியத்தால் இலங்கைக்கு வழங்கப்படும் ஜி.எஸ்.பி வரிச்சலுகை மற்றும் அதுசார்ந்த தெளிவுதன்மை, வவுனியா வடக்கில் பெரும்பான்மையினத்தவரின் ஆக்கிரமிப்பு, வடக்கில் தமிழ் மொழி புறக்கணிப்பு , தமிழர்களின் பூர்வீக இடங்களை தொல்பொருள் திணைக்களம் ஆக்கிரமிப்பது , வவுனியாவில் பொது மக்கள் அதிகமாக எதிர்நோக்கும் பிரச்சினைகள், வவுனியா மாவட்டத்தின் தற்காலிக நிலைமைகள், மனித உரிமைகள் சார்ந்த விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இச் கலந்துரையாடலில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரச சார்பற்ற நிறுவனத்தின் பிரதி நிதிகள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.(9-250)

# ஓ.எம்.பி அலுவலகத்தை யாருக்காகத் திறந்தீர்கள்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கேள்வி

(நெளுக்குளம்)

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகம் (ஓ.எம்.பி) யாருக்காக, யாரின் ஒத்துழைப்புடன் திறந்தீர்கள் என வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் வவுனியா சங்கம் கேள்வி எழுப்பியுள்ளதுடன் காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கோரி எதிர்வரும் 30 ஆம் திகதி ஓமந்தையில் பாரிய போராட்டத்தினையும் நடத்தவுள்ளதாகவும் தெரிவித்தனர்.

வவுனியா ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர்கள் மேற்கண்டவாறு கேள்வியெழுப்பியிருந்தனர் அவர்கள் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

சர்வதேசத்திற்கான கண்துடைப்பாக இந்த அலுவலகம் திறக்கப்பட்டுள்ளதே தவிர மக்களின் தேவைக்காக இது திறக்கப்படவில்லை. நாம் குறித்த அலுவலகத்தினை எதிர்த்து போராடிய போதிலும் நீங்கள் யாருடைய அனுமதியும் இன்றி திறந்துள்ளீர்கள். இது காணாமல் ஆக்கப்பட்டோருக்காக திறக்கப்பட்டதா? அல்லது வேறு யாருக்காகவும் திறக்கப்பட்டதா?




பட்டப்பகலில் திறக்க வேண்டிய அலுவலகத்தை அதிகாலையில் திறக்கவேண்டிய தேவை என்ன?. எங்கள் உறவுகளுக்கு நீதியைத்தேடி தரப் போகின்றீர்களா? இல்லாவிட்டால் உங்கள் தேவைகளை நிறைவேற்றுவதற்காக இதனை திறந்தீர்களா? என காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகத்தினரை பார்த்து கேட்கின்றோம்.

நாங்கள் நீதிக்காகவே போராடுகின்றோம். பணத்திற்காகவோ சுகபோகத்திற்காகவோ போராடவில்லை. எமக்கும் வீடு இருக்கின்றது. பிள்ளைகள் இருக்கின்றது. எனினும் நாம் வீதியோரங்களில் போராடுவது எமது உறவுகளுக்காகவே. எமது போராட்டத்தினை மிகவும் கொச்சைப்படுத்தாதீர்கள்.

இந்நிலையிலேயே நாம் எதிர்வரும் 30 ஆம் திகதி பாரியளவிலான போராட்டமொன்றினை முன்னெடுக்கின்றோம்.

வவுனியா பன்றிக்கெய்த குளத்தில் இருந்து எமது உறவுகளை இராணுவத்திடம் கையளித்த ஓமந்தை சோதனைச்சாவடி இருந்த இடம்வரையும் பேரணியாக செல்லவுள்ளோம்.

இதற்கு அரசியல் கட்சி பேதமின்றி அனைவரும் கலந்துகொள்ள வேண்டும். அத்துடன் பொது அமைப்பினர், மாணவர்கள், இளைஞர்கள் கலந்துகொண்டு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு நீதிகோரிய போராட்டத்திற்கு ஆதரவு வழங்குமாறும் தெரிவித்தனர். (9-299)




# நந்திக்கடல் வளங்களை விழுங்கும் வனஜீவராசிகள் திணைக்களம்

## சிவமோகன் எம்.பி.ஆவேசம்



(அக்கராயன்)

முல்லைத்தீவு வட்டுவாகல் மக்களின் நந்திக்கடல் வளங்களை முதலை போல் வனஜீவராசிகள் திணைக்களம் விழுங்குகின்றது என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மக்களுக்கு கடல் நீரேரி வெற்றிலைக் கேணி சாலையில் இருந்து விரிந்து கொக்கிளாய் நாயாறு எல்லை வரை செல்லும் இந்த கடல் நீரேரி அவர்களின் வாழ்வாதாரம். அந்த வாழ்வாதார பிரதேசமான இதை நந்திக்கடல் களப்பு என்று அழைப்பதுண்டு

இந்த நந்திக்கடல் களப்பில் பெருந்தொகையான நண்டு, இறால், மீன் போன்றவை அதிகளவில் காணப்படுவதுடன் வருடா வருடம் மீனவர்களுக்கு நல்ல வருமானங்களை பெற்றுக் கொடுக்கும் களப்பு பிரதேசம் ஆகும். இந்த வட்டுவாகல் களப்பின் ஊடாக பெருங்கீடலுடன் மழைகாலங்களில் இணைப்பை ஏற்படுத்தும் காலத்தில் பெருந் தொகையான இறால் மீன்கள் முட்டையிட்டு இனப்பெருக்கம் செய்து வருவது சாதாரண நடைமுறையாக இருந்து வருகிறது.

இதனால் என்றும் கடல் உணவுகளுக்கு தட்டுப்பாடுகள் நிகழ்ந்தது இல்லை. விசேடமாக இப்பகுதியில் பிடிபடும் கடல் உணவுகளே மிகவும் சுவையானவை. இவற்றில் பெருந் தொகையானவை கொழும்பிற்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. கொழும்பில் உள்ள நட்சத்திர விடுதிகளில் கூட இப்பகுதி கடலுணவிற்கு அதிகமான மவுசு உண்டு.

எனவே இந்த களப்புப் பகுதியில் மணல்கள் குவிந்து ஆழம் தூர்ந்து போயுள்ளது. மண்களை அகற்றி களப்புப் பகுதியை ஆழப்படுத்துவதற்கான முயற்சிகளை முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழு எடுத்தது. அதற்கான பண ஒதுக்கீடுகளும் செய்யப்பட்டிருந்தது. ஆனால் அதற்கு தடையாக இருப்பது வனஜீவராசிகள் திணைக்களம். எங்கோ இருந்தவர்கள் திடீரென 2009இன் வர்த்தமானி அறிவித்தல் மூலம் எமது வளத்தை மத்திய அரசின் மூலம் சூறையாடி இருக்கிறார்கள். இதனால் மீன்பிடித் தொழிலை வாழ்வாதாரமாக கொண்ட மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகிறார்கள்.

எனவே மக்களின் வாழ்வாதாரங்கள் பாதிக்காதபடி வனஜீவராசிகள் திணைக்களம் நடக்க பழகிக் கொள்ள வேண்டும் என மேலும் தெரிவித்தார். (9-350)

# மண் அகழ்வினால் விவசாயம் பாதிப்பு

(அக்கராயன்)

கிளிநொச்சி அக்கராயன் ஆற்றுப் பகுதியில் கடந்த பத்தாண்டுகளாக தொடர்கின்ற மணல் அகழ்வு காரணமாக அக்கராயன் குளத்தின் கீழான விவசாய முயற்சிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

அக்கராயன் குளப் பகுதியில் இருந்து நீண்டு செல்லும் ஆறு பூநகரியின் குடமுருட்டிக் குளத்துடன் முடிவடைகின்றது. எட்டு கிலோ மீற்றர் தூரங் கொண்ட இவ் ஆற்றுப் பகுதியில் அக்கராயன், ஸ்கந்தபுரம், கண்ணகைபுரம் ஆகிய மூன்று கிராம அலுவலர் பிரிவுகளில் மக்கள் விவசாய முயற்சிகளில் ஈடுபடுகின்றனர்.

கடந்த பத்தாண்டுகளாக தொடர்கின்ற மணல் அகழ்வினால் வயல் நிலங்கள் உவர் நிலங்களாக மாறி வருகின்றன. கிணறுகளின் நீர் மட்டம் வேகமாக குறைந்து வருகின்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.

குறித்த ஆற்றுப்பகுதியில் மணல் அகழ்வு முற்றாக நிறுத்தப்படாவிட்டால் அக்கராயன் குளத்தின் கீழான விவசாய முயற்சிகள் கைவிடப்படுகின்ற அபாய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கும் விவசாயிகள் கிளிநொச்சி மாவட்டத்தின் முக்கிய அதிகாரிகள் மணல் அகழ்வுடன் தொடர்புபட்டிருப்பதன் காரணமாகவே கடந்த பத்தாண்டுகளாக அக்கராயன் குளத்தின் கீழான மணல் அகழ்வு தொடர்வதாகவும் தெரிவிக்கின்றனர்.

அக்கராயனில் இருந்து பூநகரி வழியாகவும் திருமுறிகண்டி வழியாகவும் டிப்பர்களில் வெளியிடங்களுக்கு மணல் கொண்டு செல்லப்படுவதாகவும் விவசாயிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.(9-350)



வவுனியா கனகராஜன்குளம், குறிசுட்டகுளம், அம்பாள் நகர், ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழாவில் ஆலய வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட கிராம அலுவலகர் உட்பட 14பேருக்கு கௌரவிப்பு வழங்கி வைக்கப்பட்டுள்ளது. வவுனியா வடக்கு கனகராஜன்குளம், குறிசுட்டகுளம் அம்பாள் நகர் தெற்கு கிராம அலுவலகர் உட்பட ஆலய வளர்ச்சிக்காக அர்ப்பணிப்பான சேவைகளை வழங்கிய கிராம மக்களை கௌரவிப்பு செய்து வைக்கும் நிகழ்வு ஆலய வருடாந்த பொங்கல் விழாவான நேற்று முன்தினம் ஆலய பரிபாலன சபையினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (படங்கள்:- நெளுக்குளம் செய்தியாளர்)

# இணையத்தளங்களுக்கு எதிராக முறைப்பாடு

(மன்னார்)

பல கோடி ரூபாய் பணம் பெற்றுக் கொண்டார் என்ற ஆதாரமற்ற செய்தியினை பகிர்ந்தமை தொடர்பில் சில இணையத் தளங்களுக்கு எதிராக பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் நேற்று முன்தினம் முறைப்பாடொன்றினை பதிவு செய்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆதாரமற்ற உண்மைக்கு புறம்பான குறித்த செய்தியை வெளியிட்ட இணையத் தளங்களுக்கு குற்றப் புலனாய்வுத்திணைக்களத்தில் முறைப்பாட்டினை பதிவு செய்துள்ளேன்.

இதனுடன் தொடர்புடையவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கும் குறித்த இணையத் தளங்களை முடக்குவதற்குமான வழக்கு தொடர்தலின் முதற்கட்டமாக முறைப்பாட்டினை மேற்கொண்டுள்ளேன்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளுக்கெதிராக மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் இத்தகையவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி இவர்களின் நடவடிக்கைகளை முடிவுக்கு கொண்டு வருவது அவசியமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (9-285)

# பாரதம்

## தமிழகத்திலுள்ள முக்கிய ஆலயங்களில் தாக்குதல் நடத்தவுள்ள பயங்கரவாதிகள்

### உளவுத்துறை எச்சரிக்கை



(சென்னை)

தமிழகத்தில் உள்ள முக்கிய ஆலயங்களில் தாக்குதல் நடத்த பயங்கரவாதிகள் தீர்மானித்துள்ளதாக உளவுத்துறை எச்சரிக்கை விடுத்தது. இந்திய உளவுத்துறை அதிகாரிகள் பயங்கரவாதிகளின் தாக்குதல் குறித்து பட்டியல் ஒன்றை வெளியிட்டனர்.

இதன்படி நாகை அருகே உள்ள வேளாங்கன்னி ஆலயம், நீலகிரி மாவட்டத்தில் உள்ள இராணுவப் பயிற்சி மையம், சூலூரில் உள்ள விமானப்படை தளம், கேரளாவில் உள்ள சபரிமலை ஐயப்பன் ஆலயம், விநாயகர் சதுர்த்தி ஊர்வலம் ஆகியவை பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதில் இராணுவப் பயிற்சி மையமும், சூலூர் விமானப் படைத்தளமும் உயரிய பாதுகாப்பு வளையத்துக்குள் கொண்டு வரப்பட்டது.

தமிழகத்தில் 6 தீவிரவாதிகள் ஊடுருவியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ள நிலையில் முக்கிய பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மின்னல் தாக்கம் ஐவர் உயிரிழப்பு

### 100 இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயம்




போலந்து, ஸ்லோவாக்கிய மலைப்பகுதியில் மின்னல், இடி தாக்கி ஐவர் உயிரிழந்துள்ளதுடன், 100 இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

Essonne மலைப்பகுதியில் மலையேறிகள் பயணம் செய்து கொண்டிருந்த போதே இவ்வாறு மின்னல் தாக்கியது.


மலையேறிகள் பயணத்தைத் தொடங்குவதற்கு முன்னர் வானிலை தெளிவாக இருந்ததாகவும், எனினும் அதன் பின்னர் எதிர்பாராத நேரத்தில் மின்னல் தாக்கியதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதன்போது காயமடைந்தவர்கள் சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## காட்டுத் தீயை அ சமூக ஆர்வலர்கள்

### படையினரை அ






புவி வெப்பமடைதலை எதிர்கொள்வதில் முக்கிய பங்கு வகிக்கும் அமேசன் மழைக் காடுகளில் வரலாற்றில் எப்போதும் இல்லாத வகையில் இந்தாண்டு அதிக முறை காட்டுத்தீ ஏற்பட்டுள்ளது.

இதனால் பல்லாயிரக்கணக்கான ஏக்கர்கள் நிலப்பரப்பில் உள்ள மரங்கள் மற்றும் பல்வேறு உயிரினங்கள் தீக்கிரையாகி வருகிறது. இந்தக் காட்டுத் தீயை அணைக்கும் முயற்சியில் தீயணைப்புப் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

சர்வதேச தலைவர்கள், பல்வேறு நாடுகளை சேர்ந்த நடிகர்கள், நடிகைகள் மற்றும் சமூக ஆர்வலர்கள், அமேசன் காடுகளில் பற்றி எரியும் தீ குறித்து கவலை தெரிவித்து வருகின்றனர்.

இதற்கிடையில் பிரான்சில் நடைபெறும் ஜி-7 உச்சி மாநாட்டில் அமேசன் காட்டுத்தீ குறித்து விவாதிக்க அந்நாட்டின் ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரான் சர்வதேச தலைவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

பிரேசில் ஜனாதிபதி போல்சோனரோ பொய்யான தகவல்களைத் தருவதாக பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரான் குற்றம் சாட்டியுள்ளார். கடந்த ஜூன் மாதம் நடைபெற்ற ஜி-20 மாநாட்டில் சுற்றுச்சூழல் பிரச்சினையை பிரேசில் ஜனாதிபதி போல் சோனரோ பெரிதுபடுத்தவில்லை என்றும் பிரான்ஸ் தெரிவித்துள்ளது.

இம்மானுவேல் மெக்ரானின் இந்த கருத்துக்கு பிரேசில் ஜனாதிபதி போல்சனாரோ, அமேசன் காட்டுத்தீ பிரச்சினையில் உலக நாடுகள் தலையிட வேண்டாம் எனக்காட்டமாக பதில் அளித்தார். பிரேசில் ஜனாதிபதி தீயை அணைக்க இராணுவத்தை அனுப்ப உத்தரவிட்டுள்ளார்.

அமேசன் காட்டுத்தீயை அணைக்கக்கோரி சமூக ஆர்வலர்கள் ஆங்காங்கே போராட்டம்நடத்திவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## போராட்டக்காரர்கள்- பொலிஸாரிடையே தள்ளுமுள்ளு கண்ணீர்ப் புகைக்குண்டு வீசப்பட்டதால் பரபரப்பு

(ஹொங்கொங்)

ஹொங்கொங்கில் போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் கண்ணீர்ப் புகைக்குண்டுகள் வீசப்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

ஹொங்கொங்கில் குற்றவியல் வழக்குகளில் சிக்குபவர்களை சீனாவுக்கு நாடு கடத்தி, வழக்கு விசாரணையை சந்திக்க வைக்க ஏதுவாக கைதிகள் பரிமாற்றச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவர ஹொங்கொங் நிர்வாகம் முடிவு செய்தது.




இந்நிலையில், ஹொங் கொங் போராட்டத்தின் 12 ஆவது வாரமான நேற்று அந்நகரின் குவாங் டோங் பகுதியில் திரண்ட ஆயிரக்கணக்கானோர் தங்கள் முகங்களை முகமூடிகளால் மறைத்துக் கொண்டு அரசுக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது, போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே திடீரென தள்ளுமுள்ளு ஏற்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. (ஐ)

## ஐ.எஸ். அமைப்பின் முக் தன் சகாவிடம் கையளி

(பக்தாத்)

ஐ.எஸ். அமைப்பின் த்லைவர் அபு பக்கர் அல் பக்தாதி காயமடைந்துள்ளார் எனவும் இதன் காரணமாக அவர் அமைப்பின் தலைமைப்பொறுப்பை முன்னாள் ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைனின் இராணுவத்தைச் சேர்ந்த அப்துல்லா குர்தாஸ் என்பவரிடம் கையளித்துள்ளார் எனவும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தலைமறைவாகியிருந்த ஐ.எஸ். அமைப்பினை மீண்டும் வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பக்தாதி ஐ.எஸ். அமைப்பை மீண்டும் கட்டியெழுப்பும் பொறுப்பை அப்துல்லா குர்தாஸ் என்பவரிடம் ஒப்படைத்துள்ளார் என ஐ.எஸ். அமைப்பின்



ஊடகமான அமாக் தெரிவித்துள்ளது.

அப்துல்லா குர்தாஸ் சதாம் ஹுசைனின் இராணுவத்தில் பணியாற்றியவர் எனவும் 2003 இல் பஸ்ராவில் இவரும் அல்பக்தாதியும் அமெரிக்கப் படையினரால் தடுத்துவைக்கப்பட்டிருந்தவேளை இவர் பக்தாதிக்கு நெருக்கமானவராக மாறினார் என்றும் பஸ்ராவில் தடுத்து

# வெளிநாடு

## ணைக்குமாறு
## ள் போராட்டம்
### அனுப்பிய பிரேசில்






## ழக்கிய பொறுப்புக்களை
## ளித்தாரா அல்-பக்தாதி?



வைக்கப்பட்டிருந்த வேளையே அல்பக்தாதி அங்கிருந்த பலரை தீவிரவாதிகளாக மாற்றினார் எனவும் சுட்டிக்காட்டின.

அதன் பின்னர் அப்துல்லா குர்தாஸ் ஐ.எஸ். அமைப்பின் தலைவருக்கு நெருக்கமானவராக மாறினார் எனத் தெரிவித்துள்ள சர்வதேச ஊடகங்கள் பேராசிரியர் என அழைக்கப்படும் இந்த நபர் அமைப்பின் ஈவிரக்கமற்ற கொள்கை வகுப்பாளர் என்றும் தெரிவித்தது. சிரியா மற்றும் ஈராக்கிலிருந்து அகற்றப்பட்டுள்ள ஐ.எஸ். அமைப்பை மீளக் கட்டியெழுப்புவதற்காக அல் பக்தாதி அப்துல்லா குர்தாஸை தெரிவு செய்துள்ளார் என ஐ.எஸ். விவகாரத்தில் நிபுணத்துவம் பெற்றவர்கள் தெரிவித்தனர்.

இந்த நியமனத்திற்கு மூன்று காரணங்கள் இருக்கலாம் அமைப்பின் பலவீனங்களை கண்டறிவதற்காக பக்தாதி அப்துல்லா குர்தாஸினை நியமித்திருக்கலாம், எதிர்காலத்தில் அவரைத் தலைவராக மாற்றும் திட்டத்துடனும் இந்த நியமனத்தை அல் பக்தாதி மேற்கொண்டிருக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ)

## நைஜீரியாவில் கோர விபத்து
## 17 பேர் உடல் நசுங்கிப்பலி!

(அபுஜா)

நைஜீரியா நாட்டில் பயணிகள் வான் மீது சரக்கு லொறி மோதிய விபத்தில் 17 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

நைஜீரியா நாட்டின் குவாரா மாநிலத்தில் உள்ள ஜேபா-இரோனி பிரதான வீதியில் வான் ஒன்றில் 19 பேர் பயணித்தனர். அந்த பிரதான வீதியில் உள்ள வளைவு ஒன்றில் வான் வேகமாகத் திரும்பியபோது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியின் எதிரே வந்த சரக்கு லொறி மீது பயங்கரமாக மோதியது.



இந்தக் கோர விபத்தில் வானில் பயணம் செய்த 17 பேர் உடல் நசுங்கி பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் 2 பேர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். (ஜ)

## மீண்டும் கறுப்புப்பட்டியலில் பாகிஸ்தான்;
## நிதி நடவடிக்கை அதிரடிக் குழு தீர்மானம்

(சிட்னி)

இரண்டாவது முறையாக பாகிஸ்தான் நிதி நடவடிக்கை அதிரடிக் குழுவின் ஆசியா-பசுபிக் பிரிவின் மூலம் சர்வதேச அளவில் பின்னடைவை சந்தித்துள்ளது.

ஜம்மு காஷ்மீருக்கு வழங்கப்பட்ட சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப்பட்டு, அம்மாநிலம் லடாக்-ஜம்மு காஷ்மீர் என இரு யூனியன் பிரதேசமாக பிரிக்கப்பட்டது. இதனை கடுமையாக எதிர்த்த பாகிஸ்தான், இந்த விவகாரத்தை ஐ.நா. பொதுச்சபைக்குக் கொண்டு சென்றது.

ஆனால், அங்கு பாகிஸ்தான் தோல்வியைத் தழுவியது. சர்வதேச அளவில் பாகிஸ்தானுக்கு இது மிகப்பெரும் பின்னடைவாக இருந்தது. இந்நிலையில் இரண்டாவது முறையாக பாகிஸ்தான் மிகப்பெரிய பின்னடைவைச் சந்தித்துள்ளது.

நிதி நடவடிக்கை அதிரடிக் குழுவின் ஆசியா-பசுபிக் பிரிவு. நிதி மோசடி மற்றும் பயங்கரவாதிகளுக்கு நிதி அளிப்பது போன்றவற்றை தொடர்ந்து கண்காணித்து வருகிறது. இந்த அமைப்பு நேற்று முன்தினம் அவுஸ்திரேலியாவில் ஆலோசனை கூட்டம் ஒன்றை நடத்தியது.

இந்த ஆலோசனையில் பாகிஸ்தானை கறுப்புப் பட்டியலில் வைப்பது குறித்து ஆலோசிக்கப் பட்டது. பயங்கரவாதிகளுக்கு நிதி அளிப்பதில் இருக்கும் 40 காரணிகளில் 32 காரணிகளில் பாகிஸ்தான் சிறப்பாக செயற்படவில்லை. மேலும் இந்த நிதியை கட்டுப்படுத்துவதற்காகவும் எவ்வித நடவடிக்கையும் பாகிஸ்தான் எடுக்கவில்லை.

இதன் விளைவாக பாகிஸ்தானை கறுப்புப் பட்டியலில் வைப்பது என முடிவெடுக்கப்பட்டது. ஏற்கனவே, பாகிஸ்தான் கிரே பட்டியலில் வைக்கப்பட்டிருந்தது. கடந்த ஜூன் மாதம் நடந்த ஆலோசனையில் பயங்கரவாதிகளுக்கு நிதி அளிப்பது தொடர்பாக ஒக்டோபர் மாதத்திற்குள் பதிலளிக்க வேண்டும் என கால அவகாசம் கொடுக்கப்பட்ட நிலையில் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ)


## வடகொரியா மீண்டும்
## ஏவுகணைச் சோதனை
### அமெரிக்காவுக்கு பகிரங்க மிரட்டல்

(சியோல்)

அமெரிக்காவிற்கு மிகப் பெரிய சவாலாக இருப்போம் என வடகொரியா கூறிய நிலையில் இரு சிறிய வகை ஏவுகணைகளை பரிசோதனை செய்தது.

கொரிய தீபகற்பத்தில் அமெரிக்கா மற்றும் தென்கொரியாவின் படைகள் கூட்டுப்பயிற்சியில் ஈடுபடுவதை எச்சரிக்கும் விதமாக வடகொரியா இரண்டு வாரங்களுக்கு முன்பு மீண்டும் ஏவுகணை சோதனைகளை தொடங்கியது.

இதனால் அமெரிக்கா, வடகொரியா நாடுகள் இடையே பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது.



அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் மைக் போம்பியோ தான் இந்த அணு ஆயுத விவகாரங்களில் பேச்சுவார்த்தைகள் நடைபெற சிக்கல்களை ஏற்படுத்துவதாகவும் அவர் ஒரு கொடிய விஷம் என் அமைச்சர் ரி யோங் ஹோ நேற்று முன்தினம் கூறினார். அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்தவும் தயார் அல்லது போட்டிக்கும் தயார் என எனத் தெரிவித்தார்.

இந்நிலையில் வடகொரியா சிறிய ரக இரு ஏவுகணைகளை கடலில் செலுத்தி சோதனை செய்துள்ளது. (ஜ)

# இஸ்லாமிய அடிப்படைவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகள் தொடரும்

## ருவான் குணசேகர உறுதி

(கொழும்பு)

**அவசரகாலச் சட்டத்தை நீக்கினாலும் கடந்த ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதல்கள் தொடர் பில் இஸ்லாமிய அடிப்படை வாதத்திற்கு எதிராக மேற் கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளுக்கும் கைது நடவடிக்கைகளுக்கும் தற்போது பயங்கரவாதத் தடுப்பு பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்ட சந்தேக நபர்களின் விளக்கமறியலுக்கும் மற்றும் அவர்களின் சொத்துக் களைத் தடை செய்வதற்கும் எந்தவிதமான பாதிப்பையும் ஏற்படுத்தாது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர தெரிவித்தார்.**



கொழும்பு ஊடகமொன்றில் வெளியாகியிருந்த செய்தி தொடர்பில் அவதானம்செலுத்திய பொலிஸ் தலைமையகம், இந்தச் செய்தி தொடர்பில் பொதுமக்களுக்கு தெளிவை ஏற்படுத்துவதற்காகவே இவ்வாறு அறிவித்தலை மேற்கொள்வதாகவும் பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தாக்குதல்களின் பின்னர் அடிப்படைவாதத்தை போதிக்கும் மூன்று அமைப்புக்கள் நாட்டில் தடைசெய்யப்பட்டன. அதன்படி தேசிய தௌஹீத் ஜமாத், ஜமாஅத்தே மில்லாது இப்ராஹிம் மற்றும் விலயா அஸ் செய்லானி எனப்படும் மூன்று அடிப்படைவாத அமைப்புக்கள் இவ்வாறு தடை செய்யப்பட்டன. இந்நிலையில் அவசரகாலச் சட்டத்தை நீக்குவதனால் இவற்றுக்கு விதிக்கப்பட்ட தடையும் நீக்கப்படும் என்பது தவறானதாகும்.

இந்த அமைப்புக்கள் கடந்த மே மாதம் 13 ஆம் திகதி தடை செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டன. அதற்கமைய 22233 இலக்க விசேட வர்த்தமானி அறிவித்தலில் இந்தத் தடை தொடர்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதன்போது 1979 ஆம் ஆண்டு 48 ஆம் இலக்க சட்ட கோவைக்கமையவே இந்த அமைப்புக்கள் தடை செய்யப்படுவதாக வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் அவசரகாலச் சட்டத்தை நீக்குவதானாலும் இந்த அமைப்புக்களுக்கு விதிக்கப்பட்ட தடை ஒருபோதும் நீக்கப்படாது.

அதேவேளை பயங்கரவாதத் தாக்குதலின் பின்னர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 200 பேரும் அவசரகாலச் சட்டத்தை நீக்குவதனால் விடுதலை செய்யப்படுவதாக குறிப்பிட்டிருப்பதும் சாத்தியமற்றது. இவர்கள் அனைவரும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழே கைது செய்யப்பட்டனர். இவர்களின் விசாரணைகள் முடிவுறும் வரை எந்தச் சந்தேக நபர்களும் விடுதலை செய்யப்பட மாட்டார்கள். மற்றும் இந்தத் தாக்குதல்கள் தொடர்பில் மேலும் சந்தேக நபர்கள் கண்டறியப்பட்டால் அவர்கள் தொடர்ந்தும் கைது செய்யப்படுவர். இந்த விசாரணை செயற்பாடுகளுக்கு அவசரகாலச் சட்டம் நீக்கம் எவ்வித பாதிப்புக்களையும் ஏற்படுத்தாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மின்சாரம் தாக்கி இராணுவச் சிப்பாய் பலி!

(சிகிரியா)

சிகிரியா பகுதியிலுள்ள இனாமலுவ இராணுவ முகாமில் நேற்றுக்காலை மின்சாரம் தாக்கி இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் 23 வயது ஊவா பரணமக பகுதியைச் சேர்ந்த அசங்க உதய குமார என்பவர் ஆவார்.

மின்சாரம் தாக்கியதையடுத்து தம்புள்ளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னரே இவர் உயிரிழந்தார். (இ-7)

# நாட்டை நேசிக்கும் தலைவரை ஜனாதிபதியாக்க சு.க.ஆதரவு

## நிமால் திட்டவட்டம்

(கொழும்பு)

தேசிய பாதுகாப்பு பற்றிச் சிந்திக்கும், நாட்டை நேசிக்கும் தலைவர் ஒருவரை ஜனாதிபதியாக தெரிவு செய்ய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவளிக்கும் என அந்தக் கட்சியின் பதுளை மாவட்ட் நாடாளுமன்ற உறுப்பினர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

ஹல்துமுல்லை பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டை நேசிக்கும் அரசியல் கட்சி மற்றும் தலைவரை சரியான நேரத்தில் நாட்டு மக்கள் தெரிவு செய்வார்கள். தற்போது நாட்டின் இராணுவத் தளபதியை நியமித்தாலும் வெளிநாடுகள் அழுத்தங்களைக் கொடுக்கின்றன.

எமது நாட்டின் பிரச்சினையை நாங்கள் பார்த்துக்கொள்கின்றோம் என்று கூறும் தலைவரை



நாங்கள் ஜனாதிபதியாகத் தெரிவு செய்வோம் எனவும் நிமால் சிறிபால டி சில்வா மேலும் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பொய்

"எனக்குப் பொய்யே பேசத் தெரியாது சேர்" என்று என்னிடம் வந்து சொன்னார் ஒருத்தர். "அவர் வாழ்க்கையிலே அவர் சொல்கிற மிகப் பெரிய பொய் அதுதான்" என்கிற உண்மை எனக்குத் தெரியும். பொய் பேசுறதை ஒரு கலையாகவே செய்து கொண்டு வருகிறவர் அவர்.

பொய்யிலே எத்தனை வகை இருக்கு? அது எந்தெந்த இடத்திலே எப்படியெல்லாம் உபயோகப்படுது என்பது பற்றியெல்லாம் அவர் ஏற்கனவே என்னிடம் விலாவாரியாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

அதிலே அவர் நிபுணர். அதனாலே அவர் சொல்லுகிற விபரத்தை நாமும் தெரிந்து வைத்திருக்கிறது நல்லது. முகஸ்துதி என்று சொல்கிறோமல்லவா அது ஒரு வகையான பொய். ஒரு பெரிய மனிதனிடம் போய் காரியம் சாதிக்க வேண்டியிருக்கு. என்ன செய்கிறோம்?

"உன்னைப் போல உண்டா? ஆகா...ஓகோ..." என்று புகழ ஆரம்பித்து விடுகிறோம். கர்ணனுடைய மறு அவதாரம் நீங்கதான் என்கிறோம். உடனே அவரும் கையிலே கிடைத்ததை அள்ளிக் கொடுக்கிறார்.

முகஸ்துதியிலே உள்ள ஒரு 'சைக்கலாஜி' என்ன தெரியுமா? செய்யிறது முகஸ்துதிதான் என்கிறது கேட்கிற எங்களுக்கும் தெரியும். இருந்தாலும் மனசுக்கு அதைக் கேட்கிறபோது ரொம்ப சந்தோசம் இருக்கு? இது மனித இனத்தின் பலவீனம்.

அடுத்தவர்களை புகழ்வதற்குப் பேர் முகஸ்துதி. நம்மையே புகழ்ந்து கொள்வதற்குப் பேர் தற்புகழ்ச்சி. அதுவும் ஒரு வகையான பொய் தான். எப்படித் தெரியுமா?

நம்மிடம் உள்ள குறைகளை மறைத்து நிறைகளை மிகைப்படுத்தி பேசுகிறோம். இதனாலே மற்றவர்களுக்கு நம்முடைய உண்மையான சொரூபம் தெரியுறதில்லை. மறைத்து விடுகிறோம். இது பொய் தானே.

'சாக்குப்போக்கு' சொல்கிறார்களே. அதுவும் பொய்யிலே ஒரு ரகம். பல சமயங்களிலே நம்ம கடமையை நாம் ஒழுங்காகச் செய்வதில்லை. கொடுத்த வாக்குறுதியை மீறி விடுகிறோம்.

அந்தச் சமயத்திலே நம்ம தப்பை மறைக்கிறதுக்காக பொய் சொல்கிறோம். அந்த இடத்திலே அதுக்குப் பேர் சாக்குப் போக்கு.

'வீண்பேச்சு' என்று சொல்கிறோமல்லவா...அதுவும் பொய்யிலே ஒரு வகை தான்.

ஏதோ பொழுது போக வேண்டும் என்பதற்காக இல்லாததையும் பொல்லாததையும் பேசிக் கொண்டிருக்கிறோம் பாருங்கள். அதிலே பொய் கலப்பு அதிகமாக இருக்கிறது.

'அவதூறு' என்று சொல்கிறோமல்லவா... அதுவும் ஒரு வகையான பொய்தானாம்.

அடுத்தவர்கள் புகழை கெடுக்கிற மாதிரி, நிம்மதியை குலைக்கிற மாதிரி நாம் பேசுகிறோமே அதுக்குப் பேருதான் அவதூறு.

"அவன் என்ன சேர் பெரிசா சாதித்து விட்டான். நான் சாதிக்காத சாதனையா?" என்று பேசுகிறவர்கள் எத்தனை பேர்?

பொய்யிலேயே ரொம்ப ட்ரோங்கான ஒரு ரகம் இருக்கு. அதுதான் பொய் சாட்சி.

இது ரொம்ப மோசம். அடுத்தவர்கள் வாழ்க்கையை ரொம்ப மோசமா பாதிக்கக்கூடியது இது.

ஒரு நீதிமன்றத்திலே போய் நின்று கொண்டு நடந்ததை நடக்கவில்லை என்றும். நடக்காததை நடந்ததென்றும் சொல்லுவது எவ்வளவு பெரிய மோசம்.

யாருக்கும் கெடுதல் இல்லாமல் ஒரு நல்லது நடக்க வேண்டும் என்றால் அதற்காக பொய் சொல்லலாம் என்கிறார் திருவள்ளுவர். அந்தப் பொய் உண்மைக்குச் சமம்.

ஒரு வேதாந்தியைப் பார்த்து இந்த உலகத்திலேயே பெரிய பொய் எது என்று கேட்டார் ஒருத்தர்?

"பொய்யான இந்த உடம்புக்கு 'மெய்' என்று பெயர் வைத்திருக்கிறோமல்லவா அது எவ்வளவு பெரிய பொய்" என்றார் அவர்.

"பொய் சொல்கிற வாய்க்குப் போசனம் கிடையாது" என்று ஒரு பழமொழி இருக்கு. இந்தப் பழமொழியிலே எனக்கு நம்பிக்கை இல்லை என்றார் ஒரு குடும்பத் தலைவர்.

"பொய் சொல்கிற வாய்க்குத்தான் சேர் போசனம் கிடைக்கும். என் மனைவியைப் பார்த்து நீ ரொம்ப அழகாக இருக்கிறாய் என்று தினமும் சொல்கிறேன். அதனாலே தான் சேர் எனக்கு தினமும் போசனம் கிடைத்திருக்கு" என்று சொல்லி விட்டு அதற்கு ஒரு விளக்கமும் கொடுத்தார். இவரை என்ன சேர் செய்யிறது.

# சிவயோக சுவாமிகள் சொன்ன சீலத்தை சிரமேற்கொண்ட

## நயினை- நல்லூர் திருத்தலப் பஜனைப் பாதயாத்திரை

சுவாமிகள் திருவடிக்கலப்புற்ற 1964 ஆம் ஆண்டை ஆரம்பமாகக் கொண்டது. நல்லைப் பதிக்கு நேராய் நடந்து போவோம் நாமெல்லாம் வாரீர் சீராய் என்ற குருநாதன் சிவயோக சுவாமிகள் சொன்ன சீலத்தை சிரமேற்கொண்டு கடந்த 54 ஆவது ஆண்டைத் தாண்டி 55 ஆவது ஆண்டில் கால்பதித்து நல்லைக் கந்தன் திருவருளை வேண்டி நிற்கும் சப்த தீவக திவ்ய ஜீவன சங்க சமாசம் யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்றவாறு நல்லைக் கந்தன் திருவருளின் செயற்பாட்டை நல்லைக் கந்தன் திருவீதியில் பொதிந்துள்ள தெய்வீக அருளின் வீச்சில் அள்ளுண்ட அடியவர்கள் உணர்வார்கள். சிவயோக சுவாமிகள் சொன்ன நற்சிந்தனை அருள் மந்திர வாசகங்கள் நல்லைக் கந்தன் தேரடித் திருவீதியின் திருவருளின் வெளிப்பாட்டை நிதர்சன உண்மையாக அனுபவ உணர்வு பூர்வமாக உணர வைக்கின்ற தன்மையை உணரலாம்.

நல்லைக் கந்தன் திருவீதியில் அருளாளருக்கு மாத்திரம் புலப்படுகின்ற அதிசயம் மெத்தவுண்டு. அதை சிவயோக சுவாமிகள் நற்சிந்தனையில் அந்நாளில் ஆசான் அருந்தவம் செய்த இடம் அதுவாதலாலே அதிசயம் மெத்தவுண்டு. அந்த அதிசயம் இன்றும் அருளாளருக்குப் புலப்படுகின்றது. நல்லைப் பதிக்கு நேராய் நடந்து போவோம் நாமெல்லாம் வாரீர் சீராய் என்று குருநாதன் சொன்ன சீலத்தை மெல்லத் தெளிந்தறிந்து செயற்பாட்டால் அதன் உட்பொருளை அனுபவ ரீதியாக உணரலாம். நல்லூரைக் கும்பிட்டு நீ பாடு அதனாலே நாட்டில் உள்ள பிணிகள் ஓடும் என்ற சுவாமிகளின் மகா மந்திர வாசகத்தின் வெளிப்பாடு நல்லைப் பதிக்கு நேராய் நடந்து போவோம் நாமெல்லாம் வாரீர் சீராய் என்பதன் உட்பொருள் உள்ளம் சீராக வசமானால் தான் அருளைப் பெறலாம்.

உடல் எடை சீராய் அமைந்து நேராய் என்பது ஒழுக்கத்தின் உச்சியில் நின்று நேரான இறை சிந்தனை நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் இருந்து வேல் தூக்கிவிட்டால் நல்லைக் கந்தனைப் பற்றிய நேரான சிந்தனை நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பதுன்னை என்று அபிராமிப் பட்டர் சொன்னவாறு காலால் நடக்கின்ற பஜனைப் பாதயாத்திரை. இப்பஜனைப் பா தயாத்திரை என்றால் உச்சியில் இருந்து உள்ளங்கால்வரை இறைவனுக்கு அர்ப்பணமாக்கி செல்கின்ற வழிபாடு புலன் ஒன்றினால் தான் இறைநாமத்தை இசையோடு மனம் ஒன்றிப் பாட முடியும். நல்லைக் கந்தனை நினைத்து வாய் பாட, கைகள் தாளம் போட, கால்கள் நடையால் உந்த, அருணகிரியார் அநுபூதியில் சொன்னவாறு புலப்படாத உந்துசக்தி உந்தித் தள்ளும் எல்லாம் அற என்னை இழந்து நலம் சொல்லாய் முருகா சரபூபதியே என்ற அருணகிரியாரின் பக்தி உணர்வு நமக்குத் தோன்றும் கடந்த கால அனுபவம்.

நல்லூர்க் கந்தன் பஜனைப் பாத யாத்திரையில் வருடா வருடம் கலந்து கொள்ளும் அடியார்கள் மற்றும் ஆலயங்களை தரிசிக்க பாதயாத்திரை செல்கின்ற அடியவர்கள் நாளாந்த நடைப் பயிற்சியையோ நாளாந்த யோகாவையோ செய்ய வேண்டியதில்லை. அனைத்தையும் உள்ளடக்கிய ஆண்டவனை நோக்கிய பஜனைப் பாதயாத்திரையில் கலந்து கொள்கின்ற அடியவர்கள் அனுபவ ரீதியாக உணர்ந்து அறிந்த உண்மை இது.

சிவயோக சுவாமிகள் நற்சிந்தனையில் சொன்ன மகாமந்திர வாசகங்கள் எக்காலத்திலும் உயிர் நாடித் துடிப்புடைய அருள் வாசகங்கள் சுவாமிகள் சொன்ன அருள் வழி நின்று உரசிப் பார்த்தால் அதன் தெய்வீக சக்தியின் அருள் திரளான அனுபவ ரீதியாக உணரலாம். நமக்குப் புலப்படாத ஒரு தெய்வீக சக்தி நம்மை வழி நடத்துகின்றது என்ற பேருண்மையை உணரலாம். 54 ஆண்டுகள் அனுபவித்தறிந்த உண்மை. தேரடியிற் சென்று தரிசித்தாற் போதுமெனப் பாரறியச் சொன்ன பழங்கதையை நீரறிய மாட்டீரோ. நின்று மனங் கசிந்து பாரீரோ நாடீரோ கேளீர். நல்ல மருந்தொரு குருமருந்தை நல்லைக் கந்தன் நமக்கு நல்லூரில் தந்தான். அருமருந்தான குருமருந்தான சிவயோக சுவாமிகள் குருவடிவாகி வந்து நல்வழிகாட்டி நல்லூர்க்கந்தன் திருவருள் சக்தியை உலகறிய வைத்தார். அரசனும் ஆண்டியும் நல்லை ஆண்டவன் திருமுன் சமனாக நின்று வழிபட திருவருளை சொரிந்தளித்த குருநாதன்.

அகிலம் அனைத்திலும் உள்ள ஆலயங்களுக்கெல்லாம் நிர்வாகச் செயற்பாடு எப்படி இருக்க வேண்டும் என்பதை சந்நிதானத்தில் அனைவரும் சமம் என்ற வலுவான ஒரு நடைமுறையை அணுவளவும் பிசகாமல் மிக இறுக்கமாக நடைமுறையில் செயற்படுகின்ற ஒரே ஒரு ஆலயம் நல்லைக் கந்தன் ஆலயம் தான். உலகுக்கு ஒருவனாய் நின்றாய் நீயே என்றவாறு நல்லூரான் பெருமையைப் பேசுவதும் பெரிதே. ஆண்டு தோறும் உன்னைக் காண நடந்து வருகின்றோம். நல்லூர் ஆண்டவனே நன்மை கோடி அடைந்து வருகின்றோம்.

இறை நாம பஜனை என்பது இன, மத மொழிக்கு அப்பாற்பட்டு அனைவரும் ஒன்றி சொல்கின்ற நாம சங்கீர்த்தனம் மைவருங் கண்டத்தர் மைந்தகந்தாவென்று வாழ்த்துமிந்தக்கை வரும் தொண்டு.

கலாபூஷணம் நயினை நாகமணி கோபாலகிருஷ்ணன்,
தலைவர், சப்த தீவக திவ்ய ஜீவன சங்க சமாசம்.




## அரும் தமிழில்

உள்ளத்தில் உருவத்தில்
எழுத்தில் எழுதா மறையில்
அள்ளக் குறையாத அரும்
தமிழில் உனை வைத்துக் காப்போம்!
கள்ளம் கபடமில்லாக் குழந்தை
வடிவில் காத்தருளும் கந்தா!
வள்ளம் வண்டியிலும் வண்டி
வள்ளத்திலும் செல்வது போல்
வளமான வாழ்வும் வசதிகளும்
தரவேண்டும் நல்லூரானே!

*இ. ஜெ. பாலன்*

## வாழ்வில் நலம் தந்தருள்பவனே

வாழ்வில் தினம் தொல்லையால்
துயருறும் மனிதர்களே நீங்கள் விரைந்தே ஓடி
வாருங்கள் நல்லைக்கு
அங்கு குடிகொண்ட இறைவன் முருகனே
முடிவு கட்டுவான் நம் வாழ்வின் தொல்லைக்கு
நம் துன்ப துயரங்கள் அனைத்தையும்
அவன் காலடியில் சேர்த்திடுங்கள்
எங்கள் வாழ்வில் என்றும்
நலம் தந்தருள்வான்

*சுப்பிரமணியம் ஜெயரூபன்*
*பருத்தித்துறை*

## முருகனே வருகவே

கஜவல்லி மகாவல்லி உற்சவம் இன்றே
கந்தன் நல்லையில் காண்கின்றான் நன்றே
வேல்விமான உற்சவ நல்லையில் கண்டே
வேண்டிய வரங்களை பெற்றிட வாரீர்

வேலவன் திருமுகம் நல்லையில் கண்டிடுவீர்
• வேதனையில்லா நல்வாழ்வு என்றும் வாழ்ந்திடுவீர்
நல்லைக் கந்தனை நன்றே தொழுவீர்
நாளும் சிறப்புடன் வாழ்வீர் வாழ்வீர்

*அரியாலையூர் கு. பிரதீபன்*

## பழவினை பறந்தோடிடுமே

தேவ சேனாதிபதி தெய்வானை மணாளன்
பாதம் பட்டால் எங்கும்
பாவம் பறந்தோடும் கூடும் அடியார்
குலம் செழிக்கும் என்றும்
வேதம் ஓதும் நல்லூரில் வீற்றிருந்து
எவர்க்கும் வரமருளும் நாதனின்
பாதக்கமலம் வாழ்த்தித் தொழ
பழவினை பறந்தோடிடுமே

*விஜயகண்ணன்*
*யாழ்ப்பாணம்*

## சந்தக் கவியில் நல்லைக் குமரன்!

அருவு மவ னுருவு மவன்
அருவே யுரு வாகான்
தருவு மவன் மருவும் வினை
தகர்க்கும் பொரு வானான்
கருவு மவன் குருவு மவன்
கருத்தும் மிக விரித்தும்
நெருகும் வகை பெருகும் தகை
நல்லைக் கும ரோனே!

*கலாபூஷணம்,*
*சந்தக்கவிஞர். நவ. பாலகோபால்.*

### நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

# கந்தபுராண எழுச்சி விழாவில் இன்று "வீரவாகுதேவர் தூது" சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவகாலத்தை முன்னிட்டு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நிகழ்வுகள் வரிசையில், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலாமண்டபத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற "கந்தபுராண எழுச்சி அருள்நெறி விழா - 2019"நிகழ்வின் 21 ஆம் நாள் வைபவம் இன்று மாலை 6 மணியளவில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் குரு முதல்வர், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாசார்ய சுவாமிகள் மற்றும் மயிலணி, சொர்ணவரதகாளியம்பாள் ஆலயப் பிரதம குரு பிரம்மஸ்ரீ ச.ஈஸ்வர சர்மா ஆகியோர் திருமுன்னிலை வகிக்க, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர், திருமதி. ஹேமலோஜினி குமரன் தலைமையில், பிரதம விருந்தினராக வடமாகாணச் சிறுவர் நன்னடத்தை ஆணையாளர் திருச்சிற்றம்பலம் விஸ்வரூபன் திருக்கேதீஸ்வரம், சிவனருள் அறக்கட்டளை ஸ்தாபகர், வைத்திய கலாநிதி ஜெயந்திரன் நமசிவாயம்(லண்டன்) ஆகியோர் கலந்து சிறப்பிக்க நிகழ்வுகள் இடம் பெறும்.

மன்னார்ப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட திருக்கேதீஸ்வரம், சிவனருள் மன்ற அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் பிரதி முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி, ச.லலீசனின் "வீரவாகுதேவர் தூது" எனும் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறும். சிறப்புச் சொற்பொழிவின்போது மாணவர்களிடையே சொற்பொழிவு தொடர்பான வினாக்கள் உள்ளடங்கிய வினாத்தாள் வழங்கப்பட்டுச் சிறப்புத் திறனை வெளிப்படுத்துவோர்க்குப் பரிசில்களும் வழங்கப்படும். உற்சவ கால 21 ஆம் நாள் நிகழ்வுகளின் சிறப்பு நிகழ்வாக, கொழும்பு, தேஜஸ்வராலயா கலைக்கூட மாணவர்கள் வழங்கும் வீணை இசை மற்றும் வாய்ப்பாட்டுக் கச்சேரி நிகழ்வும் இடம்பெறும். (இ-7)

# பஜனை

(பஜனை)

நல்லூர் உற்சவகாலத்தை முன்னிட்டு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நிகழ்வுகள் வரிசையில், நல்லூர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் பஜனை நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. அந்த வகையில், இன்று 21 ஆம் நாள் உற்சவ தினத்தை முன்னிட்டு, அராலி கிழக்கு மலையாளங்காட்டு ஐயனார் குழுவினர் வழங்கும் பஜனை நிகழ்வு இடம்பெறும். (இ-7)

# ஐ.தே.கவுக்குள் நிலவும் நெருக்கடி நிலையே

# கோத்தாவை இலகுவாக வெற்றியடையச் செய்யும்

## சுசில் பிரேமஜெயந்த சுட்டிக்காட்டு

(கடுவெல)

**ஜனாதிபதி வேட்பாளர் குறித்து ஐக்கிய தேசியக் கட்சிக்குள் நெருக்கடி நிலவுகின்றமையால் கோத்தபாய ராஜபக்ஷ கடும் போட்டியில்லாமல் வெற்றியடைவாரென மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேம ஜெயந்த தெரிவித்தார்.**




கடுவெல பகுதியில் நேற்று ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரவிக்கையில், "ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் நிலைமைகள் குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு நன்கு தெரியும்.

ஆகையால் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்குவதா? என்ற விடயத்தில் சரியான முடிவை எடுப்பார்.

அத்துடன் இலங்கையில் கலாசார ஆடை அணிபவரே சுதந்திரக்கட்சி வேட்பாளராக வருவார் என சிலர் கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

முன்னாள் பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்க, ஆரம்பத்தில் ஐரோப்பிய ஆடைகளை அணிந்தார். பின்னர் நாட்டுக்குப் பொருந்தும் வகையில் இடத்திற்கு ஏற்ற வகையில் அவர் ஆடைகளை அணிந்தார்.

எனவே ஆடைகள் அணிவதை வைத்து ஒருவரை மதிப்பிட முடியாது. கல்வி, செயற்பாடு ஆகியவற்றின் அடிப்படையிலேயே ஒருவருடைய திறமையை மதிப்பிட வேண்டும்.

இதேவேளை வரலாற்றில் முதற் தடவையாக ஐக்கிய தேசியக் கட்சியில் ஜனாதிபதித் தேர்தலுக்கு வேட்பாளரை நிறுத்துவதில் பிரச்சினை தோன்றியுள்ளது.

இத்தகைய சூழ்நிலை அக்கட்சியில் தொடர்ந்தும் நீடிக்குமானால் கோத்தபாய கடும் போட்டியில்லாமல் வெற்றியடைய முடியும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பேருந்து நிலையத்திற்கு அருகில் நடத்துநர் அடித்துக் கொலை!

(களனி)

களனி பொலிஸ் பிரிவிலுள்ள பேருந்து நிலையத்திற்கு அருகில் நேற்று அதிகாலை ஒருவர் தாக்கப்பட்டு இரத்தப் போக்கு காயங்களுடன் முல்லேரியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார். உயிரிழந்தவர் களனி பகுதியைச் சேர்ந்த 41 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டார்.

உயிரிழந்தவர் பேருந்து நடத்துநர் எனவும் இவர் பொல்லால் தாக்கப்பட்ட நிலையிலேயே உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை கைது செய்ய, களனி பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# ரணில் மிகப் பெரிய அரசியல் சாணக்கியர்

## ரஞ்சன் கூறுகிறார்





(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மிகப் பெரிய அரசியல் சாணக்கியர் என இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்தார்.

யார் என்ன சத்தங்களைப் போட்டாலும் சத்தமிடும் எவரும் ரணில் விக்கிரமசிங்கவுடன் விவாதத்திற்கு வர மாட்டார்கள்.

ரணில் விக்கிரமசிங்கவுடன் எவரும் நேருக்கு நேர் விவாதம் செய்ய முடியாது எனவும் அவருடன் அரசியல் ரீதியாக எவரும் மோத முடியாது எனவும் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# களியாட்ட விடுதி சுற்றிவளைப்பு பெண்கள் உட்பட 8 பேர் கைது

## ஐஸ், ஹெரோயின், கஞ்சா மீட்பு

(இரத்தினபுரி)

இரத்தினபுரி பகுதியில் பேஸ்புக் நண்பர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட களியாட்ட நிகழ்வு சுற்றிவளைக்கப்பட்டு பெண்கள் மூவர் உட்பட 8 பேர் கைது செய்யப்பட்டதாக இரத்தினபுரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இரத்தினபுரி - ஹிதெலென்ன பகுதி ஹோட்டல் ஒன்றில் நேற்று முன்தினம் சனிக்கிழமை களியாட்ட நிகழ்வு இடம்பெறுவதாக பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய பொலிஸாரும், பொலிஸ் விசேட அதிரடிப்படையினரும் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது இரத்தினபுரியை அண்டிய பகுதிகளைச் சேர்ந்த 8 பேர் கைது செய்யப்பட்டதுடன், இவர்களிடமிருந்து ஐஸ் போதைப் பொருள் , ஹெரோயின் மற்றும் கஞ்சா ஆகிய போதைப் பொருட்களும் மீட்கப்பட்டன.

இந்த களியாட்ட நிகழ்வை ஒழுங்கு செய்ததாக இரத்தினபுரி பகுதியைச் சேர்ந்த தொடர்பாடல் நிலையமொன்றின் உரிமையாளர் ஒருவரும் கைது செய்யப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை இரத்தினபுரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (இ-7)

# உணவுத் துணிக்கைகள் அடைத்ததால் மாணவன் மூச்சுத்திணறி மரணம்!

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் பொறியியல் துறையில் பயின்று வந்த மாணவர் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை மர்மமான முறையில் இறந்து கிடந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். இவரது மரணம் மூச்சுத் திணறல் காரணமாவே இடம்பெற்றதாக மருத்துவ அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

பொறியியல் துறையில் மூன்றாம் வருடத்தில் கற்று வந்த 24 வயதுடைய துர்கேஷ்வரன் கணேஷன் என்ற மாணவரே இவ்வாறு உயிரிந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். இவர் நுவரெலியா பூண்டுலோயா டன்சின் தோட்டத்தின் அக்கரமலை என்னும் பிரிவை பிறப்பிடமாகக் கொண்டவர்.


மர்மமான முறையில் உயிரிழந்த இம்மாணவரின் மரணமானது மூச்சுத் திணறல் காரணமாக இடம்பெற்றுள்ளதாக வைத்திய அறிக்கைகள் தெரிவித்ததனை அடுத்து மாணவரின் சடலம் நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. உணவுத் துணிக்கைகள் சுவாசக் குழாயில் சென்று அடைத்ததால் மூச்சுத் திணறி இவர் உயிரிழந்ததாக அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.இஸட்.எம்.சர்பராஸ் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை ஐந்து மணியளவில் பல்கலைக்கழகத்தின் பொறியியல்துறை விடுதியின் தரைத்தளத்தில் இருக்கும் பகுதியில் இறந்து கிடந்த நிலையில் சக மாணவர்கள் இவரது சடலத்தை மீட்டனர். நிலப்பகுதியில் தலை குப்புற வீழ்ந்து உயிரிழந்த நிலையிலேயே இவரது சடலம் மீட்கப்பட்டதாக சக நண்பர்கள் தெரிவித்தனர்.

இம்மாணவர் இறப்பதற்கு முன்தினம் தமது நண்பர்களுடன் மோட்டார் சைக்கிள் ஒன்றினை செலுத்துவதற்கென கற்றுக் கொண்டிருந்ததாக நண்பர்கள் தெரிவித்தனர்.

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் சனிக்கிழமை பிற்பகல் வேளை வரை இவரது சடலம் வைக்கப்பட்டு பிரேத பரிசோதனையின் பின்னர் அன்றைய தினம் சடலம் உறவினர்களிடம் ஒப் படைக்கப் பட்டது. இம்மாணவரின் மரணம் தொடர்பில் அக்கரைப்பற்று பொலிஸாரும் விசாரணைகளை மேற்கொண்டனர். (இ-7)

# மோட்டார் சைக்கிள் விபத்தில் 20 வயது இளைஞன் உயிரிழப்பு



(தவலந்தென்ன)

கண்டி - நுவரெலியா பிரதான வீதியின் தவலந்தென்ன கெரண்டிஎல்ல பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் 20 வயதுடைய இளைஞன் ஒருவர் உயிரிழந்தார்.

கண்டி நகரிலிருந்து கொத்மலை புரட்டாசி பகுதியை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் குறித்த பகுதியில் வைத்து வேகக் கட்டுப்பாட்டை இழந்து கால்வாய் ஒன்றில் விழுந்து இவ் விபத்து நிகழ்ந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்தது.

நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் இடம்பெற்ற குறித்த விபத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திய 20 வயது இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இவ்வாறு உயிரிழந்தவர் கண்டி கட்டுகஸ்தோட்டை ஜம்புகாபிட்டிய பகுதியைச் சேர்ந்த திலின சம்பத் என அடையாளம் காணப்பட்டார். (இ-7)

# மிளகாய் வேர்முடிச்சு வட்டப்புழுவின் முகாமைத்துவம்

தாவரத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் வட்டப்புழுக்கள் தொடர்பாக இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பில் வேர்முடிச்சு வட்டப்புழுவானது பிரதான பீடையாகக் காணப்படுகின்றது. இவை வெவ்வேறான மரக்கறிப் பயிர்களிலும் பழப்பயிர்களிலும் அலங்காரத் தாவரங்களிலும் பிரதான பீடையாகக் காணப்படுகின்றது. இலங்கையில் மாத்தறை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட வேர்முடிச்சு வட்டப்புழுக்கள் சம்பந்தமான கணக்கெடுப்பில் இரண்டு வகையான வட்டப்புழு இனங்கள் இணங்காணப்பட்டுள்ளன (Meloidogyne incognita, Meloidogyne javanica). 2018 இல் மேற்கொள்ளப்பட்ட புள்ளிவிபரப்பகுப்பாய்வின் மூலம் இலங்கையில் வவுனியா, மன்னார், கிளிநொச்சி, காலி, அநுராதபுரம், அம்பாறை, மட்டக்களப்பு, கொழும்பு, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களிலும் மிளகாய் வேர்முடிச்சு வட்டப்புழு அறிக்கையிடப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக இலங்கையின் வேறுபட்ட பகுதிகளிலும் மிளகாய் பயிர் செய்யப்படும் பகுதிகளில் வேர்முடிச்சு வட்டப்புழுக்கள் உள்ளதாக பூங்காயியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம், கண்ணொருவவில் அறிக்கையிடப்பட்டுள்ளது.

வட்டப்புழுக்களைக் கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த பீடைக் கட்டுப்பாட்டு முறையே மிகச் சிறந்த உத்தியாகும். ஒருங்கிணைந்த பீடைக் கட்டுப்பாட்டின் பிரதான நோக்கம் வட்டப்புழுக்களின் குடித்தொகையை பொருளாதார சேத மட்டத்திற்குக் கீழ் பேணுவதாகும். இதன்போது பயிர்ச் செய்கை முறைகள், பௌதீக மற்றும் பொறிமுறைக் கட்டுப்பாடு, உயிரியல், இரசாயனவியல் கட்டுப்பாடு என்பன பயன்படுத்தப்படும் தந்திரோபாயங்களாகும்.

ஒருங்கிணைந்த பீடைக் கட்டுப்பாட்டின் பிரதான நோக்கம் பூச்சி நாசினிகளின் பாவனையினால் சூழலிற்கும் மனிதனிற்கும் ஏற்படும் பாதிப்பைக் குறைத்து விவசாய உற்பத்திகளின் தரத்தையும் அளவையும் அதிகரிப்பதாகும். IOBC (உயிரியல் கட்டுப்பாட்டிற்கான சர்வதேச நிறுவனம்) வழிகாட்டலின் படி ஒருங்கிணைந்த பீடைக் கட்டுப்பாட்டு உபாயங்களுக்கான தொகுப்பைத் உருவாக்கும் போது பின்வரும் 'அடிப்படைக் கொள்கைகள் உள்ளடக்கியிருக்கப்படல் வேண்டும். அவையாவன தடுத்தல், கண்காணிப்பு, இரசாயனமல்லாத கட்டுப்பாட்டு முறை, இரசாயனக் கட்டுப்பாட்டு முறை, இரசாயனப்பயன்பாட்டிற்கான வரையறை ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

### 1.0 தடுத்தல்

தீவிர நோய், பீடைத் தாக்கத்திற்குள்ளாகும் பயிர்களுக்கு பொருத்தமான பயிரியல் நடைமுறைகளைப் பயன்படுத்துவதால் அப்பயிரானது குறித்த நோய், பீடைத் தாக்கங்களை ஏற்படுத்தும் உயிரிகளால் பாதிக்கப்படாமல் தப்பி வாழக்கூடியதாக இருக்கும்.

### 1.1 மண் உயிர்ப் பல்வகைமையைப் பாதுகாத்தல்

மண்ணானது தாவர ஒட்டுண்ணி வட்டப்புழுக்களின் குடித்தொகைக்கு எதிராகத் தொழிற்படும் உயிரிகளைக் கொண்டது. எனவே அவ் எதிர்ப்பு உயிரிகளின் குடித்தொகையை அதிகரிக்கப் பொருத்தமான மண் சீர்திருத்தச் செயற்பாடுகள், ஏனைய உயிரியல் பௌதீக முறைகள் ஆகியவற்றை மேற்கொள்வதனால் தாவர ஒட்டுண்ணி வட்டப்புழுக்களின் குடித்தொகையைக் குறைக்கலாம். தாவர ஒட்டுண்ணி வட்டப்புழுக்களின் குடித்தொகைக்கு எதிராக தாக்கம் செலுத்தும் எதிர்ப்புடைய பங்கசுக்களாக Arthrobotrys dactyloides, Dactylaria brochopaga, Monacrosporium ellipsosporum,Metarhizium gephyropagum ஆகியவற்றைக் குறிப்பிடலாம். வட்டப்புழுக்களின் குடித்தொகையை குறைப்பதற்காக விவசாயிகள் பின்வரும் பண்ணை நடைமுறைகளைப் பயன்படுத்த வேண்டும்.

குறைந்த அல்லது பூச்சிய உழுதல்,



சேதனப் பசளைப் பாவனை, பயிர்ச் சுழற்சி (மிளகாயுடன் சணல் ஊடுபயிராகப் பயிரிடப்படும்) மூலம் தாவர ஒட்டுண்ணி வட்டப்புழுக்களினை எதிர்க்கும் உயிரிகள் மற்றும் பங்கசுக்களின் குடித்தொகையை மண்ணில் அதிகரிக்கலாம்.

### 1.2 இடத் தெரிவு

புதிய ஒரு பயிர்ச் செய்கையை ஆரம்பிக்க முன்னர் விவசாயிகளுக்கு வட்டப்புழுக்களின் பாதிப்பு தொடர்பான தெளிவான அறிவு தேவை. இடத் தெரிவானது பயிர்செய் நிலத்தில் வட்டப்புழுக்களின் பரவல், பயிர்ச்செய்கை நடைமுறை, பயிரிடப்பட்ட பயிர்களின் வரலாறு என்பவற்றின் மூலம் மேற்கொள்ளப்படும். ஒட்டுண்ணி வட்டப்புழுக்களைச் சரியாக அடையாளம் காண வழமையாக ஆய்வுகூடப் பரிசோதனைகள் தேவை. விவசாயிகள் ஆய்வுகூடப் பரிசோதனைகளை விரிவாக்க அலுவலர்களின் ஊடாக மேற்கொள்ள விவசாயத் திணைக்களமானது இலவசமாக வசதிகளை வழங்கியுள்ளது.

பின்வரும் படிமுறைகளின் மூலம் சிறந்த பரிசோதனை மண் மாதிரியைப் பெற்றுக்கொள்ளலாம்.

- நன்கு வளர்ந்த வேரிற்கு அண்மையில் இருந்து மண் மாதிரிகள் பெறப்பட வேண்டும்.
- மண் ஈரலிப்பாக உள்ள நிலையிலேயே மாதிரியைப் பெற வேண்டும். ஏனெனில் அந் நிலையிலேயே வட்டப்புழுக்கள் நன்கு தொழிற்படும்.
- பயிர் நிலத்தின் சகல பகுதிகளில் இருந்தும் பல மாதிரிகளைப் பெறவும்.
- பின்னர் சகல மாதிரிகளையும் ஒன்றாக நன்கு கலக்கவும்.
- பின் பிளாஸ்டிக் பை ஒன்றில் இட்டு வைக்கவும்.
- பின் பையை பெயரிடவும். அதில் விருந்து வழங்கித் தாவரத்தின் அமைவிடம், திகதி, சேகரித்தவரின் பெயர் ஆகியவற்றைக் குறிப்பிடுக.
- நீர் சேர்க்காது மாதிரிகளைக் கொண்ட பைகளை அதிக வெப்பநிலையில் இருந்து உலராது பாதுகாக்க வேண்டும்.
- இம் மாதிரிகளை அறை வெப்பநிலை ஒரு வாரகாலம் பாதுகாக்கலாம்.

### 1.3 கள ஆரோக்கியம்

பொதுவாக வட்டப்புழுக்கள் தொற்று ஏற்பட்ட மண், நாற்றுக்களின் மூலமே பரவுகின்றன. வட்டப்புழுத் தாக்கம் அற்ற நாற்று மேடைகளில் இருந்து நாற்றுக்களைப் பெற வேண்டும். அதாவது ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள அரச பண்ணைகளில் பெற்றுக் கொள்ளலாம். ஆரோக்கியமான நாற்றுக்களைப் பேண கீழ் வரும் நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

மிளகாய் நாற்றுக்களுக்கான நாற்று மேடைகள் பதிவு செய்யப்பட்டு வட்டப்புழுக்கள் அற்றதாக இருக்க வேண்டும்.

அவை நெருக்கமாகக் கண்காணிக்கப்பட்டு பயிர்ப்பாதுகாப்புச் சேவையினால் அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டும்.

நாற்றுக்களின் வேர்களை நடுவதற்கு முன்னர் நன்கு அவதானித்து அவற்றில் வேர் முடிச்சுக்கள் இல்லையென உறுதிப்படுத்திய பின்னர் நடவும். அவ்வாறு முடிச்சுக்கள் ஏதும் காணப்படின் அதனை அகற்ற வேண்டும்.

பாதிக்கப்பட்ட தாவரம், மண்ணை பயிர் நிலத்தின் ஏனைய பகுதிகளுக்குக் கொண்டு செல்வதைத் தவிர்க்கவும்.

நன்கு கூட்டுப் பசளையிட்ட பின்னர் பண்ணைப் பசளைகளை இடுவதன் மூலம் CRKN வட்டப்புழுக்கள் பண்ணை உபகரணத்தினால் மண்ணுடன் சேர்வதை தடுக்கலாம்.

பாதிக்கப்பட்ட தாவரத்தை பிடுங்கி எரிக்கவும். அவை களைகளில் இனப்பெருக்கம் செய்வதைத் தடுக்க களைக் கட்டுப்பாட்டினை மேற்கொள்ளுதல் வேண்டும்.

### 1.4 பயிர் மீதிகளின் முகாமைத்துவம்

வட்டப்புழுக்கள் அறுவடையின் பின்னர் பெருகுவதை தடுப்பதற்காக வட்டப்புழுத் தாக்கத்திற்குள்ளான தாவரம், வேர்களை அழித்துவிட வேண்டும். எனவே அறுவடையின் பின்னர் மிளகாய்ச் செடிகளைப் பிடுங்கி அவற்றின் வேர்களை சூரிய ஒளி படுமாறு வைத்தல் அல்லது எரித்துவிடல்.

கடுகு, சாமந்தி, சூரியகாந்தி ஆகியவற்றின் பயிர் மீதிகளை அறுவடையின் பின்னர் மண்ணுடன் கலப்பதால் வட்டப்புழுத் தாக்கத்தைக் குறைத்துக் கொள்ளலாம்.


### 1.5 மாற்று விருந்து வழங்கித் தாவரங்களை அகற்றுதல்

சிறந்த களைக் கட்டுப்பாடு இல்லாத போது வட்டப்புழுக்கள் விருந்து வழங்கி களைகளில் தொற்றி பயிர்ச் சுழற்சியைப் பயனற்றதாக்கும். எந்த ஒரு விருந்து வழங்கிக் களையும் விவசாய நிலங்களில் இருத்தல் கூடாது. அவையாவன-மேட்டுக் கோரை, மஞ்சள்கோரை, குதிரைவாற்புல், கொவ்வை, ஊமத்தை.

### 1.6 நடுகைப் பொருட்களைத் தொற்று நீக்கம் செய்தல்

0.2 % வீதம் செறிவுள்ள வேப்பம் எண்ணெய் (Azadiractain indica) அல்லது புங்கம் (Pongamia pinnata) எண்ணெயினால் தொற்று நீக்கம் செய்யப்பட்ட மிளகாய்ப் பயிரில் முடிச்சுக்கள் உருவாதல் குறையும். தொற்று நீக்கம் பின்வருமாறு மேற்கொள்ளப்படும்.

நடுகைக்கு முன்னர் மிளகாய் விதைகள் 0.2 % வீதம் செறிவுள்ள வேப்பம் எண்ணெய்யில் இடப்பட்டு 48 மணித்தியாலங்கள் நிழலில் உலர்த்தி நடப்படும். நடுகைக்கு முன்னர் (25 நாள் வயதுடைய)



நாற்றுக்களின் வேர்ப்பகுதி 0.2 % வீதம் செறிவுள்ள வேப்பம் எண்ணெய் அல்லது புங்கம் எண்ணெயில் 30 நிமிடங்கள் ஊறவிட வேண்டும்.

### 1.7 பயிர்ச் சுழற்சி

பயிர்ச் சுழற்சியின் மூலம் வட்டப்புழுக்களின் எண்ணிக்கை இலகுவில் குறைக்கப்படும். வெற்றிகரமான பயிர்ச் சுழற்சி வட்டப்புழுக்களை குறைப்பதனால் பயிர்கள் போதிய விளைச்சலுடன் அதன் வழமையான போகம் வரை ஆரோக்கியமாக இருக்கும். விருந்து வழங்கித் தாவரம் அல்லாதவற்றுடன் பயிர்ச் சுழற்சி செய்வதன் மூலம் வெற்றிகரமாக வட்டப்புழுக்களைக் கட்டுப்படுத்திக் கொள்ளலாம்.

அவையாவன – திணை, கௌபி, சாமந்தி, நெல், கடுகு, எள், உள்ளி, சோளம், லீக்ஸ், சணல்.

### 1.8 நீர்ப்பாசனம்

வட்டப்புழுக்களைக் கட்டுப்படுத்துவதில் நீர்ப்பாசன நீர் மிக முக்கியமானது. வட்டப்புழு நாசினி, உயிரியல் கட்டுப்பாட்டு முகவர்கள் என்பவற்றை துளி நீர்ப்பாசனத் தொகுதியினூடாக வழங்குவது மிக இலகுவான, பாதுகாப்பான, இலாபகரமான ஒரு முறையாகும். மிளகாய்ப் பயிர்ச் செய்கையாளர்கள் குளத்து நீரினை நீர்ப்பாசனத்திற்காகப் பயன்படுத்தக் கூடாது. ஏனெனில் இந்நீர்ப்பாசன நீருடன் வட்டப்புழுக்கள் கடத்தப்படலாம். மிகவும் அவதானத்துடன் நீர்ப்பாசனம் செய்வதன் மூலம் வட்டப்புழுத் தாக்கத்தைக் குறைத்துக் கொள்ளலாம். நீரில் அதிகளவான வட்டப்புழுக்கள் காணப்பட்டால் பயிரை அவை இலகுவில் பாதிக்கும். மணல் தன்மையான மண்ணின் நீர் பற்றும் தன்மையை அதிகரிப்பதற்காக சேதனப் பசளையிடவும். இதனால் வட்டப்புழுத் தாக்கத்தைக் குறைத்துக் கொள்ளலாம்.

### 1.9 தாவ்ரப் போசணை முகாமைத்துவம்

மிளகாய்ப் பயிர்ச் செய்கையின் வளர்ச்சிக்கும் ஆரோக்கியத்திற்கும் தாவரப் போசணை முகாமைத்துவம் மிக முக்கியமானது. இதனால் தாவர நோயெதிர்ப்பு சக்தி அதிகரிக்கும். பசளைப் பிரயோகத்திற்காக தாவரப் போசணையின் அளவைப் பரிசோதிப்பதற்காக மண் பரிசோதனையை கட்டாயம் மேற்கொள்ள வேண்டும்.

மண் பரிசோதனை மேற்கொள்ள வேண்டிய விவசாயிகள் அது தொடர்பாக அவர்களது விவசாயப் போதனாசிரியர், பிரிவுக்குட்பட்ட விரிவாக்க அலுவலர்களை நாடவும். மண் பரிசோதனைத் தரவுகள் மண்ணில் உள்ள N,P,K அளவு, மண் pH, இலத்திரன் கடத்து திறன், சேதனப் பசளை, பசளைச் சிபாரிசு ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

300kg யூரியாவினை கரும்புச்சக்கை அல்லது வைக்கோலுடன் ஒரு ஹெக்டேயாருக்கு கலந்து விசிறும்போது இது வட்டப்புழு நாசினியைப் போன்று தொழிற்படும்.

pH பெறுமானத்தினைப் பயன்படுத்தி போதியளவு பொசுபரசினை மண்ணில் பேணவும். அது வேர்களினால் வட்டப்புழுக்கள் கவரப்படுவதை தடுக்கும்.

மண்ணில் கல்சியக் குறைபாடு ஏற்பட்டால் விளைச்சலை அதிகரித்து வட்டப்புழுத் தாக்கத்தைக் குறைக்க கல்சியம் காபைட் இனை விசிறவும்.

மண்ணிற்கு சிலிக்கேற் ஊடகத்தை இடுவதனால் Meloidigynes spp இன் தாக்கத்தைக் குறைத்துக் கொள்ளலாம்.

போதியளவு நாக அயனின் மட்டத்தைப் பேணுவதன் மூலமும் வட்டப்புழுக்களைக் குறைத்துக் கொள்ளலாம்.

சேதன மூலகங்களின் C : N விகிதத்தை 20 : 1 இலும் குறைவாக பேண வேண்டும்.

நிலப் பண்படுத்தலின் போது மாட்டெருவினைக் கலப்பதால் வட்டப்புழுக்களின் எண்ணிக்கையைக் குறைத்துக் கொள்ளலாம்.

நன்கு உக்கிய 18 தொன் / ஹெக்டேயர் கோழியெரு அல்லது ஆட்டெருவினை இடுவதன் மூலமும் வட்டப்புழுக்களைக் கட்டுப்படுத்தலாம்.

### 1.10 மண் சீராக்கிகள்

நடுகைக்கு 10 நாட்கள் முன்னர் நன்கு தூளாக்கப்பட்ட கைற்றின் கழிவுப் பொருட்களை (நண்டு ஓடு, இறால் கோது) இனை 0.4 – 0.8 % (W/W)என்ற வீதத்தில் மண்ணுடன் கலந்துவிடவும். ஓயிஸ்டர், மொட்டுக்காளான் அறுவடையின்பின் அதன் வளர்ப்பு ஊடகத்தை நாற்றுமேடையில் நடுகை ஊடகத்துடன் 1 : 1 எனும் விகிதத்தில் கலந்து பயன்படுத்தவும்.

### 2.0 கண்காணிப்பு

நாற்றுப் பருவத்தில் இருந்து தாவரம் நன்கு வளரும் வரை தொடர்ச்சியான கண்காணிப்பு அவசியம். இதற்காக நில மட்டத்திலும் நில மட்டத்திற்குக் கீழும் வேர் முடிச்சு வட்டப்புழு தாக்கத்தின் அறிகுறிகள் தொடர்பாக அவதானமாக இருக்க வேண்டும். இலைகள் மஞ்சள் நிறமாதல், தாவரம் வாடுதல், பருவத்திற்கு முன் பூத்தல், பருவத்திற்கு முன் காய்த்தல், தாவரம் உயரத்தில் குறுகுதல், தாவரத்தைப் பிடுங்கி வேர்ப் பகுதியைக் கழுவி அவதானிக்கும் போது வேர்களில் முடிச்சுக்கள் காணப்படல்.

(18 ஆம் பக்கம் பார்க்கவும்...)

# மிளகாய் வேர்முடிச்சு...

(17 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இலகுவில் வட்டப்புழுத் தாக்கத்திற்குள்ளாகும் தாவரங்கள் சிலவற்றை நட்டு நேரடியாகவே மண்ணில் வட்டப்புழுக்கள் இருப்பதை அறியலாம். உதாரணமாக வெண்டி, தக்காளியை இவ்வாறு நடலாம்.

3.0 இரசாயனமல்லாத கட்டுப்பாட்டு முறை

இது இரசாயன பீடை நாசினிகளின் பாவனையற்ற ஒரு வகைக் கட்டுப்பாட்டு முறையாகும். சூழலிற்கும் மனிதனிற்கும் பாதிப்பற்ற முறையாகும்.

3.1 சூரிய ஒளித்தொற்று நீக்கம்

நாற்றுமேடையில் விதைகளை நடுவதற்கு முன்னர் 4-8 வாரங்களிற்கு ஒளி ஊடுபுகவிடக்கூடிய பொலித்தீனால் நேரடி சூரிய ஒளி படுமாறு மூடி வைத்தல். வெப்பம் ஆழமாக ஊடுருவிச் சென்று வட்டப் புழுக்கள் அழிக்கப்படும். மணல், களித் தன்மையான மண்ணிற்கு இம்முறை பொருத்தமானது.

3.2 சுடுநீர்ப் பரிகரணம்

மிக வினைத்திறனான, இலகுவான முறையாகும். 40-54°C வெப்பநிலையில் வட்டப் புழுக்கள் இறக்கும். சீராக மண், தாவரப் பாகங்களை சுடுநீரினால் வெப்பமாக்கும் போது வட்டப் புழுக்கள் அழியும்.

இது பின்வருமாறு மேற்கொள்ளப்படும். 82 °C வெப்பநிலையிலுள்ள நீரினால் அடியில் துளைகொண்ட பாத்திரத்தைப் பயன்படுத்தி மண்ணை முதலில் நன்கு நனைக்க வேண்டும். பின்னர் 30 நிமிடங்களிற்கு பொலித்தீனால் மூடிவிடவும்.

3.3 எரித்தல்

இலகுவில் கிடைக்கக்கூடிய பொருட்களைக் கொண்டு விதை நடுகைக்கு முன்னர் நாற்று மேடையைத் தொற்று நீக்கம் செய்யப்படும் சகல மரக்கறிப் பயிர்களிற்கான நாற்றுமேடையையும் இம்முறையில் தொற்று நீக்கம் செய்ய விவசாயத் திணைக்களம் சிபாரிசு செய்துள்ளது.

இதற்காக முதலில் நாற்று மேடை நன்கு ஈரலிப்பாக்கப்படும். பின்னர் 3 - 5 சென்ரிமீற்றர் உயரத்திற்கு வைக்கோல் படை இடப்படும். அதன் மேல் உமிப் படை இடப்படும். இவ்வாறு மாறி மாறி உமி, வைக்கோல் படையை 4 படைகளாக வைத்து காற்று வீசும் திசைக்கு எதிர்த் திசையில் எரிக்க வேண்டும். இதனைத்தொடர்ந்து 2-3 நாட்களிற்கு மண்ணை குளிரவிட வேண்டும்.

3.4 உயிரியல் தொற்று நீக்கம்

உயிரியல் முறையில் வட்டப்புழுக்கள் இரசாயன முறையை விட வினைத்திறனாக தாவரப்பகுதிகளைப் பயன்படுத்தி கட்டுப்படுத்தப்படுகின்றது. பயிர் நிலத்தில் கிடைக்கக்கூடிய தாவரங்களை தெரிவு செய்தல். கீழுள்ள தாவரப்பகுதிகளில் பார்த்தீனியம் (Parthenium hysterophorus), வேம்பு (Azagirachtaidica), எருக்கலை (Calotropisprocera) ஏதாவதொன்றை ஒரு ஹெக்டயருக்கு 40 மெற்றிக் தொன் ($4kg/m^2$) என்ற அளவில் 15 நாட்களிற்கு மண்ணை சூரிய ஒளிபடவிட முன்னர் இடுவதன் மூலம் வட்டப் புழுக்களை கட்டுப்படுத்தலாம்.

அல்லது பிறாசிகேசியே குடும்பத்திற்குரிய மரக்கறி இலைக்கழிவுகளை (கோவா, முள்ளங்கி) மண் மேற்பரப்பின் மேல் 5 கிலோகிராம் மண்ணிற்கு ஒரு கிலோர் கிராம் இட்டு மண்ணை பொலித்தீனினால் 15 நாட்கள் மூடி வைக்க வேண்டும்.

3.5 நவீன தொற்று நீக்கம்

விதை நடுகைக்கு முன்னர் நாற்று மேடையை தொற்று நீக்கம் செய்ய மிகச் சிறந்த முறையாகும். முதலில் நாற்று மேடை தயாரிக்கப்பட்டு அதன் மண் நன்கு தூர்வையாக்கப்பட்டு வேரின் ஆழம் (25 சென்ரி மீற்றர்) வரையான அதன் கனவளவு கணிக்கப்படும். பின்னர் 0.428 kg அமோனியம் பைகாபனேற்று, 0.857 kg சுண்ணாம்புக்கலவையை 1000 kg மண்ணிற்கு இடவும். இதன்போது மண்ணின் ஈரலிப்பை 20 சதவீதத்திற்கு 15 நாட்களிற்கு முற்றாக பொலித்தீனினால் மூடி வளியிறுக்கமாகப் பேண வேண்டும்.

3.6. தாவரச்சாறு

தாவரப்பாகங்களைப் பயன்படுத்தி வேர் முடிச்சு வட்டப்புழுக்களை கட்டுப்படுத்துவது குறைந்த செலவுள்ள சூழல் நேயமான முறை ஆகும். எவ்வாறாயினும் அதன் வினைத்திறனை அறிந்து கொள்ள ஆராய்ச்சி நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

வேப்பம் விதைச்சாற்றினை நடுகைக்கு 15 நாட்களிற்கு முன் பயிர் நிலத்திற்கு (250 $kg/1000m^2$) விசிறுவதன் மூலம் வட்டப் புழுக்களை கட்டுப்படுத்தலாம்.

துளசி இலைக்கரைசல் பின்வருமாறு தயாரிக்கப்பட்டு 50 கிராம் துளசி இலைகளை நன்கு அரைத்து 2 - 3 லீற்றர் நீரில் ஒருநாள் ஊறவைத்து பின் அதனை வடித்து அதற்கு சிறிதளவு சவர்க்காரம் சேர்த்து நன்கு விசிறவும்.

தொற்றுதலுக்கான நிலத்திற்கு முருங்கை இலைப்பொடி 800 கிராம் /10 லீற்றர் நீரில் கலந்து விசிறுவதன் மூலம் வட்டப் புழுக்களின் குடித்தொகையை பெருமளவில் குறைத்துக் கொள்ளலாம்.

3.7. உயிரியல் கட்டுப்பாடு

பங்கசுக்கள், பக்றீரியாக்கள் சார்ந்த உற்பத்திகள் சில தனியார் நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்படுகின்றன. சில உற்பத்திகள் இரசாயனங்களிலும் பார்க்க குறைவான தொழிற்பாடுடையன. எனவே ஆய்வுகளின் போது உயிரியல் தன்மை, பயன்படுத்தும் அளவு, வினைத்திறன், உள்நாட்டு மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட உயிரியல் கட்டுப்படுத்திகளின் தாக்கம் போன்றவை தொடர்பாக சரியாக கண்காணிக்க வேண்டும்.

இலங்கை விவசாயிகள் பொதுவாக Trichoderma spp வகைகளை பயிர்களிற்கு பயன்படுத்துகின்றனர். இது சில மண் பங்கசு நோய்களான வெங்காய குமிழ் அழுகல், மிளகாய் கழுத்தழுகல் ஆகிய நோய்களை குறைக்கும்.

ஆனால் Trichoderma harzianum ஐ இடுவதனால் அது மண்ணிலும் வேரிலும் உள்ள வட்டப்புழுக்களின் எண்ணிக்கையை குறைக்கும்.

பயிர் நிலத்திற்கு சேதனப் பசளையை இடுவதன் மூலம் வட்டப்புழு ஒட்டுண்ணிகளின் தொழிற்பாட்டையும் குடித்தொகையையும் அதிகரிக்கலாம். வட்டப்புழு ஒட்டுண்ணிகளாக Collembola., Tardigrades. சிற்றுண்ணிகள் ஆகியவற்றை பொதுவாக குறிப்பிடலாம்.

4.0. இரசாயனக் கட்டுப்பாட்டு முறைகள்

பொதுவாக சகல பயிர்களினதும் வேர் முடிச்சு வட்டப்புழுக்களை கட்டுப்படுத்த காபோபியூரான் மட்டுமே 2014 ஆம் ஆண்டு வரை காணப்பட்டது. விவசாயத் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் படி அபெமக்ரின் 20 % SC மாத்திரமே பீடைநாசினியாக சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. இது தொடுகை வட்டப்புழு நாசினி ஆகும்.

நாற்று நடுவதற்கு முன் (ஒரு நாற்றுக்கு ஐதாக்கப்பட்ட 50 ml) அபெமக்ரின் 20%SC 2500-3750 மில்லிலீற்றர் தொழிற்படு இர்சாயனம் /ஹெக்டயர் என்ற வீதத்தில் நடுகைக் குழிக்கு நனைத்தல் வேண்டும்.

இதனை இட முன்னர் சீரான பரவலுக்கு மண் போதுமான ஈரலிப்பைக் கொண்டிருக்க வேண்டும். இரண்டு வாரங்களிற்கு ஒருமுறை இதனை இட வேண்டும். ஒரு போகத்திற்கு 4 தடவைகள் இதனைப் பயன்படுத்தலாம்.

சி.இராஜேஸ்கண்ணா,
விவசாய ஆராய்ச்சி
உதவிப்பணிப்பாளர்.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1813

### வாணி

அருமையான ஓவியம்... பாராட்டுக்கள்... விவசாயத்தைக் காப்போம்




### விசாகா

இவர்கள் ஏன் இப்படி என்பதைவிட... இவர்கள் இப்படித்தான் என நினைத்துக் கொண்டு கண்டு கொள்ளாமல் செல்வது நல்லது!



### அஸ்வந்த்

மகள்களைப் பெற்ற அப்பாக்களுக்கு மட்டும் தெரியும்... மரண காலத்தில் அவள் தன் தாயாக இருப்பாள் என்று...




### கண்மணி

இப்படி தாங்க போய்க்கிட்டு காலம் போகுது... வேலையே இல்லை கொஞ்சம் போனைப் பார்ப்போம்
ரொம்ப வேலையா இருக்கு கொஞ்சம் போனைப் பார்ப்போம்



### விபுலன்

ஒரு பெண் பாசத்தை பைத்தியம் போல காட்டுவாள்.. ஆனால் அவள் வெறுத்தாள் என்றால் திரும்ப அவள் மனதில் பாசம் வருவது ஒரு கேள்விக்குறியே



### ராதிகா

கத்தரிக்கோலாய் வாழும் இரும்பும் ஒருநாள் வெட்டப்பட்டே வடிவம் பெற்றிருக்கிறது நாம் சந்திக்கும் எல்லாத் துன்பங்களும் நம்மை வடிவமைப்பதற்கே



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# கோத்தாவின் தேர்தல் பணிகளில் ஓய்வுபெற்ற இராணுவத்தினர்

## விலகிச் செல்லும் அரசியல்வாதிகள்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் இருந்து அரசியல்வாதிகள் ஒதுங்க ஆரம்பித்துள்ளதாகவும் கோத்தபாய ராஜபக்ஷ தனக்கு ஆதரவான இராணுவ அதிகாரிகளைத் தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தி வருவதே இதற்குக் காரணம் எனத் தகவல்களில் தெரிய வந்துள்ளது.

கோத்தபாய ராஜபக்ஷ, பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்ட தையடுத்து அதுவரை மகிந்த ராஜபக்ஷ மற்றும் பசில் ராஜபக்ஷவுடன் இணைந்து செயற்பட்ட அரசியல்வாதிகளுக்கு பதிலாக ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளை தனது தேர்தல் பணிகளில் ஈடுபடுத்த தீர்மானித்துள்ளமை ராஜபக்ஷ அணியில் அரசியல் புயலை கிளப்பியுள்ளது.

கோத்தபாய தற்போது நாடு முழுவதும் உள்ள ஓய்வுபெற்ற இராணுவ மற்றும் பொலிஸ் அதிகாரிகளை ஒன்றுதிரட்டி, ஒரு கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கு தலா 40 பேரை அமைப்பு பணிகளில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுத்து வருகிறார்.

இந்தப் பொறுப்பை கோத்தபாய, போர்க்குற்றங்களை எதிர்நோக்கியிருக்கும் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சாகி காலகேவுக்கு வழங்கியுள்ளார்.

காலகே, ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொண்டு, ஓய்வு பெற்ற இராணுவம்மற்றும்பொலிஸ் அதிகாரிகளை கொழும்புக்கு அழைப்பித்து ஒரு நாள் கருத்தரங்கை நடத்தவுள்ளார். 6 ஆயிரம் பேர் இதில் பங்கேற்க உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந் நிலைமை காரணமாக ராஜபக்ஷவினருடன் இணைந்து, பிரதேச அரசியலில் ஈடுபட்டிருந்தவர்கள் கடும் வெறுப்புக்குள்ளாகினர்.

ராஜபக்ஷ ஆட்சியில் கோத்தபாய ராஜபக்ஷ சிவில் அதிகாரியாக கடமையாற்றிய போது, படையினர் மீதே முழு நம்பிக்கை வைத்து செயற்பட்டு வந்தார். வீதிகளைச் செப்பனிடுதல், கற்களை பதித்தல் உட்பட அனைத்துப் பணிகளிலும் இராணுவத்தினரே ஈடுபடுத்தப்பட்டனர். நாமல் ராஜபக்ஷ மற்றும் பசில் ராஜபக்ஷ ஆகியோர் கார்ப் பந்தயங்களை நடத்த மணல் மூட்டைகளை அடுக்கும் பணிகளிலும் இராணுவத்தினர் பயன்படுத்தப்பட்டனர்.

இந் நிலையில், தற்போது வேட்பாளராக களமிறங்கியுள்ள கோத்தபாய தனது தேர்தல் பணிகளுக்கும் இராணுவத்தினரைப் பயன்படுத்தத் திட்டமிட்டிருப்பது அவரது இராணுவ மனநிலையை காண்பிப்பதாகவும் இது அவர் ஜனாதிபதியாக பதவிக்கு வந்தால், இராணுவ ஆட்சி நிர்வாகம் ஏற்படும் என்பதற்கான அறிகுறி என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினர் தெரிவித்துள்ளனர்.

கோத்தபாயவை சுற்றியிருக்கும் இராணுவத்தினர், ஊடகவியலாளர்கள், கோத்தபாயவிடம் கேள்வி கேட்க அனுமதிக்கவில்லை என்பதுடன் கோத்தபாயவும் கேள்விகளுக்கு பதிலளிக்கவில்லை என்பது இராணுவ மனநிலை எந்தளவுக்கு இருக்கின்றது என்பதை வெளிக்காட்டியுள்ளதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.



அதேவேளை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் அண்மையில் இந்தியப் புலனாய்வுப் பிரிவின் அறிக்கை ஒன்று கிடைத்துள்ளது. கோத்தபாய ராஜபக்ஷ சீனா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளிடம் ஊதியம் பெறும் முகவர் எனவும் அவர் எந்த வகையிலும் இந்தியாவின் நண்பராக இருக்க மாட்டார் என தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

கோத்தபாய ராஜபக்ஷ தனக்கு தெரிந்த அனைத்து இந்திய நண்பர்கள் மூலம் பிரதமர் நரேந்திர மோடி மட்டுமல்லாது இந்தியாவின் இரண்டாவது பலமிக்க நபரான இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தேவாலை சந்திக்க சந்தர்ப்பம் கேட்டுள்ளார். எனினும் இருவரும் கோத்தபாயவை சந்திக்க நேரத்தை வழங்கவில்லை எனவும் கூறப்படுகிறது.

ராஜபக்ஷ குடும்பத்தினர் இந்தியாவில் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்ட அரசியல் குடும்பம் என இந்திய இராஜதந்திரிகள் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஜனாதிபதித் தேர்தல் குறித்து இன்னும் பேச்சுவார்த்தைகள் இடம்பெறவில்லை

## தமிழரசுக் கட்சியின் செயலாளர் விளக்கம்

(ஏறாவூர்)

ஜனாதிபதித் தேர்தல் இன்னும் அறிவிக்கப்படவில்லை. இருப்பினும் பொதுஜன பெரமுன தன்னுடைய வேட்பாளரை அறிவித்திருக்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரையில் முதலில் ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட வேண்டும் என தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் துரைராஜசிங்கம் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து உத்தியோகபூர்வ வேட்பாளர்கள் அறிவிக்கப்படுவார்கள். அவர்கள் தங்கள் நிலைப்பாடுகளைத் தெரிவிப்பார்கள். அவர்கள் அழைக்கும் பட்சத்தில் நாங்கள் கலந்துரையாடி எமது மத்திய குழுவினூடாக எமது இறுதித் தீர்மானத்தை அறிவிப்போம்.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் எமது கட்சி சார்ந்து உத்தியோகபூர்வமான பேச்சுவார்த்தைகள் என்று எதுவும் இடம்பெறவில்லை. சாதாரண சந்திப்புக்கள் இடம்பெறுகின்ற போது இது தொடர்பாக அவ்வப்போது உத்தியோகபூர்வமற்ற விதத்தில் பேச்சுக்கள் இடம்பெறுகின்றன. அவற்றை ஊடகங்கள் பேச்சுக்களாகக் கருதுகின்றனவே தவிர கட்சியின் நிலைப்பாட்டில் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இன்னும் எவ்வித பேச்சுவார்த்தைகளும் இடம்பெறவில்லை.

கோத்தபாய தொடர்பாக தமிழ் மக்கள் கருதுகின்ற விடயம் என்பது மிகவும் வெளிப்படையான விடயம். அவர் ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்ட தன் பின்னர் வடக்கு-கிழக்கு பகுதிகளில் பட்டாசு கொளுத்தப்பட்டது என்கின்ற விடயம் கூட அவர்களால் திட்டமிடப்பட்ட வகையிலே மேற்கொள்ளப்பட்டது என்பது தெரியவந்துள்ளது.

அத்தோடு கோத்தபாய தெரிவு செய்யப்பட்டதென்பதும் அவசரத்தில் எடுக்கப்பட்ட முடிவாகவே பார்க்கக்கூடியதாக இருக்கின்றது. இது தொடர்பில் தமிழ்ப் பகுதிகளில் இருந்து வந்த அபிப்பிராயங்களைப் பார்க்கின்ற போது தமிழ்-மக்கள் விமர்சனத்தோடு வைத்திருக்கின்ற சில அரசியல்வாதிகள் தவிர ஏனைய அரசியல்வாதிகள் எல்லோரும் இதற்கு எதிரான நிலைப்பாட்டிலேயே இருக்கின்றார்கள். நாங்களும் அவற்றை அவதானித்துக் கொண்டிருக்கின்றோம்.

அத்தோடு கோத்தபாய ராஜபக்ஷ என்பவர் மீது பல யுத்தக் குற்றச்சாட்டுக்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் சிலர் உட்பட பல்வேறு கொலைகள் தொடர்பிலும் அவர் சம்பந்தப்பட்டதான செய்திகள் உள்ளன. நிதிமோசடி மற்றும் அவன்கார்ட் விவகாரம் போன்றன தொடர்பிலும் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் அவர் மீது உள்ளதாக செய்திகள் உள்ளன.

அத்தோடு அவரின் அடையாள அட்டை, கடவுச்சீட்டு, வாக்காளர் பட்டியல் போன்றன தொடர்பிலான விடயங்களும் அவருக்கு எதிரானதாகவே இருக்கின்றன. உண்மையில் இத்தனை குற்றச்சாட்டுகளும் கொண்ட ஒருவர் ஜனாதிபதி வேட்பாளராக வருகின்றார் என்பது மிகவும் வியப்புக்குரிய விடயம். இது இந்த நாட்டுக்கு ஒரு அழகான விடயமாக இருக்க முடியாது. மக்களின் அபிப்பிராயங்களின் அடிப்படையில் நாங்களும் இவை தொடர்பில் பரிசீலனை செய்துகொண்டிருக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# செய்தித்துளிகள்

## சிறுநீரக நோயாளர்களுக்கான மருத்துவ ஆலோசனைக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கொட்டடி சீனிவாசகம் வீதியிலுள்ள top maths (ரொப் மற்ஸ்) தனியார் கல்வி நிலையத்தின் சிறுநீரக நோயாளர்களுக்கான ஆலோசனை வழங்கல் நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 9 மணிமுதல் முற்பகல் 11 மணி வரை நடைபெறும். (இ-2)

## சு.கவின் கண்டி மாவட்ட தலைவராக ஆளுநர் சரத் ஏக்கநாயக்க நியமனம்



(கொழும்பு)

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் கண்டி மாவட்ட தலைவராக வட மத்திய மாகாண ஆளுநர் சரத் ஏக்கநாயக்க நியமிக்கப்பட்டார். ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடமிருந்து தனது நியமனக் கடிதத்தை அவர் பெற்றுக்கொண்டார். (இ-7)

## திஹாரி பள்ளிவாசலின் மாணவர் விடுதியில் தீ



(நிட்டம்புவ)


நிட்டம்புவ - திஹாரி ஜுனைட் வீதியில் அமைந்துள்ள பள்ளிவாசலின் மேல் மாடியில் மாணவர் விடுதியில் நேற்று அதிகாலை 3 மணியளவில் திடீர் தீப் பரவல் ஏற்பட்டது. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 80 | 60 | 70 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 130 | 130 | 120 | 140 |
| பச்சைமிளகாய் | 200 | 120 | 200 | 140 | 250 |
| தக்காளி | 150 | 140 | 140 | 120 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 100 | 140 | 110 | 120 |
| கோவா | 80 | 70 | 80 | 50 | 100 |
| கரட் | 80 | 130 | 140 | 120 | 160 |
| பூசணி | 60 | 40 | 50 | 40 | 160 |
| புடோல் | 100 | 70 | 80 | 50 | 120 |
| வாழைக்காய் | 160 | 130 | 100 | 110 | 120 |
| சின்ன வெங்காயம் | 80 | 120 | 120 | 90 | 120 |
| பெரிய வெங்காயம் | 120 | 140 | 130 | 120 | 140 |
| பாகற்காய் | 160 | 160 | 140 | 150 | 160 |
| வெண்டிக்காய் | 80 | 50 | 80 | 70 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | 100 | 60 | 120 |
| பயற்றங்காய் | 130 | 160 | 120 | 100 | 120 |
| லீக்ஸ் | 100 | 80 | 80 | 70 | 100 |
| பீற்றூட் | 80 | 60 | 70 | 60 | 80 |
| கறிமிளகாய் | 180 | 120 | 140 | 120 | 150 |
| முருங்கைக்காய் | 60 | 60 | 60 | 70 | 80 |
| போஞ்சி | 120 | 200 | 250 | 100 | 250 |
| கத்தரிதம்புள்ள | 100 | 60 | 80 | 30 | .80 |
| கீரை-1பிடி | 30 | 20 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 300 | 400 | 300 | 300 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30 | 35-40 | 30 | 20-40 |
| இராசவள்ளி | 200 | 200 | 250 | 150 | 260 |
| வெங்காயப்பூ | 180 | 160 | 200 | 100 | 200 |
| முள்ளங்கி | 60 | 50 | 80 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 30 | 30 | 50 | 20 | 30 |
| வல்லாரை | 15 | 50 | 10 | 20 | 20 |
| ஈரப்பலா | 40 | 60 | — | — | 60 |




# மழையே உணவு



கட்டட வேலையை முடித்து விட்டு வேலாயி வீட்டுக்கு வரும்போது இருட்டி விட்டது. வீடு என்றால் வாசல், ஜன்னல், அறைகள் போன்ற அமைப்புகளைக் கொண்ட கட்டடம் என்று நினைத்து விடாதீர்கள். பல வீடுகளின் கட்டடப் பணிகளில் பணியாற்றியுள்ள வேலாயிக்கு வீடு என்பது நடைபாதையில் ஒரு சிறிய இடம்தான்.

சில சமயம், பாதி கட்டப்பட்ட வீட்டில் காவல் காக்கும் பொறுப்பு அவள் குடும்பத்துக்குக் கிடைக்கும். அப்போது மட்டும் வீட்டின் வெளிச் சுவருக்கு அருகே ஆஸ்பெஸ்டாஸ் கூரையாலும் மரத் தடுப்புகளாலும் ஆன ஒரு வீடு அவர்களுக்குக் கிடைக்கும். அவள் குழந்தைகளுக்கும் மழையிலிருந்தும் குளிரிலிருந்தும் பாதுகாப்புக் கிடைக்கும். குழாய்த் தண்ணீர், கழிப்பறைகள் போன்ற "ஆடம்பரங்களையும்" அனுபவிக்கலாம்.

அவளது தற்போதைய வீடு நடைபாதையில்தான் இருந்தது. வேறு சில கூலித் தொழிலாளர்களும் பக்கத்திலேயே குடி இருந்தனர்.

வேலாயியின் கணவன் வடிவேலுவும் கட்டடத் தொழிலாளிதான். ஆனால் அவனுக்கு தினமும் வேலை செய்த அலுப்பு நீங்க "சக்தி பானம்" அருந்த வேண்டும். "ஆண்களுக்கு மட்டும்தான் உடல் அலுப்பு வருமா?" என்று வேலாயிக்குத் தோன்றும். ஆனால் அவள் அப்படிக் கேட்டதில்லை. கேட்டு விட்டு, அடி வாங்கிக்கொண்டு உடல் அலுப்பை மேலும் அதிகமாக்கிக் கொள்ள அவள் தயாராயில்லை!

அவளைப் போன்ற பெண்கள் வேலையை முடித்து விட்டு வீட்டுக்கு வந்து, நீர், விறகு போன்ற சாதனங்களைச் சேகரித்து, சமையல் செய்து அனைவருக்கும் பரிமாறி, மீதம் இருப்பதை உண்டு விட்டுப் பாத்திரங்களை சிறிதளவு நீரில் திறமையாகக் கழுவி வைத்து விட்டுத் தூங்க வேண்டும். உடல் அலுப்பு என்ற ஒன்றைப் பற்றி அவளைப்போன்ற பெண்கள் எப்படிப் பேச முடியும்?

அவள் கணவனின் தினக் கூலி அவன் உடல் அலுப்பைப் போக்கிகொள்ளவே சரியாகி விடும் என்பதால் அவளுடைய கூலியில்தான் குடும்பம் நடக்க வேண்டும்.

வேலாயி வீட்டுக்கு வந்த போது அவளுடைய நான்கு குழந்தைகளில் மூன்று பேர் விளையாடிக்கொண்டிருந்தனர். கடைசிக் குழந்தை கைக்குழந்தை. எப்போதும் அவளிடம்தான் இருக்கும்.

காலையில் குடித்த கஞ்சிக்குப் பிறகு வேறு எதையும் உண்ணாத நிலையிலும் உற்சாகமாக விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகளைப் பார்த்ததும் ஒரு புறம் அவளுக்கு நிம்மதியாக இருந்தாலும், மறுபுறம் ஓவென்று அழலாம் போல் தோன்றியது.

வீட்டில் மளிகைச் சாமான்களின் இருப்பைப் பார்த்த போது வேலாயிக்கு அழுகை வந்து விட்டது. "இந்த அரிசி எல்லோருக்கும் போதாதே!" நடைபாதைவாசி என்பதால் அவர்கள் குடும்பத்துக்கு ரேஷன் கார்டு கிடையாது. ரேஷன் கடையில் திருட்டு அரிசி நாளைக்குத்தான் வாங்க முடியும்.

"என்ன செய்வது? இருப்பதை வைத்துச் சமாளிக்க வேண்டியதுதான்."

காலையில் குழாயடியில் வரிசையில் நின்று பிடித்து வைத்திருந்த ஒரு குடம் நீரில் பசி தீர்த்துக் கொள்வதற்காக அவள் குழந்தைகள் குடித்தது போகப் பாதிக் குடத்துக்கு மேல் மீதி இருந்தது. "நல்ல வேளை தண்ணீராவது இருக்கிறதே. தண்ணீர்தான் கடவுள்!"

சோறு வடித்துக் குழந்தைகளுக்குப் பரிமாறுமுன் சிறிது மோரையும் நிறைய நீரையும் கலந்தாள்.

குழந்தைகள் தங்கள் அலுமினியத் தட்டில் பரிமாறப்பட்ட சோற்றைக் கையால் எடுத்துச் சாப்பிட முடியாமல் அப்படியே உறிஞ்சிக் குடித்தனர். சீக்கிரம் சாப்பிட்டு முடித்து விட்ட உற்சாகத்தில் மறுபடியும் விளையாடப் போய் விட்டனர். தண்ணீரின் துணையால் இப்போது வயிறு நிரம்பி விட்டது. இரவில் பசி எடுக்கும். அப்போது எழுந்து தண்ணீர் குடித்து விட்டுப் படுத்துக் கொண்டு விடுவார்கள்.

கலயத்தில் சோறு கொஞ்சம்தான் மீதி இருந்தது. குடித்து விட்டுத் தாமதமாக வரும்கணவனுக்குக்கண்டிப்பாகச் சோறு வேண்டும். எனவே இருந்த சோற்றைக் கணவனுக்கு வைத்து விட்டு வேலாயி தண்ணீரைக் குடித்துப் பசியைத் தற்காலிகமாகப் போக்கிக் கொண்டாள்.

கைக்குழந்தைக்கு மட்டும் பால் கொடுக்க வேண்டும். பால் வைத்திருந்த பாத்திரத்தைப் பார்த்தாள். பாலும் குறைவாகத்தான் இருந்தது. கொஞ்சம் நீரை ஊற்றினால்தான் ஒரு பாட்டில் வரும். பாலில் சிறிது நீரை ஊற்றிச் சுட வைத்தாள். நல்லவேளை. வீட்டில் கொஞ்சம் சர்க்கரை இருந்தது. சர்க்கரையைக் கொஞ்சம் கூடுதலாகப் போட்டால் நீர்த்த பால் கூட ருசிக்கும் குழந்தைக்கு!

குழந்தையை மடியில் படுக்க வைத்து, பாட்டிலில் இருந்த பாலைக் கொடுத்தாள். மிதமான சூட்டுடனும், மிகையான நீருடனும் இருந்த பாலைக் குழந்தை ரசித்து அருந்தியது. பாட்டில் காலியானதும் திருப்தியாகக் கொஞ்சம் பாலை வாயிலிருந்து வழிய விட்டுத் தாயைப் பார்த்துச் சிரித்தது. அந்தச் சிரிப்பில் வேலாயி தன் அத்தனை வருத்தங்களையும் மறந்தாள்.

**குறள் 12:**

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
• துப்பாய தூஉம் மழை.

**பொருள்:** உண்பவர்களுக்கு உணவுப் பொருட்களை விளைவித்துத் தருவதோடு, அவர்களுக்குத் தானே உணவாகவும் ஆகிறது மழை.

# பழமொழியும் உண்மைக் கருத்தும்

**• அர்ப்பனுக்கு வாழ்வு வந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பான்.**

இது பழமொழி என்று சொல்வதை விட ஒரு விடுகதை என்று சொல்லலாம். மழை பெய்து ஒரே நாள் இரவில், பல இடங்களில் காளான்கள் முளைத்திருக்கும். "நேற்று பெய்த மழையில் இன்று முளைத்த காளான்" என்ற சொல்லாடலைக் கேட்டிருப்போம். ஒருநாள் மழையில் முளைத்த காளான், சீக்கிரம் அழிந்தும் போகும், அதனால்தான் அற்பன் என்ற சொல். கிராமத்துப்பக்கம் அதனை குடைக்காளான் என்று சொல்வார்கள். பார்ப்பதற்கு குடை போலவே இருக்கும். அந்தக் காளானுக்காக சொன்ன விடுகதைதான் இது.

"அர்ப்பணித்து வாழ்பவன் அர்த்த ராத்திரியிலும் கொடை கொடுப்பான்" என்பதுதான் உண்மையான பழமொழி என்று வாதிடுவோரும் உண்டு. இரண்டு விளக்கங்களுமே சரியென்றே தோன்றுகிறது. ஆகையால் நாம் விடுகதை, பழமொழி இரண்டையும் ஏற்றுக்கொள்வோம்.

**• ஆயிரம் பேரை கொன்றவன் அரை வைத்தியன் ஆவான்.**

சித்த வைத்தியம் தொடர்பான பழமொழி இது. சித்த வைத்தியத்தில் வேர்தான் மூலாதாரம். பல வேர்களைப் பற்றி அறிந்து கொண்டால்தான் வைத்தியம் கற்றுக்கொள்ள முடியும். "ஆயிரம் வேரைக் கொன்றவன் அரை வைத்தியன்" என்று இருந்த பழமொழிதான் காலப்போக்கில் மருவி வைத்தியரைக் கொலைகாரர் ஆக்கிவிட்டது. ஒருவேளை ஆங்கில மருத்துவம் படித்து வந்தவர்கள், சித்த மருத்துவத்தை ஒழிப்பதற்காக கிளப்பி விட்ட வதந்தியாக இருக்குமோ? எது எப்படியோ உண்மையில் அது வேர்தான் என்பதை நாம் புரிந்துகொண்டால் சரிதான்.

# பொது அறிவு வினா விடைகள்

• இந்தியாவின் சுவிட்சர்லாந்து?
காஷ்மீர்

• புனித பூமி?
பாலஸ்தீனம்

• அவுஸ்திரேலியாவின் முன் கதவு?
டார்வின் நகரம்

• பண்பாடுகளின் தாய்நகரம்?
பாரிஸ்

• வானளாவிய நகரம்?
நியூயோர்க்

• ஆக்ராவின் அடையாளம்?
தாஜ்மகால்

அவசரமாகத் தவறு செய்வதை விட தாமதமாகச் சரிவரச் செய்வதே மேல் – ஜெபர்சன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## திருவள்ளுவர் சிலையை யாழ்ப்பாணத்தில் நிறுவுங்கள்

வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் அவர்களின் ஏற்பாட்டில் எங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையின் மூத்த பேராசிரியர் அ.சண்முகதாஸ், முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோரின் வழிப்படுத்தலில் திருக்குறள் பெருவிழாக்கள் வடமாகாணம் தழுவியதாக மாவட்டம் தோறும் நடந்து வருவது மகிழ்ச்சியைத் தருகிறது.

ஒரு காலத்தில் தமிழ் மறைக்கழகம் என்ற அமைப்பை நிறுவிய பண்டிதர் கா.பொ. இரத்தினம் அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் திருக்குறள் மாநாட்டை நடத்தி வந்தார்.

தமிழக அறிஞர்களையும் வரவழைத்து நடத்தப்பட்ட திருக்குறள் மாநாடு எங்கள் மண்ணில் திருக்குறளின் பெருமையை, அதன் அவசியத்தை எடுத்தியம்பியது.

திருக்குறள் மாநாட்டை முதன்மைப்படுத்தி இயங்கிய தமிழ் மறைக்கழகம் 23 திருக்குறள் மாநாடுகளை நடத்தியது.

எனினும் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக அப்போது பாராளுமன்ற உறுப்பினராக இருந்த பண்டிதர் கா.பொ. இரத்தினம் அவர்கள் நாட்டைவிட்டு வெளியேற வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டது.

இதன்காரணமாக தமிழ் மறைக்கழகமும் இயங்க முடியாத துர்ப்பாக்கிய நிலை உருவாகிற்று.

இந்த இடைவெளி நீண்டகாலத்தைக் கொண்டதாயினும் தற்போது வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் திருக்குறளுக்குப் பெருவிழா எடுக்க நடவடிக்கை எடுத்தமையும் இதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பூரண ஆதரவு வழங்கியமையும் மன நிறைவைத் தருகின்றது.

இவ்வாறு வட மாகாணத்தில் திருக்குறளுக்குப் பெருவிழா நடைபெறுகின்ற இந்நேரத்தில், வடக்கின் ஆளுநர் அவர்களுக்கு ஒரு செய்தியைச் சொல்லியாக வேண்டும்.

அதாவது யாழ்ப்பாணம் சத்திரத்துச் சந்தியில் (கே.கே.எஸ் வீதியும் ஆஸ்பத்திரி வீதியும் சந்திக்கின்ற இடம்) மிக உயர்ந்த திருவள்ளுவர் சிலை அமைந்திருந்தது.

யாழ்ப்பாணம் சத்திரத்துச் சந்தியில் ஆரம்பித்து ஆஸ்பத்திரி வீதியின் கிழக்குத் திசை வழியாக திருவள்ளுவர், ஔவையார், மகாத்மா காந்தி ஆகியோரின் சிலைகள் அமைக்கப்பட்டன.

இவை எங்கள் தமிழர் வாழ்வியலில் அறத்தின், அகிம்சையின் முக்கியத்துவத்தை சித்திரித்து நின்றது.

ஆனால் சத்திரத்துச்சந்தியில் சமிக்ஞை விளக்குகள் பொருத்தப்பட்டபோது அங்கிருந்த திருவள்ளுவர் சிலை அகற்றப்பட்டது.

அவ்வாறு அகற்றப்பட்ட திருவள்ளுவர் சிலைக்கு என்ன நடந்தது என்பது இன்று வரை தெரியவில்லை.

எனவே வட மாகாணத்தில் திருக்குறளுக்குப் பெருவிழா எடுக்கின்ற மிகப்பெரும் கைங்கரியத்தைச் செய்யும் வடக்கு ஆளுநர்; சத்திரத்துச் சந்தியில் இருந்த திருவள்ளுவர் சிலையை மீண்டும் நிறுவ வேண்டும்.

அவ்விடம் இப்போது சிலை வைப்பதற்கு ஏற்றதல்ல என்றால், யாழ்ப்பாணம் பிரதம தபாலகம் அமைந்துள்ள சுற்றுவட்டச் சந்தியில் திருவள்ளுவர் சிலையை நிறுவ வேண்டும் என்பது நம் தாழ்மையான கோரிக்கை.

# ராஜபக்ச குடும்பத்தினர் ஆட்சிக்கு வருவதற்கு உதவ வேண்டாம்

## மைத்திரியிடம் நேரில் வலியுறுத்திய சந்திரிகா

(கொழும்பு)

சஜித் பிரேமதாச அல்லது ராஜபக்ச குடும்பத்தினர் ஆட்சிக்கு வருவதற்கு துணை போக வேண்டாம் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கேட்டுக் கொண்டதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதியும் முன்னாள் ஜனாதிபதியும் கடந்த 22ம் திகதி இரகசியமாக சந்தித்து பேசியுள்ளனர். இருவருக்குமிடையிலான நீண்ட மனஸ்தாபத்தின் பின்னர் இந்த சந்திப்பு நடந்துள்ளது. கிட்டத்தட்ட ஒரு வருடத்தின் பின்னர் இந்த சந்திப்பு நடந்தது.

சுமார் 20 நிமிடங்கள் மட்டுமே இந்த சந்திப்பு நடந்துள்ளது.

சஜித் அல்லது ராஜபக்ச குடும்பம் ஆட்சிக்கு வருவதற்கு துணை போகாமல் இருந்தால், ஜனாதிபதி பதவியின் பின்னரான காலத்தில் மைத்திரிக்கு தேவையான பாதுகாப்பை வழங்கும் உத்தரவாதத்தை தன்னால் தரமுடியுமென சந்திரிகா குறிப்பிட்டுள்ளார். (3)

## கஞ்சா வைத்திருந்தவருக்கு மன்னார் நீதிமன்றால் அபராதம் விதிப்பு

(மன்னார்)

அனுமதியின்றி சட்டபூர்வமற்ற முறையில் தன் உடைமையில் கஞ்சா என்ற போதைப்பொருளைத் தன்வசம் வைத்திருந்த நபர் ஒருவருக்கு அபராதத் தொகை விதிக்கப்பட்டதுடன் சமுதாய சீர்திருத்த கட்டளை நிகழ்ச்சியிலும் ஈடுபடவேண்டும் என மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டார்.

தலைமன்னார் பகுதியைச் சேர்ந்த ஒரு நபர் சட்டபூர்வமற்ற முறையில் தன் உடைமையில் 1630 மில்லி கிராம் கஞ்சா என்ற போதைப் பொருளை வைத்திருந்ததாக குற்றம் சாட்டி பொலிஸார் மன்னார் நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இவ்வழக்கு மன்னார் நீதவான் நீதிமன்றில் நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது அந்நபர் தனது குற்றத்தை ஏற்றுக் கொண்டார்.

நீதிபதி குற்றவாளிக்கு பத்தாயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன் மூன்று மணித்தியாலங்கள் சமுதாய சீர்திருத்த கட்டளை நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வேண்டும் என்று கட்டளை பிறப்பித்தார்.

அத்துடன் சட்டபூர்வமற்ற முறையில் 410 மில்லி கிராம் கஞ்சா என்ற போதைப் பொருளை தன் உடைமையில் வைத்திருந்த நபர் ஒருவரையும் பொலிஸார் அன்றைய தினம் இதே மன்றில் ஆஜர்படுத்திய போது இவர் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டதுடன் விசாரணைக்காக எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 17 ஆம் திகதி தவணையிடப்பட்டுள்ளதுடன் அன்றைய தினம் கிராம அலுவலகரின் கடிதம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனவும் உத்தரவிட்டார். (3-285)

## வவு.செட்டிகுளத்தில் கோர விபத்து 9 பேர் படுகாயம்

(வவுனியா)

வவுனியா செட்டிகுளம் ஆண்டியாபுளியங்குளம் பகுதியில் நேற்று காலை 7.40 மணியளவில் ஹயஸ் ரக வான் ஒன்று விபத்துக்குள்ளானதில் 9 பேர் படுகாயமடைந்த நிலையில் செட்டிகுளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வத்தளை பகுதியிலிருந்து மடு நோக்கி பயணித்த வான் ஆண்டியா புளியங்குளம் பகுதியில் சாரதியின் கட்டுப்பாட்டையிழந்து வீதியின் அருகேயிருந்த மின்கம்பத்தில் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

இவ் விபத்தில் வானில் 11 பேர் பயணித்த நிலையில் 9 பேர் படுகாயமடைந்து செட்டிகுளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (3.250)

## உதுவன்கந்த பிரதேசத்தில் 10 கிலோகிராம் கஞ்சா மீட்பு

(கொழும்பு)

தலவதுகொட-உதுவன்கந்த பிரதேசத்தில் வைத்து 10 கிலோகிராம் அளவில் கஞ்சா போதைப்பொருள் வைத்திருந்த நபரொருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட குறித்த நபர், வாகனம் திருத்தும் கடையொன்றினை நடத்தி வருபவரென்பது தெரியவந்துள்ளது.

குறித்த கடையில் வைத்தே மேற்படி கஞ்சா வியாபாரம் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

40 வயதான குறித்த நபர், ஏற்கனவே கஞ்சா போதைப் பொருள் கடத்தல் தொடர்பில் கைதுசெய்யப்பட்டு, பின் விடுதலை செய்யப்பட்டவரென்பது குறிப்பிடத்தக்கது. (3)

## மரண தண்டனைக் கைதிகள் மூவர் பூஸாவுக்கு மாற்றம்

(கொழும்பு)

வெலிக்கடை மற்றும் தும்பர ஆகிய சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மரண தண்டனை விதிக்கப்பட்ட சமந்த குமார எனும் வெலே சுதா மற்றும் நவ்பர் எனும் பொட்ட நவுபர் ஆகியோர் உடன் அமுலுக்கு வரும் வகையில் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் பூஸா சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இவர்களுடன் கடந்த வாரம் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட கஞ்சிபான இம்ரானும் பூஸா சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் மூவரும் பொலிஸார் மற்றும் சிறைச்சாலைப் புலனாய்வுத் துறை அதிகாரிகளின் பாதுகாப்புக்கு மத்தியில் மாற்றப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் பந்துல ஜயசிங்க தெரிவித்தார். (ஜ-3)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## உளப்பயிற்சி



பருவமழை பொழிகிறது் ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்தோடுகிறது் வெள்ளம் அதிகமாக இருந்தால் விளைநிலங்களில் பரவிப் பயிர்களை அழித்து விடும். ஆற்றுவெள்ளம் கரைபுரண்டால் ஊர்களிலே பாய்ந்து வீடுகளை மூழ்கடித்துவிடும் மக்கள், மாடுகள், ஆடுகள் இவற்றிற்கும் அழிவைத் தரும்.

அதே ஆற்றை ஒரு அணைக்கட்டு (Dam) கட்டி நீரைத் தேக்கிக் கால்வாய்களை அமைத்து நீர்போக்கைக் கட்டுப்படுத்திக் கொண்டால் என்ன வியத்தகு மாற்றம்! எவ்வளவு நன்மை விளைகிறது! ஆண்டு முழுவதும் வயலுக்குப் பாய்ச்சுவதற்கு நீர் கிடைக்கிறது. குளிக்கவும் அருந்தவும் மக்களுக்குத் தண்ணீர் கிடைக்கிறது. ஆற்றுக்கால் பகுதியிலுள்ள ஊர்களெல்லாம் வளம் பெற்றுச் செல்வம் கொழிக்கிறது.

இவ்வாறே மனிதனுடைய ஆற்றல் எல்லையற்றது. இதனை வேறு எதனோடும் ஒப்பிட்டுக் கணித்து உவமை கூற முடியாது. மனிதனிடம் அடங்கியுள்ள ஆற்றல் அத்தகைய பெருமையுடையது. இயற்கையின் பெருநிதியாகும் அது. அதை உணர்ந்து கட்டுப்படுத்தித் தேக்கி முறையாகச் செலவிட வழி கண்டு விட்டால், வாழ்நாள் முழுவதும் உடல்நலம் காக்கலாம், மனவளம் பெருக்கலாம். வாழ்வில் வெற்றி, மகிழ்ச்சி, இன்பம், அமைதி இவற்றை அடையலாம்.


இவ்வாறு ஒழுங்குபடுத்தப்பட்ட மனிதனுடைய ஆற்றல் அவன் குடும்பத்திற்கும், சமுதாயத்திற்கும் வளம் பெருகும் ஊற்றாக அமையும். மனிதனுடைய இத்தகைய பேராற்றலைக் கட்டுப்படுத்தி ஒழுங்குபடுத்தித் திட்டமிட்ட முறையில் செயற்படுத்திப் பயன் காணவல்ல ஒரு உளப் பயிற்சியையே "தியானம்" என்று கூறுகிறோம்.

# ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக் கிண்ணம்-2019



## சென்றலைட்ஸ் அணி முன்னிலையில்

யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் 2010 ஆம் ஆண்டில் இருந்து தொடர்ந்து 10 வருடங்களாக நடத்தி வரும் யாழ். நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்வில் (RATING) 01.01.2019 இலிருந்து 28.02.2019 வரை நடைபெற்ற 10 போட்டிகளுக்கு வழங்கப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் சென்றலைட்ஸ் அணி 4 போட்டிகளில் பங்குபற்றி 3 போட்டிகளில் வெற்றியும், ஒரு போட்டியில் சமனிலையும் பெற்று 21.99 புள்ளிகளைப் பெற்று முதலாவது இடத்திலும், கே.சி.சி.சி.அணி 4 போட்டிகளில் பங்கு பற்றி 3 போட்டிகளில் வெற்றியும், 1 போட்டியில் தோல்வியும் பெற்று 21.35 புள்ளிகளைப் பெற்று 2 ஆம் இடத்திலும், யூனியன்ஸ் அணி 3 போட்டிகளில் பங்கு பற்றி 1 போட்டியில் வெற்றியும் 2 போட்டிகளில் தோல்வியும் அடைந்து 16.25 புள்ளிகளைப் பெற்று 3 ஆம் இடத்திலும் ஓல்ட்கோல்ஸ் அணி 3 போட்டிகளில் பங்குபற்றி 1 போட்டியில் வெற்றியும், 1 போட்டியில் சமனிலையும், 1 போட்டியில் தோல்வியும் அடைந்து 13.06 புள்ளிகளைப் பெற்று 4 ஆம் இடத்திலும் ஜொலிஸ்ரார் அணி 2 போட்டிகளில் பங்குபற்றி 2 இலும் தோல்வியடைந்து 5.94 புள்ளிகளைப் பெற்று 5 ஆம் இடத்திலும் யாழ். பல்கலைக்கழக அணி 2 போட்டிகளில் பங்கு பற்றி 2 இலும் தோல்வியடைந்து 4.55 புள்ளிகளைப் பெற்று 6 ஆம் இடத்திலும், திருநெல்வேலி சி.சி.அணி 1 போட்டியில் பங்கு பற்றி அப்போட்டியில் வெற்றி பெற்று 4.96 புள்ளிகளைப் பெற்று 7 ஆம் இடத்திலும் உள்ளனர். மேற்கூறப்பட்ட 10 போட்டிகளில் 2018 ஆம் ஆண்டிற்கான யாழ். கிரிக்கெட் லீக் தொடரில் 2 போட்டிகளும் விக்ரம், ராஜன், கங்கு 2019 இற்கான தொடரில் 8 போட்டிகளும் உள்ளடங்கும். (ஜ)



# ஹோலி என்மீது வைத்த நம்பிக்கையை காப்பாற்றினேன்

## ஜடேஜா கூறுகிறார்



இந்திய அணித்தலைவர் விராட்ஹோலி தன்மீது வைத்த நம்பிக்கை சரியானது என்பதை நிரூபித்து விட்டதாக இந்திய அணியின் சகலதுறை வீரர் ரவீந்திர ஜடேஜா தெரிவித்தார்.

மேற்கிந்திய அணிக்கு எதிரான முதல் டெஸ்டில் அரைச்சதம் பெற்று இந்திய அணியின் நிலையை ஸ்திரப்படுத்திய ஜடேஜா தனது இனிங்ஸ் குறித்து மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டார்.

நான் துடுப்பெடுத்தாடிய வேளை இணைப்பாட்டங்களில் கவனம் செலுத்தினேன் என தெரிவித்துள்ள அவர் பின் வரிசை ஆட்டக்காரர்களுடன் எவ்வாறு இணைந்து விளையாடுவது என்பதிலும் கவனம் செலுத்தினேன் என தெரிவித்தார்.

விக்கெட் காப்பாளர் ரிசப் பொண்ட் ஆட்டமிழந்ததை தொடர்ந்து ஆடுகளத்திற்குள் நுழைந்த இசாந் சர்மாவுடன் இணைந்து 60 ஓட்டங்களை ரவீந்திர ஜடேஜா பெற்றமை குறிப்பிடத்தக்கது.

விக்கெட்டை இழக்காமலிருப்பதற்கு கடுமையாகப் போராடுமாறு இசாந்த சர்மாவை கேட்டுக்கொண்டதாக ஜடேஜா தெரிவித்துள்ளார்.

நான் உறுதியான இணைப்பாட்டங்களில் கவனம் செலுத்தினேன். ரிசாப்பந்த் ஆட்டமிழந்த பின்னர் விக்கெட்டை இழக்காமலிருப்பது குறித்து இசாந்த சர்மாவிற்கு ஆலோசனை வழங்கினேன். நாங்கள் ஒவ்வொரு ஓவர்கள் குறித்து மாத்திரம் கவனம் செலுத்தினேன் என ஜடேஜா தெரிவித்துள்ளார்.

அணித்தலைவரின் ஆதரவு உள்ளது என்பது ஒரு வீரரை பொறுத்தவரை மிகச் சிறந்த விடயம் எனவும் ரவீந்திர ஜடேஜா தெரிவித்துள்ளார்.

அணித்தலைவர் உங்கள் மீது நம்பிக்கை வைக்கும் போது நீங்கள் சிறப்பாக உணர் வீர்கள். சிறப்பாக விளையாடியதன் மூலம் அந்த நம்பிக்கையை நான் காப்பாற்றியுள்ளேன் எனவும் ரவீந்திர ஜடேஜா தெரிவித்துள்ளார். (ஜ)

# அனைவரின் கவனத்தையும் ஈர்த்த மே.இ.தீவுகள் வீரர் டெஸ்ட் வரலாற்றில் மிக மோசமான சாதனை

மேற்கிந்திய தீவுகள்-இந்தியா இடையேயான முதல் டெஸ்ட் போட்டியில் மிகுவெல் கமின்ஸ், மிக மோசமான துடுப்பாட்டத்தின் மூலம் அனைவரது கவனத்தையும் தன் பக்கம் ஈர்த்துள்ளார்.

இரு அணிகள் மோதும் முதல் டெஸ்ட் போட்டி Antigua-வில் உள்ள Sir Vivian Richards மைதானத்தில் நடைபெற்று வருகிறது. இதில். முதல் இன்னிங்ஸில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 222 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

இதன்மூலம் 75 ஓட்டங்கள் முன்னிலையில் இந்தியா உள்ளது. மேற்கிந்திய வீரர் கமின்ஸ் 95 நிமிடங்கள் துடுப்பாடி 45 பந்துகளை சந்தித்த கடைசியில் டக் அவுட் ஆகி வெளியேறினார்.

இந்திய சுழற்பந்து வீச்சாளர் ஜடேஜா வீசிய பந்தை, கமின்ஸ் சுழற்ற முயன்ற போது நேராக பவுல்டு ஆகி வெளியேறினார்.

இதன்மூலம் டெஸ்ட் வரலாற்றில் அதிக நேரம் மற்றும் பந்துகள் விளையாடி டக் அவுட் ஆன வீரர்கள் பட்டியலில் கமின்ஸ் இடம்பிடித்துள்ளார்.

எனினும், இந்தப் பட்டியலில் கமின்ஸ் முதலிடத்தைப் பிடிக்க வில்லை.

இதற்கு முன்பாக நியூஸிலாந்தின் ஆலட் என்பவர் 1999 ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவுக்கு எதிராக 101 நிமிடங்கள் விளையாடி 77 பந்துகள் ஆடி ஓட்டம் எடுக்காமல் முடிந்துள்ளார். இவர் தான் முதலிடத்தில் உள்ளார். (ஜ)

# ஜனாதிபதி மைத்திரியை சந்தித்த சர்வதேச கிரிக்கெட் சபைத் தலைவர்



இலங்கைக்கு வருகை தந்திருக்கும் சர்வதேச கிரிகெட் சபையின் தலைவர் ஷஸாங்க் மனோகர் கடந்த 23 ஆம் திகதி பிற்பகல் ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்தார்.

இலங்கை கிரிகெட் துறையின் வளர்ச்சிக்காக அனைத்து ஒத்துழைப்புகளையும் வழங்கத் தயாராக உள்ளதாக அவர் ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டமைக்காக கிரிகெட் சபையின் தலைவருக்கு ஜனாதிபதி நன்றி தெரிவித்ததுடன், கிரிக்கெட் போட்டிகளை அரசியல் தலையீடுகளின்றி முன்னெடுத்துச் செல்வதன் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால, இலங்கை கிரிகெட் நிறுவனத்தின் தலைவர் ஷம்மி சில்வா உள்ளிட்ட அதிகாரிகள் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர். (ஜ)

# இருபது-20 தொடருக்கான இலங்கை அணி அறிவிப்பு

நியூசிலாந்துக்கு எதிரான இருபது-20 தொடருக்கான இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் செப்டெம்பர் முதலாம் திகதி முதல் 3 போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரில் இலங்கை-நியூசிலாந்து அணிகள் விளையாடவுள்ளன. இந்தத் தொடருக்கான இலங்கை அணி அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

அணித்தலைவராக லசித் மலிங்காவும் துணைத் தலைவராக நிரோஷன் டிக்வெல்லவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

15 பேர் கொண்ட இந்த அணியை, இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ அறிவித்துள்ளார். அனுபவ வீரர் ஏஞ்சலோ மத்யூஸின் பெயர் இந்தப் பட்டியலில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அணி விபரம் வருமாறு.

லசித் மலிங்கா (அணித் தலைவர்), நிரோஷன் டிக்வெல்ல (துணைத்தலைவர்), அவிஷ்கா பெர்னாண்டோ, குசால் பெரேரா, தனுஷ்கா குணதிலக, குசால் மெண்டிஸ், ஷெஹன் ஜெயசூர்யா, தசுன் ஷனகா, வனிந்து ஹசரங்க, அகிலா தனஞ் செய, லக்ஷன் சண்டகன், இசுரு உதனா, கசுன் ரஜிதா, லஹிரு குமார, லஹிரு மதுஷன்கா. (ஜ)

## உறுப்பினர்...

கைது செய்யப்பட்டுள்ளதாக கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

மாவனெல்லை, முருதவெல பகுதியில் வீடொன்றில் வைத்து நேற்று அதிகாலை குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் 59 வயதுடைய இஸ்லாம் சமயத்தை கற்பித்து வருபவர் என தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஏப்ரல் 21ஆம் திகதி கொழும்பு, நீர்கொழும்பு, மட்டக்களப்பு பிரதேசங்களில் நடந்த தொடர் பயங்கரவாத குண்டு தாக்குதல்களுக்கு உதவியமை, முஸ்லிம் அடிப்படைவாத அமைப்புகள் இலங்கைக்கு மீண்டும் பயங்கரவாத செயற்பாடுகளை முன்னெடுக்கும் வகையில் மறுசீரமைப்பில் ஈடுபட்டமை, இனங்களுக்கு இடையில் அமைதியின்மையை ஏற்படுத்த உதவியமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் கீழ் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (3)

## மத்திய குழுக்...

அதற்கமைய இன்று திங்கட்கிழமை மாலை 6.00 மணிக்கு ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் ஜனாதிபதி தலைமையில் இந்தக் கூட்டம் இடம்பெறவுள்ளது.

இதன்போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடனான கூட்டணி தொடர்பாக ஆராயப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் நாளை பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இரு தரப்பினரும் இணங்கியுள்ளனர்.

இதற்கமைய சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி அதன் பாராளுமன்ற உறுப்பினர்களான தயாசிறி ஜயசேகர, மகிந்த அமரவீர, திலங்க சுமதிபால மற்றும் முன்னாள் செயலாளர் ரோஹண லக்ஷ்மன் பியதாஸ ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் அதன் தவிசாளரான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் பாராளுமன்ற உறுப்பினர்களான டளஸ் அழகப்பெரும உள்ளிட்டோர் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

## வடக்கு, கிழக்கு...

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் தமது வேட்பாளரை பொதுஜன பெரமுன அறிவித்திருந்தது.

அதைத் தொடர்ந்து, ஜேவிபியும் தமது வேட்பாளரை அறிவித்தது. கட்சியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுகிறார்.

அவரது பிரசார சுவரொட்டிகள் தமிழில் அச்சடிக்கப்பட்டு, வடக்கு, கிழக்கு முழுவதும் ஒட்டப்பட்டு வருகிறது. (3)

## மயங்கி விழுந்த...

வழியில் மரணமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4.00 மணிக்கு இடம்பெற்றது

சாவகச்சேரி கிராம்புவில் பகுதியை சேர்ந்த நரசிங்கராசா பேரின்பராசா என்பவரே மரணமடைந்தவராவார்

சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு பதில் நீதிவான் முன்னிலையில் அறிக்கை தாக்கல் செய்தனர்.

அறிக்கையை பார்வையிட்ட பதில் நீதிவான் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி மூலம் விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார்.

தென்மராட்சி பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி சி.தவமலர் விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (3,10,114)

## கோத்தபாய...

வித்துள்ளார்.

அவ்வாறான புதிய அரசமைப்பின் உள்ளடக்கங்கள் குறித்து எதிர்காலத்திலேயே தீர்மானிக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ள அவர் மாகாண சபைகளின் செயற்பாடுகள் உட்பட அதிகாரப் பகிர்வு குறித்து நாங்கள் கவனம் செலுத்துவோம் என அவர் தெரிவித்துள்ளார்.

அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை நீக்கவேண்டும், அது பிழையானது எனவும் குறிப்பிட்டுள்ள அவர், நாங்கள் பாராளுமன்றத்தினை வலுப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்வோம் எனவும் தெரிவித்துள்ளார்.

கோத்தபாய ராஜபக்ஷ ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றால் தேசிய பாதுகாப்பு மற்றும் துரிதமாக வீழ்ச்சியடைந்து வரும் பொருளாதாரம் குறித்து அதிக கவனத்தை செலுத்துவோம் எனவும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மக்கள் இன்று உயிருக்கு உத்தரவாதமற்ற நிலையில் வாழ்கின்றனர், பயங்கரவாதத்துடன் தொடர்புடைய நபர்கள் கைது செய்யப்படுவதாக நாளாந்தம் செய்திகள் வெளியாகின்றன என மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கோத்தபாய ராஜபக்ஷ மிகவும் திறமையான வேட்பாளர். அவர் தேசிய பாதுகாப்பினை மாத்திரமல்ல சட்டமொழுங்கையும் உறுதி செய்வார். அவர் ஏற்கெனவே தனது ஆளுமையை நிரூபித்துள்ளார் என மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கோத்தபாய ராஜபக்ஷ அமெரிக்க பிரஜாவுரிமையை கைவிட்டுவிட்டார் என என்னால் நிச்சயமாக தெரிவிக்க முடியும், அவர் பிரஜாவுரிமையை கைவிடவில்லை என சிலர் பிரசாரத்தில் ஈடுபடுகின்றனர். அவர்கள் தங்கள் நேரத்தை வீணடிக்கட்டும் என மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (3)

## முச்சக்கரவண்டி...

கொண்டிருந்தபோது கட்டுப்பாட்டையிழந்து அருகிலுள்ள மின்சார கம்பத்துடன் மோதியதிலேயே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் முச்சக்கரவண்டியில் பின்னிருக்கையில் இருந்து பயணம் செய்த மெனிக்பாம் பகுதியை சேர்ந்த சுரேஸ் ஜீவானந்தம் (வயது-29) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தை சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன், அதேபகுதியை சேர்ந்த இருவர் படுகாயமடைந்த நிலையில் செட்டிகுளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சம்பவம் தொடர்பாக செட்டிகுளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (3,250,299)

## மைத்திரிபால...

மற்றும் நேரத்தை வழங்குமாறு ஜனாதிபதியிடம் கோரப்பட்டுள்ளது. ஜனாதிபதி திகதி வழங்கிய பின்னர், அவர் தெரிவுக்குழுவிற்கு அழைத்து விசாரணைக்கு உட்படுத்தப்படுவார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் முன்னிலையாக மாட்டேன் என அண்மையில் கூறியிருந்ததோடு, தெரிவுக்குழுவின் செயற்பாடுகளை நிறுத்துமாறு தொடர்ச்சியாக அவர் வலியுறுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும் ஜனாதிபதி தெரிவுக்குழுவில் முன்னிலையாகாவிட்டாலும் இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படும் என பிரதி சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி இலங்கையில் இடம்பெற்ற தாக்குதல்கள் குறித்து ஆராய்வதற்காக பிரதி சபாநாயகர் தலைமையில் பாராளுமன்றத் தெரிவுக்குழு ஸ்தாபிக்கப்பட்டது.

இந்தக் குழுவில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட 20 இற்கும் மேற்பட்டோர் சாட்சியம் வழங்கியுள்ளனர்.

இதேவேளை, தாக்குதல்கள் குறித்து விசாரணை செய்யும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் ஆயுட் காலம் ஒக்ஸ்ட் 23ஆம் திகதியுடன் நிறைவடையவிருந்த நிலையில், அதன் ஆயுட்காலம் செப்ரெம்பர் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (3)

## இரு பிள்ளை...

இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. தற்கொலை செய்து கொண்ட தந்தை 31 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

13 மற்றும் 7 வயது பிள்ளைகளை நஞ்சூட்டி கொலை செய்து விட்டு தானும் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

பிள்ளைகளின் சடலங்கள் புத்தளம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. தற்கொலை செய்து கொண்ட நபரின் சடலம் மாத்திரம் அவரது வீட்டிலேயே வைக்கப்பட்டுள்ளது.

சம்பவத்திற்கான காரணம் இன்னமும் கண்டுபிடிக்கப்படாத நிலையில் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (3)

## இந்தியா பயண...

தகவலை வெளியிட்டுள்ளார்.

"இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கொழும்பு வந்திருந்தபோது, பல விடயங்கள் குறித்து அவருடன் பேசினோம். எங்களை புதுடில்லிக்கு வருமபடி அவர் கேட்டிருந்தார். விரைவில் அந்த பயணத்தை மேற்கொள்வோம் என நம்புகிறோம்.

தேசிய பிரச்சினை தொடர்பாக அரசு சர்வதேச சமூகத்துக்கு அளித்த உறுதிப்பாட்டை பேணுவதை உறுதி செய்வதில் இந்தியா இன்னும் தீவிரமான பங்கை வகிக்குமாறு, புதுடில்லியிடம் வலியுறுத்துவோம்.

தேசிய பிரச்சினைக்கு இலங்கை அரசு இன்னும் தீர்வை வழங்கவில்லை என்ற உண்மை குறித்து நாங்கள் புதுடில்லியுடன் கலந்துரையாடுவோம்.

இந்த விடயம் தொடர்பான தீர்மானத்தை ஆதரித்த இந்தியாவுக்கும் ஏனைய நாடுகளுக்கும் - பேச்சுகளுக்கு உதவிய நாடுகளுக்கும் - இலங்கை அரசால் பல உறுதிமொழிகள் வழங்கப்பட்டன. ஆனால் இந்த உறுதிமொழிகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை.

இப்போதைய சூழலில், வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு இலங்கை அரசுக்கு சர்வதேச சமூகம் உணர வைக்க வேண்டியது அவசியம்" என்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கூறினார்.

அடுத்து வரும் வாரங்களில் தமது பிரதிநிதிகள் குழுவை புதுடில்லிக்கு அனுப்புவதற்கு கூட்டமைப்பு எதிர்பார்த்துள்ளது. (3)

## கோத்தா ஜனாதி...

எனவே இவ்வாறான யுத்த குற்றவாளிகள் எதிர்காலத்தில் ஆட்சிக்கு வந்தால் சர்வதேசம் தலையிட்டு எமது உறவுகளை மீட்டுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும் குற்றவாளிகள் யாராக இருந்தாலும் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். இந்த நாட்டில் சாதாரண குடிமகனுக்கு ஒரு சட்டமும் இன அழிப்பு குற்றங்களை செய்த வர்களுக்கு இன்னொரு சட்டமும் இலங்கை அரசு செயற்படுத்தி வருகிறது.

இதனால் எந்த ஆட்சிகள் மாறினாலும் காட்சிகள் மாறவில்லை. எனவே சோகங்கள் ஒருபோதும் மறையப் போவதில்லை என்பதற்காகவே சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் ஒகஸ்ட் 30ஆம் திகதி வட கிழக்கில் பாரிய மக்கள் எழுச்சி போராட்டத்திற்கு பொது அமைப்புக்கள், அரசியல் கட்சிகள், வர்த்தக சங்கங்கள், முச்சக்கரவண்டி சங்கங்கள் உள்ளிட்ட அமைப்புகளின் ஆதரவினை எதிர்பார்க்கின்றோம் எனவும் குறிப்பிட்டுள்ளனர். (3)

## இராணுவத்...

மக்கள் அறிவார்கள் என தெரிவித்துள்ளார் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா.

நேற்று கண்டியில் தலதா மாளிகை, மகாநாயக்க தேரர்களை சந்தித்த பின்னர் செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார். (3)

## கடந்த அரசின்...

இன்று எதிர்கொள்கின்றது. ஆனால் தற்போது அனைத்தும் அரசியல் தேவைகளுக்காக மறக்கப்பட்டுள்ளது என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

யக்கலமுல்ல பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (3)

### கொவிசெத

திகதி 2019.08.25
சீட்டிழுப்பு இலக்கம் 2220
ஆங்கில எழுத்து S
வெல்லப்பட்ட இலக்கங்கள் 15 23 28 35
தேசிய லொத்தர் சபை

### நீரோகா

திகதி 2019/08/25
சீட்டிழுப்பு இலக்கம் 0589
லக்கினம் கும்பம்
வெற்றி இலக்கங்கள் 22 23 25 51

### மஹஜன சம்பத

திகதி 2019/08/25
சீட்டிழுப்பு இலக்கம் 3991
ஆங்கில எழுத்து U
வெல்லப்பட்ட இலக்கங்கள் 5 3 0 4 5 7
தேசிய லொத்தர் சபை

### தன நிதானய

திகதி 2019-08-25
சீட்டிழுப்பு இலக்கம் 192
P 1 22 47 52
தேசிய லொத்தர் சபை

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1029
சீட்டிழுப்பு திகதி 25/08/2019 சிவப்பு
X 31 63 67 68
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

### மெகா பவர

P 09 19 34 67
5 2 6 9 1
சீட்டிழுப்பு வாரம் 486
வர்ணம் மஞ்சள்
திகதி 25 ஆகஸ்ட் 2019 ஞாயிறு
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ.137,383,423/-
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

### அத கோடிபதி

சீட்டிழுப்பு இல: 711 வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2019.08.25
வீசேட இலக்கம் 4314
வெற்றி இலக்கங்கள் 34 43 51 62
ஆங்கில எழுத்து L
தொலைபேசி: 0112 333 546-47

### ராசி அதிர்ஷ்டம்

திகதி 25.08.2019 வெற்றி வாரம் 2597 வர்ணம் ஊதா
வெற்றி இலக்கங்கள் 20 26 36 56 சிம்மம்
ரூ.500 பரிசுக்காக 7680
ரூ.100 பரிசுக்காக 703
டபல் சான்ஸ் விசேட இல.
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

# சுயாதீன ஆணைக்குழுவை அமைக்குமாறு பேராயர் கேட்பது நியாயமானது - கோத்தபாய

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் ஆராய்வதற்கு சுயாதீன ஆணைக் குழுவொன்றை அமைக்குமாறு கொழும்பு பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்ஜித் ஆண்டகையால்விடுக்கப்பட்ட கோரிக்கை நியாயமானது என ஸ்ரீலங்கா பொது ஜன முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்று வெளியிட்ட அறிக்கையிலேயே அவர் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

கொழும்பு பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்ஜித் ஆண்டகையின் இந்தக் கோரிக்கையை, நாம் ஆட்சிப்பீடத்துக்கு வந்தவுடன் நிறைவேற்றவுள்ளோம்.

அதுமாத்திரமன்றி, இலங்கையிலுள்ள அனைத்து இன மக்களும் பயங்கரவாதம் மற்றும் இனவாதம் இன்றியும், நாட்டுக்குள் அச்சம் மற்றும் சந்தேகம் இன்றியும் சுதந்திரமாக வாழ்வதற்கான உரிமையை எமது ஆட்சியில் பெற்றுக்கொடுப்போம்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்தில் உயிரிழந்த மற்றும் காயமடைந்தவர்களின் கோரிக்கைகள் இதுவரை நிறைவேற்றப்படாமையை அடுத்து, கொழும்பு பேராயருக்கு ஏற்பட்டுள்ள சிரம நிலைமையை நான் புரிந்துகொள்கின்றேன்.

பாதிக்கப்பட்ட கத்தோலிக்க மக்களுக்கு மாத்திரமன்றி, நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்காகவுமே பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்ஜித் ஆண்டகை இந்தக் கோரிக்கையை அரசிடம் விடுத்துள்ளார்.

இவ்வாறான ஒரு சம்பவம் இனி வரும் காலங்களிலும் இடம்பெறாதிருக்கும் வகையில் நடவடிக்கை எடுக்குமாறும் அவர் கோரியுள்ளார். (3)


## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கி நின்று வேலை செய்வதற்கு முன் அனுபவம் உள்ள 45 வயது கடந்த பெண் தேவை. சம்பளம் நேரில் பேசலாம்.

தொடர்பு - 077 788 5175 / 077 908 4950 (C-7378)

## Visa Consultancy Service

சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும்.
(Tourist Visa, Visit Visa, Sponsor Visa, Student Visa, Work Visa)

NALTC 134, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி 070 375 0002 (C-7108)

## துரித தபால்கள் பொதிகள் சேவை

11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு UK - 600/= Germaney - 700/= France - 700/=

திருமுருகன் கொம்நெற்
321, K.K.S.Road, Jaffna.
கிளை : திருநெல்வேலி, நெல்லியடி. 0777 554 528 (C-7109)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (004)

## CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை



உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள். (C-7345)

விசேட விலைக்கழிவு

CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062, 077 6655413

## Inner Circle வேலைவாய்ப்பு

**AFIER A/L' S**
**BUILD YOUR CAREER WITH US!**

நீங்கள் 18 - 26 வயதிற்குட்பட்ட இலக்கினை நோக்கி செயற்படும் திறனும் சிறந்த தொடர்பாடல் திறனும் உடையவரெனில் தொடர்பு கொள்க.

முகாமையாளர்களை பயிற்றுவிப்பதில் 10 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம் உள்ளதால் உங்களையும் அதே பாதையில் வழி நடத்திச் செல்வோம். (005)

**சலுகைகள்**

- பயிற்சிக்காலத்தின் போது 13,500/= அடிப்படைச் சம்பளத்துடன் 40,000/= வரை உயர் ஊதியமொன்றினை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு. (EPF, ETF)
- இலவசக் காப்புறுதி • போக்குவரத்துவசதி • வெளிநாட்டு சுற்றுப்பயணங்கள் • தொழில்சார்ந்த ஆலோசனைகள் மற்றும் கல்வி வாய்ப்புக்கள் • கையடக்கத் தொலைபேசி சலுகைகள்.

தொடர்புகளுக்கு : 076 770 7759, 077 999 4807

## மாலை நேர வகுப்புக்கள்

கணக்காளர் சேவை
புதிய பிரிவு ஆரம்பம் திங்கள், செவ்வாய், புதன், வியாழன் 5.00 - 7.00

SLAS
திங்கள், செவ்வாய், புதன், வியாழன் 5.00 - 7.00

076 688 3394

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ் ஆஸ்பத்திரி வீதியில் பஸ்நிலையத்திலிருந்து 100 மீற்றர் தூரத்தில்) (C-7377)

## யாழ் புத்தகத்திருவிழா

யாழுப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில்
ஆகஸ்ட் 27 முதல் செப்டம்பர் 1 வரை

ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கான புத்தகங்கள், சிறுவர் கதைகள், வழிகாட்டி நூல்கள் உட்பட அனைத்து விதமான புத்தகங்களையும் விஷேட விலைக் கழிவில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

எமது காட்சிக்கூடம் இலக்கம் 9

யுனிலங்காஸ் பப்ளிக்கேஷன்
342, Trust Complex, செட்டியார் தெரு
Colombo - 11 - T.P - 077 6258778 (C-7366)

## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



UK - 550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி - 650 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
இத்தாலி- 700 /=Kg (நிபந்தனைகளுக்குட்பட்டது) (C-7319)

DELIVERY IN 3-5 DAYS

0768226240 V2 TRAVELS

• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • கொடிகாமம் • வல்வெட்டித்துறை • பருத்தித்துறை • மானிப்பாய் • திருகோணமலை • சாவகச்சேரி • சுன்னாகம் • மருதங்கேணி

## V2 TRAVELS



வெளிநாடுகளிலிருந்து வருவோருக்கு இலங்கை வீசா நீடிப்பு யாழ்ப்பாணத்திலேயே செய்து கொடுக்கப்படும்.

**VISA EXTENSION**
FOR FOREIGN PASSPORT
(வீசா எக்ஸ்ரென்சன்)

0768227499 (C-7320)

• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • சாவகச்சேரி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை



## தூரிகையில் மகளிருக்கான புதிய பயிற்சி நெறிகள்

**02.09.2019** திங்கள் காலை 10 மணி முதல் ஆரம்பமாகின்றன



1. உடையமைத்தல் பயிற்சி– 4 மாதம்
2. கேக் தயாரித்தலும் ஐசிங்அலங்கரிப்பும் –3 மாதம்
3. மகளிர் ஒப்பனை முறைகள் –3 மாதம்
4. ஃபேஷியல் – முகப் பராமரிப்பு முறைகள்
5. கூந்தல் தொடர்பான பயிற்சிகள் – 3 மாதம்
6. உடைகளில் வர்ண அலங்காரமிடல் ( Fabric Painting )
7. துணிஅச்சிடல் (Textile Printing ) 1மாதம்
8. ஓவியக்கலைப் பயிற்சி– Art (வரைதலும் வர்ணம் தீட்டுதலும்)

- பயிற்சிகளை பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்
- தூரஇடத்து பயிலுநர்களுக்குத் தேவையான வசதிகள் செய்து தரப்படும்
- கட்டணங்களை இலகுவாக 3 /4 தவணைகளில் செலுத்தலாம்
- ஏதாவது 3 பயிற்சிகளில் கலந்து கொள்வோர்க்கு 6ம் 7ம் பயிற்சிகள் இலவசம்! விரும்பியவர்கள் கலந்து கொள்ளலாம்
- தையல் பயிற்சியில் கலந்துகொள்வோர்க்கு fabric Painting பயிற்சி கட்டணமின்றி பயிற்றுவிக்கப்படும்
- சான்றிதழ், பதிவுக்கட்டணம் என மறைமுக கட்டணங்கள் எவையும் இல்லை

பயிற்சிகளில் கலந்துகொள்ள விரும்புவோர் உடன் பெயர்ப் பதிவுகளை மேற்கொண்டு மேற்படி சலுகைகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்

## தூரிகை நுண்கலை வளாகம்

யாழ் வீதி, நாவலர் மடம், நெல்லியடி / மத்திய கல்லூரி வீதி, நெல்லியடி
விசாரணைகளுக்கு 0775259954 / 0779143171 (C-7376)

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை.
- கடலுணவு, இறைச்சி, எண்ணை வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள்,
- பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

## அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3536

நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576 | சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.08.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.